بسم الله الرحمن الرحيم

❝

மார்க்கத்திலிருந்து
நூஹூக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும், இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)

❞


☛ முத்தலாக் சட்டத்திற்கு எதிராக அணிதிரளும் முஸ்லிம் பெண்கள் - 6
☛ முத்தலாக் விவகாரத்தில் நீதிமன்றம் சென்ற ஒரு பெண்ணின் உண்மைக் கதை! - 7
☛ அல்லாஹ்வின் சட்டத்தை மட்டுமே ஏற்போம் மனிதச் சட்டங்களை ஏற்க மாட்டோம் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா அறைகூவல் - 12
☛ அலாவுத்தீன் கில்ஜியின் பொருளாதார சீர்திருத்தங்கள் - 16
☛ நீதித்துறையின் சிப்பாய் கலகம் - 21
☛ எல்லாம் திப்புசுல்தான் - 28
☛ திப்புவால் பலன்பெற்ற சிருங்கேரி மடம்! - 34
☛ நாடாளுமன்றத்தின் மீது நடந்த முதல் தாக்குதல்? - 36
☛ காமராசரைக் கொலை செய்ய முயன்ற கா(லி)விகள் - 40
☛ 19 ஆண்டுகளுக்கு பின் தீவிரவாத வழக்கிலிருந்து விடுதலை - 42
☛ அன்பகம் தாவா நிகழ்ச்சி - 44
☛ சென்னையில் டீஸ்டா செட்டல்வாட் - 46
☛ சென்னையில் தலீத் தலைவர் ஜிக்னேஷ் மிவானி - 49
☛ சவார்க்கரின் மன்னிப்பு கோரிய கடிதங்கள் - 51
☛ தொடரும் இந்துத்துவாவின் பயங்கரவாதம்... - 54
☛ செய்திக் கதம்பம் - 56
☛ மாற்றத்தை நோக்கி - 58
☛ இஸ்லாமிய வங்கி முறை - 60
☛ பொங்கல் விழாவில் பங்கேற்க வந்த தலித் மக்கள் மீது அராஜகத் தாக்குதல் - 63



பிப்ரவரி-2018 ஜமாதுல்ஆகிர்-1439

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# பெற்றோரைப் பேணுங்கள்

இன்றைய நாட்களில் ஆட்சியிலிருக்கும் பாசிஸ்டுகள், நாட்டில் பயங்கர கலவரங்களை நடத்தி வருகின்றார்கள்.

எங்கும் பிண காடுகள். இவர்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களில், பெண்கள், பெண் குழந்தைகள் இவர்கள் தினமும் கற்பழிக்கப்படுகிறார்கள். ஹரியான என்ற மாநிலத்தில் இவர்களின் ஆட்சியில் ஜனவரி திங்களில் மட்டும் 5 கற்பழிப்புகள் நடந்திருக்கின்றன. அதேபோல் மராட்டிய மாநிலத்திலும், உத்திரப் பிரதேச மாநிலத் திலும் இந்தக் கற்பழிப்புகள், கொலைகள் தொடர்கின்றன.

உத்திரப்பிரதேசத்தில் ஏறத்தாழ 250 குழந்தைகள் அரசு மருத்துவ மனை யிலேயே மரணித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பிராண வாயு - ஆக்ஸிஜன்-ஐ பெற்றுத் தருவதில் பாசிச பரிவாரத்தின் முதல்வர் யோகி ஆதியானந்த் செய்த ஊழல்களால்.

அறிஞர்களையும், எழுத்துப் போராளி களையும், கொலை செய்ய சனாஸ்தன் சாஸ்தா என்ற மற்றொரு பரிவார கொலைக் கும்பல்.

அதேபோல், பண மதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி. ஆகியவற்றால் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டவர்கள் நாளும் பெருகி வருகின்றனர். இன்றளவும் நின்றபாடில்லை.

உத்திரப் பிரதேச மாநிலத்தில் 12 மணி நேரத்திற்கு ஒரு என்கவுண்டர் கொலை, இந்தக் கொலையைச் செய்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் சன்மானம்.

மோடி ஆட்சி ஏற்றபிறகு பசுவின் பெயரால் இதுவரை 240 பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதாவது மூன்று நாளைக்கு ஒரு கொலை எனக் கொலை படலங்கள் தொடருகின்றன.

மொத்தத்தில் எங்கும் மரணத்தின் ஓலம். இதுவெல்லாம் போதாதென்று வயோதிகர்கள் செய்து கொள்ளும் தற்கொலைகள், நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

அதில் வயதான, வசதியான கணவனும் மனைவியும் இரண்டு பேர் செய்து கொண்ட தற்கொலை, நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிற்று.

அவர்களுக்கு எல்லா வசதிகளும் இருக் கின்றன. மழலைச் செல்வங்களும் உண்டு.

அவர்கள் ஆளாகி வெளிநாட்டில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். கை நிறைய சம்பாதிக்கின்றார்கள்.

இந்த வயோதிக பெற்றோர்களுக்கும் வசதியும், வாய்ப்பும் உண்டு. பிள்ளைகள் சம்பாத்தியத்தில்தான் வாழ்ந்திட வேண் டும் என்ற நிலை இல்லை. அந்தக் குழந்தை களும், பெற்றோர்களுக்கு, எதையும் தர மாட்டேன் எனச் சொல்லிட வில்லை. ஆனாலும் இந்தப் பெற்றோர்கள் வாழ்க்கை யில் விரக்தியடைந்து விட்டார்கள்.

காரணம் தங்களுக்கு பக்கத்திலிருந்து அன்பு செலுத்தவும், அரவணைக்கவும் தங்கள் பாசத்திற்குரிய பிள்ளைகள் பக்கத் தில் இல்லை. எல்லாமிருந்தும் எதுவுமற்ற நிலை.

தங்கள் இறுதிச் செலவுக்காகும் பணத்தை எடுத்து தயாராக வைத்துவிட்டு தற்கொலை செய்து கொள்கின்றார்கள். தங்கள் பிணங்களை காண்பவர்கள் இறுதி செலவுக்கு பணத்தை எங்கிருந்து எடுக்கலாம் என்பதை தெளிவாக எழுதி வைத்துவிட்டு சென்று விடுகின்றார்கள்.

இப்படியொரு நிலை சமுதாயத்தில் தலையெடுத்து தழைத்து வருகின்றது.

இந்த உலக வாழ்க்கை பணம், பவிசு, நோகாத வாழ்க்கை போகாத சுகம் இவற்றிற்கு அப்பாற்பட்டது என்பதை இதுபோன்ற தற்கொலைகள் சுட்டிக் காட்டுகின்றன.

இவை நாம் பணத்தைச் சம்பாதிப் பதைத்தான் கொள்கையாகக் கொள்கின் றோம். சம்பாதிப்பதிலேயே வாழ்க்கை யைத் செலவிடுகின்றோம். வாழ்க்கையை சம்பாதிக்க வில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

இதனால் இறைவன் தன் திருத்தூதர் களை அனுப்பி நமது குடும்ப வாழ்க்கையை நெறி படுத்தினான். அதில் பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் செய்திட வேண்டிய கடமைகளைப் போல், குழந்தைகள் பெற்றோர்களுக்கு நிறைவேற்றிட வேண்டிய கடமைகளையும் சுட்டிக் காட்டினான், அவற்றை இப்படி நெறிப் படுத்தினான். குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமும், அன்பாய் இருந்திட பணித்தான்.

இறைவன் கூறுகின்றான்

**அவனையன்றி வேறு எவரையும்
நீர் வணங்கலாகாது என்றும்,
பெற்றோருக்கு நன்மை செய்ய
வேண்டும் என்றும் உம்முடைய
இறைவன் விதித்திருக்கின்றான்.
அவ்விருவரில் ஒருவரோ அல்லது
அவர்கள் இருவருமோ உம்மிடத்தில்
முதுமை அடைந்துவிட்டால்,
அவர்களை "சீ" எனச் சொல்ல
வேண்டாம். அவ்விருவரையும்
விரட்ட வேண்டாம் இன்னும்
அவ்விருவரிடமும் (கனிவான)
(அன்பான) கண்ணியமான
பேச்சையே பேசுங்கள்.**

**இன்னும் இரக்கம் கொண்டு,
பணிவு எனும் இறக்கையை
அவ்விருவருக்காகவும்
நீர் தாழ்த்துவீராக.
மேலும் என் இறைவனே!
நான் சிறு பிள்ளையாக இருந்தபோது
என்னைப் பரிவோடு அவ்விருவரும்
வளர்த்ததைப்போல், நீயும்
அவ்விருவர்களுக்கும்
கிருபை செய்வாயாக என்றும்
கூறி பிரார்த்திப்பீராக!**

**பெற்றோரை நடத்துவதைப் பற்றி
உங்களுடைய உள்ளங்களிலிருப்பதை
உங்களுடைய இறைவனே நன்கறிவான்.**

*அல்குர்ஆன் (17:23-25)*

மேலும் பார்க்க திருக்குர்ஆன் வசனங்கள் - *2:83, 2:215, 4:36, 4:135, 31:14,15, 14:41, 42:23* நபிமொழி விளக்கம் ஒன்று கூறுகின்றது.

தாய் தந்தையர் முதியோர்களாகவும், பலவீனர்களாகவும் அருகில் பிள்ளைகள் இருந்து உதவி செய்ய வேண்டிய தேவை யுடையோர்களாகவும் இருக்கும்போது அவர்களுடனிருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்வது ( ஹிஜ்ரத் செய்வது போன்ற இலட்சியப் பயணங்களைவிட) சிறந்தது.

- அறிவிப்பாளர் அப்துல்லாஹ் இப்னு அம்ர். ஆதாரம் அல்அதபுல் முஃப்ரக்.

# முத்தலாக் சட்டத்திற்கு எதிராக அணிதிரளும் முஸ்லிம் பெண்கள்

அட்டைப்பட செய்தி




## படத்தில் அவர்கள் வைத்திருக்கும் பதாகைகளில் இடம் பெற்றிருக்கும் முழக்கங்கள்

1. பா.ஜ.க.-வின் முத்தலாக் சட்டம் வகுப்புவாத அடிப்படையில் மக்களைப் பிளப்பதை இலக்காகக் கொண்டது.
2. பா.ஜ.க.-வின் முத்தலாக் சட்டம் முஸ்லிம் பெண்களின் நல்வாழ்வுக்கு எதிரானது.
3. பா.ஜ.க.-வின் முத்தலாக் சட்டம் தேர்தலில் ஓட்டு வங்கிகளை உருவாக்கும் சட்டம்
4. பா.ஜ.க.-வின் முத்தலாக் சட்டம் அரசியல் சாசனத்திற்கு எதினராது.

முஸ்லிம் பெண்கள் மோடி அரசை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் எந்த முஸ்லிம் பெண்ணும் முத்தலாக் சட்டத்தை ஏற்கவில்லை. இதையே பல இந்துப் பெண்களும் சொல்கின்றார்கள். நாம் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக தயாரித்த ஆவணப் படம் ஒன்றில் இது தெளிவானது. ●

# முத்தலாக் சட்டத்தை எதிர்த்து மஜீலிசுன் நிஷா நடத்திய அரங்கக் கூட்டம்




கடந்த 20-01-2018 அன்று மாலை 6.45 மணியளவில் மேட்டுப்பாளையத்தில் மஜீலிசுன் நிஷா என்கிற பெண்கள் இயக்கத்தின் சார்பாக மோடியின் முத்தலாக் சட்டத்தை எதிர்க்கும் அரங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மோடியின் முத்தலாக் சட்டம் முஸ்லிம் பெண்களின் வாழ்வுக்கு எதிரானது என்றும், அந்தச் சட்டத்தை எதிர்ப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




# முத்தலாக் விவகாரத்தில் நீதிமன்றம் சென்ற ஒரு பெண்ணின் உண்மைக் கதை!

முஸ்லிம்களை வேரோடும், வேரடி மண்ணோடும் கிள்ளியெடுத்திட துடிப்பவர்கள் இந்துத்துவவாதிகள். இவர்கள் ஷரீஅத் சட்டங்களில் தலையிட சில முஸ்லிம் பெண்களை முன்னே நிறுத்தி வருகின்றார்கள்.

இதில் "முத்தலாக்" விஷயத்தில் சங்கப்பரி வாரத்தின் கைப்பாவையாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர் நமது இஷ்ரத் ஜஹான் (Ishrath Jehan) என்ற பெண்மணி.

இந்தப் பெண்மணிக்கு நடந்த துரோகம் என்ன? அதனை சீர் செய்து அந்தப் பெண்மணி சங்கப்பரிவாரத்தின் கைப்பாவையாகப் பயன் படுத்துவதைத் தடுத்திட முடியுமா? என்ற வினாவை முன் வைத்து சில முஸ்லிம்களும் மனித உரிமைகளில் ஆர்வமுடையவர்களும் ஒரு கள ஆய்வை - உண்மையை அறிந்திடும் நோக்கில் மேற்கொண்டார்கள். அவர்கள் கண்டறிந்தவற்றை ஓர் ஆய்வறிக்கையாக தந்துள்ளார்கள் அதனை தருகின்றோம்.

இஷ்ரத் ஜஹானின் இப்போதைய கோலங்கள் ஐந்து வருடங்களுக்கு முன்னால் தொடங்கியது. இந்த மங்கை நல்லாள் ஒரு டெய்லரின் மகள். இவருடைய சொந்த கிராமம் பீகாரின் நவாதா மாவட்டத்திலுள்ள பக்ரிபாவா கிராமம். இவள் அங்கே மெட்ரிகுலேஷன் என்ற பத்தாம் வகுப்பு வரை படித்தவள்.

இவளுக்கும் முர்தஸா என்பவருக்கும் 2001 ஆம் ஆண்டு திருமணமானது. இவர் அவ்ரங் காபாத் மாவட்டத்திலுள்ள "உச்சித்பிகா" என்ற கிராமத்தைச் சார்ந்தவர்.

முர்தஸா தன் மனைவி இஷ்ரத் ஜஹானுடன் மூன்று ஆண்டுகள் தன் சொந்தக் கிராமத்திலேயே வாழ்ந்து வந்தார். பின்னர் தன் சகோதரன் முஸ்தபா அன்சாரி என்பவருடன் வாழ்ந்திட சென்றுவிட்டார். முஸ்தபா அன்சாரி அவரது மனைவியுடன் கல்கத்தாவில் ஓர் அடுக்கு மாடிக் குடியிருப்பில் வாழ்ந்து வந்தார். முஸ்தபா அன்சாரி கல்கத்தாவில் ஒரு பள்ளிக்கூடத்தில் வாத்தியார் வேலை பார்த்து வந்தார்.

இரு சகோதரர்களும் இணைந்து தாங்கள் வாழ்ந்து வந்த அடுக்குமாடி குடியிருப்பை விலைக்கு வாங்கினார்கள். அதிலேயே கூட்டுக் குடும்பமும் நடத்தி வந்தார்கள். இப்போது முர்தஸாவுக்கு துபாயில் ஒரு வேலை கிடைத்தது. அவன் துபாய்க்குப் போய்விட்டான்.

இந்நிலையில் இஷ்ரத் ஜஹான் அதே

குடியிருப்பிலிருந்த அஃப்ரஜில் (ராஜூ) என்பவருடன் 2013-ஆம் ஆண்டு வாக்கில் ஓர் உறவை வளர்த்துக் கொண்டாள். முர்தஸா துபாயில் இருந்தபோது இஷ்ரத் ஜஹான் இந்த நபருடன் வெளியே போய் விடுவாள். நீண்ட நேரங்கள் கழித்தே வீட்டுக்கு வருவார். இதனை அவர்களுடைய மூத்த மகள் கவனித்துக் கொண்டே இருந்தாள்.

தன் தாயாரை அழைத்துச்செல்லும், அந்த நபர் யாரும் இல்லாத நேரத்தில் இவர்களின் வீட்டுக்கு வந்தார். இதனால் சினமுற்ற மூத்த மகள் தாயாரைக் கண்டிக்கத் தொடங்கினாள். தன் மகளை மிரட்டினாள் இஷ்ரத் ஜஹான்.

அத்தோடு அந்த நபர் தங்களுடைய சிறிய தந்தை என்றும், அவர் வந்து போவதை குடும்பத்தில் பேசினால் எல்லோரையும் அழித்து விடுவதாக கொலை மிரட்டல் விட்டார் இஷ்ரத். இதை அவர்களுடைய மூத்த மகள் வேறொரு விதத்தில் துபாயில் இருந்த தன் தந்தையிடம் சொன்னாள். அது நாம் கல்கத்தாவின் அடுக்கு மாடிக் குடியிருப்பில் இருக்க வேண்டாம். நமது கிராமத்திற்குப் போய் விடுவோம் எனக் கூறினாள். தந்தை உடனேயே இந்தியா வர வேண்டும் என்றாள். முர்தஸாவும் இந்தியா வந்தார்.

ஆனால் தொடர்ந்து மகள் கிராமத்திற்குச் சென்றே ஆக வேண்டும் என்பதை வலியுறுத்தினாள். இதனால் முர்தஸா மகளிடம், ஏன் கிராமத்திற்குச் செல்ல வேண்டும் என அடம் பிடிக்கின்றாய் எனக் கேட்டார். அதற்கு மகள் உண்மையைச் சொல்லி விட்டாள். உண்மையை அறிந்த இஷ்ரத் ஜஹானின் கணவன் முர்தஸா நிலை குலைந்தான்.

தான் வெளிநாட்டில் உதிரம் சிந்தி உழைத்து அனுப்பிய பணம். இஷ்ரத் - இன்னொருவன் இவர்களின் உல்லாச வாழ்வுக்குப் பயன்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து துடித்தான்.

அவன் விபரீதமான முடிவுகளை எடுப்பதற்கு முன்னால், அவன் குடும்பத்தினர் தலையிட்டு அவனையும், மனைவி இஷ்ரத் ஜஹானையும், குழந்தைகளையும் சொந்த கிராமத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டார்கள். அங்கே ஊர் கூடி இஷ்ரத் ஜஹானை கண்டித்தது. இனியாவது இருக்கும் நான்கு பிள்ளைகளுக்காக வாழு வெளி தொடர்புகளை அறுத்துக்கொள் எனக் கூறி அவளுடைய வாழ்க்கையை மீட்டுக் கொடுத்துள்ளார்கள்.

முர்தஸா மீண்டும் துபாய் சென்று விட்டார். ஆனால் இஷ்ரத் ஜஹான் தன்னைத் திருத்திக்கொள்ள வில்லை. மீண்டும் குழந்தைகளை கிராமத்திலேயே விட்டு விட்டு கல்கத்தா காதலன், எனச் சுற்றத் தொடங்கி விட்டாள். அவளுடைய ஆண்கள் தொடர்பு வட்டாரங்கள் விரிவடைந்தன.

எப்போதும் வீட்டிலிருந்திட வேண்டிய பெண், எப்போதாவது வீட்டிற்கு வருவாள் என்ற நிலை. அதிர்ச்சியான இவளுடைய போக்குகளைக் கேள்விப்படும் போதெல்லாம் துபாயிலிருந்து சொந்த கிராமம் நோக்கி விரைந்திடுவார் முர்தஸா.

கிராமத்து வாழ்க்கை பிடிக்கவில்லை, கல்கத்தா செல்ல வேண்டும் என்றாள். மீண்டும் கல்கத்தா பயணம். இப்படியொரு முறை 2014 ஆம் ஆண்டில் முர்தஸா வீடு வந்தபோது பெரிய கலவரமாகி அடிதடி என்றாகி விட்டது.

இஷ்ரத் ஜஹான் ஹவ்ரா காவல் நிலையம் சென்றாள் 24-10-2014-இல் ஒரு புகாரை பதிவு செய்தான். அது வழக்காகவும் ஆனது. வழக்கு எண். 1085-2014 Under IPC 498 (A) முர்தசா சிறைப் பிடிக்கப்பட்டார். ஒரு மாதம் சிறையில் வாடினார். அவருடைய குடும்பத்தினர் அவளை "இஷ்ரத் ஜஹானை" "தலாக்" கொடுத்துவிட்டு புது வாழ்க்கையொன்றை தொடங்கச் சொன்னார்கள். அதனை முர்தஸா ஒத்துக்கொள்ளாததால் முர்தஸா விவகாரத்திலிருந்து குடும்பத்தவர்கள் ஒதுங்கி விட்டார்கள். சிறையிலிருந்த அவனை யாரும் பிணையில் எடுக்க முயற்சி செய்யவில்லை.

ஆனால் இஷ்ரத் ஜஹான் ஒருநாள் ஒரு வழக்கறிஞர் சில ஆண்கள் ஆகியோருடன் வந்தாள். முர்தஸாவின் பிணைக்கான ஏற்பாடுகளை செய்தாள். பிணைக்காக நீதிமன்றம் எடுத்துக் கொண்ட கால அவகாசத்திற்குப் பின் முர்தஸா பிணையில் வந்தார். மீண்டும் இஷ்ரத் ஜஹானுடன் கல்கத்தா (ஹவ்ரா) வாழ்க்கையைத் தொடங்கினார்.

மூன்று வாரங்களுக்குப் பின் காணாமற் போய்விட்டாள் இஷ்ரத். வழக்கத்திற்கு மாறாக இப்போது ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு போனாள். அந்தக் கடிதத்தில்

**"என்னை மன்னித்துவிடு,
எனக்கு நன்றாகத் தெரியும்
நானொரு குற்றவாளி. யாரையாவது
திருமணம் செய்துகொள்,
என் குழந்தைகளைக் கவனிக்க.
என்னை விவாகரத்துச் செய்யும்,
கடிதம் ஒன்றை தயார் செய். நான்
வந்து கையெழுத்தப் போட்டுத்
தருகின்றேன். என்னுடைய
தவறுகளுக்காக
எனது குழந்தைகளைத்
தண்டித்து விடாதே!"**

இதைத் தொடர்ந்து "முர்தஸா" கல்கத்தாவின் கோலாபாரி காவல் நிலையத்தில் (Man Missing) ஆளைக் காணவில்லை என ஒரு புகாரைக் கொடுத்தார்கள். ஆனால் இரண்டு நாட்களில் அவள் மீண்டும் வந்தாள்.

இதேபோல் காணாமற் போவது வழக்கமாக்கிக் கொண்ட இஷ்ரத் ஜஹான் ஒரு கட்டத்தில் தன் மூத்த மகளையும், கடைசி மகனையும் அழைத்துக் கொண்டு கல்கத்தா அடுக்குமாடி குடியிருப்புக்குப் போய்விட்டாள். அவளது கணவன் முர்தஸா போகவில்லை. அவருடைய அண்ணன் விடுப்பில் கிராமத்திற்கு வந்து விட்டார்.

(ஹவ்ரா வீட்டில்) அவளது காதலன் அஃப்ரஜில் (ராஜு) வந்து 5 நாட்கள் தங்கி இருக்கின்றான். 6-வது நாள் குழந்தைகளை அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டாள். குழந்தைகள் கூப்பாடு போட அக்கம் பக்கத்தி லுள்ளவர்கள் முர்தஸாவுக்கு தகவல் சொல்லி இருக்கின்றார்கள். அவன் வந்து காவல் நிலை யத்தில் மீண்டும் ஆளைக் காணவில்லை என்று புகார் கொடுக்க, அதை காவல் நிலையம் ஏற்க மறுத்ததால், உயர் அதிகாரிகளிடம் கொடுத்தான். ஆனால் இஷ்ரத் முதல்நிலை நீதிபதியின் நீதி மன்றத்தில், தன் கணவன் தன்னை அடித்துத் துன்புறுத்திய தாகவும், இரண்டு லட்சம் ரூபாய் வரதட்சணைக் கேட்டுக் கொடுமைப்படுத்திய தாகவும், ஓர் அபிடவிட்-ஐ தாக்கல் செய்தாள். இதில் முர்தஸாவின் மொத்தக் குடும்பத்தின ரையும் எதிரியாகக் காட்டி இருந்தாள்.

நீதிமன்றம் இந்த அபிடவிட்-ஐ அறிக்கையை வழக்காக எடுத்துக்கொண்டு விசாரித்தது. - வழக்கு எண். 721/2015, ஆனால் வழக்கு 18-3-2017-இல் தள்ளுபடி செய்யப்பட்டது.

பின்னர் 28-12-2015 அன்று கணவனின் சகோதரன் முஸ்தபா அன்சாரி மீது ஓர் வழக்கைப் பதிவு செய்தாள். அதில் முஸ்தபா அன்சாரி அவளை அடித்ததாகவும், பாலியல் ரீதியாக அவளை துன்புறுத்தியதாகவும் குறிப்பிட்டிருந் தார். FIR No. 1533 Section 341/343/354,506 இவற்றிற்கெல்லாம் இந்துத்துவா வாதிகளே அவளுக்குத் துணை நின்றார்கள்.



இதனிடையே முர்தஸா தன் குழந்தைகளைப் பராமரிக்க ஓர் ஆயாவை சம்பளத்திற்கு நியமித்தான். அந்த ஆயா ஓராண்டு மட்டுமே நீடித்தாள். பின்னர் குழந்தைகளை அப்படியே விட்டுவிட்டு போய்விட்டாள். உடனேயே முர்தஸா துபாயிலிருந்து திரும்பி வந்தான்.

தன் குழந்தைகளுக்கு சில துணிமணிகளை வாங்கித் தந்து, கிராமத்திற்கு அழைத்து வந்தான். அவன் மீது குழந்தைகளைக் கடத்திச் சென்ற வழக்கொன்றைதயார்செய்தாள்இஷ்ரத்ஜஹான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கின்றது.

### இரண்டாவது திருமணம்

அதன்பின் காணாமற் போய்விட்டாள் இஷ்ரத் ஜஹான். அதனால் குழந்தைகள் கவனிப் பாரற்றுப் போயின. முர்தஸா ஒரு விதவையைத் திருமணம் செய்துகொள்ள பேசி திருமணத்திற்கு தயாரானான்.

திருமணத்திற்கு முந்தைய நாள் இஷ்ரத் ஜஹான் தன்னுடைய ஆட்களுடனும், காவல் துறையிடனும் வந்து நின்றாள், திருமணத்தைத் தடுத்துவிட்டாள்.

### முத்தலாக்

இப்போது இஷ்ரத் ஜஹான் 2015 ஆம் ஆண்டே தன்னை, முத்தலாக் சொல்லி விலக்கி விட்டதாகவும், அதாவது துபாயில் இருந்த படியே மூன்று தலாக்-ஐயும் ஒரே நேரத்தில் தொலைபேசியில் சொன்னதாகவும் ஒரு புரளியைக் கிளப்பினாள்.

முர்தஸாவிடம் நீ எப்போதாவது அவளைத் தலாக் விட்டாயா எனக் கேட்டால் நான் எந்த தலாக்கையும் சொல்லிடவே இல்லை. நான் அத்தனை தவறுகளுக்குப் பின்னரும் சேர்ந்து வாழவே விரும்பினேன், என் பிள்ளைகளுக் காக, என்றார்.

அதேபோல் இன்னொரு கேள்வியையும், அவர் தரப்பில் கேட்டார். அவள் என் மீது எத்தனையோ புகார்களையும் - நேரடியான வழக்குகளையும் 2015-க்குப் பின்னரும் தொடுத் துள்ளாள். அதில் எங்கேயும் நான் முத்தலாக் கொடுத்ததாகவோ, தலாக் கொடுத்ததாகவோ இல்லை என்றார். ஆனால் நீதிமன்றங்கள் அவள் சொன்னதை ஒத்துக் கொண்டது.

இப்போது அவள் உயர்நீதிமன்றத்தில் சொல்வது புதிய கதை. எந்த ஆதாரமுமில்லாத ஒன்று. இதையெல்லாம் ஏன் நீங்கள் மீடியாக் களிடம், ஊடகங்களிடம் சொல்லவில்லை என முர்தஸாவிடம் கேட்டபோது,

எல்லா ஊடகங்களும், அவளைத்தான் பெரிதுபடுத்துகின்றன. ஆனால் என்னிடம் யாரும் பேசவில்லை. ஒன்றிரண்டு பேர் என்னிடம் எல்லாக் கதைகளையும் கேட்டார்கள். ஆனால் அவற்றை வெளியிடவே இல்லை என்றார்.

### முத்தலாக் விவகாரத்தில் ஊடகங்களின் துரோகம்

எல்லா ஊடகங்களும், முஸ்லிம்களை இழித்துப் பேசிடவும், இஸ்லாத்தையும், முஸ்லிம் களையும் மக்கள் மன்றத்தில் குறைத்துக் காட்டிடவும் வாய்ப்புகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைப்போல் இந்த முத்தலாக் விவகாரத்தில் நடந்துகொண்டன. செய்திகள் அனைத்தும் ஒரு தலைப்பட்சமாகவே வெளி வந்துக் கொண்டிருந்தன.

இஷ்ரத் ஜஹான், ஷயாரா பானு போன்ற பெண்களைப் பூதகரமாக மக்கள் மன்றத்தில் காட்டிய ஊடகங்கள், அவர்கள் கணவன் மார்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்பதை நாசுக்காகக் கூட சுட்டிக்காட்டிட வில்லை.

இவர்களின் கணவன்மார்கள் பட்டக் கஷ்டங்களை இதேபோல் - இவர்களைக் காட்டு வதைப்போல் மக்கள் மன்றத்தில் காட்டி இருந்தால் மொத்த விவகாரமும் வேறுபக்கம் திரும்பி இருக்கும். இந்தியாவை போன்ற நாடுகளில் முத்தலாக் முறைதான் குடும்பங்கள் நிலைகுலையாமல் இருக்க இருக்கும் ஒரே வழி என்பதை மக்கள் புரிந்திருப்பார்கள்.

ஒரு செய்தியை வெளியிடும்போது அதன் எல்லாப் பகுதிகளையும் வெளியிட வேண்டும் என்பது இதழியலின் - ஊடகங்களின் அடிப் படைக் கோட்பாடு, ஒழுக்கம். இந்த ஒழுக்கத் தைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரிய வில்லை. குறிப்பாக முஸ்லிம்களின் விவகாரங்கள் வரும்போது ஊடகங்கள் இதில் எந்த ஒழுக்க மாண்புகளைப் பற்றியும் கவலைப்படவில்லை என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள். அதில் முர்தஸாவின் விவகாரமும் (அதாவது இஷ்ரத் ஜஹானின் கணவன்) ஒன்று.

அவரைப் பேட்டி எடுத்தவர்கள் யாரும், அந்தப் பேட்டிகளை வெளியிடவே இல்லை.

### இஷ்ரத் ஜஹானின் பேட்டி

எல்லா ஊடகங்களும், இஷ்ரத் ஜஹானை பேட்டி எடுப்பதில் ஆர்வம் காட்டின. அவளுடைய பேட்டியை நான் முந்தி, நீ முந்தி என வெளியிட்டன. ஆனால் Front Line என்ற ஆங்கில மாதமிருமுறை இதழ், இஷ்ரத் ஜஹானிடம், நீங்கள் இன்னொரு ஆணோடு



இஸ்லாமிய சமுதாய அமைப்பில், அந்தந்த ஜமாஅத்களிடம் தெரிவிக்க வேண்டும். எந்த ஜமாஅத்தும் இஷ்ரத் ஜஹானின் கணவர் முர்தஸா முத்தலாக்-ஐ யாரிடம் சொன்னதாகச் சொல்லவில்லை.

ஊடகங்கள் ஏன் இஷ்ரத் ஜஹானின் கணவரின் பேட்டிகளை வெளியிடவில்லை?

**பாரதீய ஜனதா கட்சியில் இஷ்ரத் ஜஹான்**

Front Line: பிராண்ட் லைன் என்ற ஆங்கில பத்திரிகைக்குத் தந்தப் பேட்டியில் தன்னைத் தேடி பல ஆண்கள், பல மாதங்களாக வந்து போகின்றார்கள் என்றும், அவர்கள் வாயிலாகத் தான் நான் 2018, ஜனவரி 1ஆம் நாள் பாரதீய ஜனதா கட்சியில் இணைந்தேன் எனக் கூறியுள்ளார்.

அத்தோடு பாரதீய ஜனதா கட்சியிலிருந்து கொண்டு முஸ்லிம் பெண்களைக் காப்பாற்றப் போகின்றேன் என புருடா விடுகின்றாள்.

**முஸ்லிம்கள் மீண்டும் சீண்டப்படுவார்கள்**

உண்மையில் பாரதீய ஜனதா கட்சி முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் தொடர்ந்து தாக்கிட இந்தப் பெண்மணியைப் பயன்படுத்தலாம். இதற்காக இந்தப் பெண்மணியிடம் பின்வரும் விவகாரங்களை ஒப்படைத்திருக்கின்றார்கள்.

1) பலதார மணம் – அதற்கு எதிராக இயக்கம்.

2) சதாரண விவாகரத்து விவகாரம்

3) மூன்று தலாக்குகளை முறையாகச் சொல்லி முடிந்தபின் அந்த பெண்ணும், ஆணும் மீண்டும் சேர்ந்திட விரும்பினால், அதில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை கேள்விக் குறியாக்குவது.

இவை அல்லாமல் இன்னும் பலவற்றை பாரதீய முஸ்லிம் மகிளா என்ற அமைப்புத் திட்டமிட்டிருக்கின்றது. இதுபோன்றவற்றை உள்ளடக்கிய ஓர் மனுவை மோடி அரசிடம் தந்திருக்கின்றது. இனி உச்ச நீதிமன்றத்திடம் கொடுக்க விருக்கின்றது. பாசிஸ்ட்டுகள் விரும்பும் விதத்தில், தீர்ப்புகளைத் தந்திட உச்ச நீதிமன்றம் தயாராக இருக்கின்றது.

தொடர்பு வைத்திருந்ததால்தான், உங்கள் கணவன் உங்களைத் தலாக் விட்டாராம் எனக் கேட்டிருக்கின்றார்கள்.

இதற்கு இஷ்ரத் ஜஹான், "நான் இன்னொரு ஆணோடு இருந்தேன் என்பது என் கணவருக்கு எப்படித் தெரியும், அவர் துபாயில் அல்லவா இருந்தார். அவர் எப்படி நான் இன்னொருவரோடு இருந்தேன் என்பதற்கு சாட்சியாக முடியும். அவர் தொலைபேசியில் தான் தலாக் சொன்னார்" என பதில் சொன்னாள். Front Line (February 2, 2018)

அதாவது, தான் இன்னொரு ஆணோடு இருந்த விவகாரத்திற்குப் பெற்ற மகளே சாட்சி சொல்லி இருக்கின்றார்கள். நாங்கள் தாயரோடு வாழ மாட்டோம் என குழந்தைகள் அடம் பிடிக்கின்றன. இத்தனையும் போதாதாம், கட்டிய கணவன் மனைவியின் கள்ளக் காதலை கண்ணால் பார்த்திட வேண்டுமாம்.

**பத்திரிகையாளர்கள் இஷ்ரத் ஜஹானிடம் கேட்காத கேள்விகள்**

சும்மா இருந்த இஷ்ரத் ஜஹானையா கணவன் தலாக் விட்டார்?

இஷ்ரத் ஜஹானின் கணவன் நான் எந்தத் தலாக்கையும் சொல்லவில்லை என்கின்றார். இதற்கு திருமணம் செய்து வைத்த ஜமாஅத்திலிருந்து அத்தனை பேரும் சாட்சி. அப்படி இருக்க முத்தலாக்-ஐ போனில் சொன்னார் என்பதற்கு யார் சாட்சி? என்ன ஆதாரம்?

உச்ச நீதிமன்றம் எப்படி சாட்சியமில்லாத இருந்த விவகாரத்தை ஒத்துக் கொண்டது?

எந்தத் தலாக்கையும் மனைவியிடம் மட்டும் சொன்னால்போதும் என்ற நிலை இல்லை.

- MGM




# அல்லாஹ்வின் சட்டத்தை மட்டுமே ஏற்க மாட்டோம் தமிழ்நாடு

கடந்த *28.12.2017* அன்று மத்திய அரசு பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவை தாக்கல் செய்துள்ளது.அந்த மசோதாவின் பெயர் "முஸ்லிம் பெண்கள் திருமண உரிமை பாதுகாப்பு மசோதா *2017*" (The Muslim Women (Protection of Rights on Marriage) Bill 2017) என்பதாகும்.

'முஸ்லிம் ஆண்கள் தம் மனைவியை ஒரே நேரத்தில் முத்தலாக் சொல்லி திருமண உறவை முறித்து விடுவதால் முஸ்லிம் பெண்களின் திருமண வாழ்வு பாதுகாப்பானதாக இல்லையாம், எனவே அதை பாதுகாக்க இந்த சட்டம் உதவுமாம்' என்று மோடி அரசு சொல்கிறது.

இப்படி ஒரு சட்டம் கொண்டு வர இப்போது என்ன தேவை ஏற்பட்டது? என்று கேட்டால், மூன்று முஸ்லிம் பெண்கள் முத்தலாக்கின் மூலம் தாம் பாதிக்கப்பட்டிருப்பதாக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். அவர்களின் வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றம் முத்தலாக்கை தடை செய்யும் சட்டத்தை கொண்டுவரும் படி எங்களுக்கு உத்தரவிட்டுள்ளது அதனால்தான் நாங்கள் இச்சட்டத்தை கொண்டு வந்தோம் என்கிறது மத்திய அரசு.

**மத்திய அரசின் பித்தலாட்டமும் உண்மையும்**

*2014* ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் மோடியை பிரதமராக முன் வைத்து பாரதிய ஜனதா வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொது சிவில் சட்டம் கொண்டு வருவோம் என்று அன்றே அறிவித்துவிட்டது.

இது, அந்த முஸ்லிம் பெண்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்காவிட்டாலும் இப்படி ஒரு சட்டத்தை (பொதுச் சிவில் சட்டத்தின் முன்னோட்டமாக) கொண்டு வரும் தீய எண்ணம் மத்திய அரசிடம் இருந்ததையே காட்டுகிறது. மேலும் அப்பெண்கள் "பாரதிய முஸ்லிம் மகிளா அந்தோலன்" என்ற அமைப்பை சார்ந்தவர்கள். இந்த பெயரை பார்த்தாலே புரிகிறதல்லவா இவர்களை வைத்து பொது சிவில் சட்டத்துக்கு காய் நகர்த்தும் நாடகத்தை பாரதிய ஜனதா கட்சி நடத்துகிறது? என்பது!

பாராளுமன்றம் எந்தமாதிரியான சட்டங்களை இயற்ற வேண்டும் என்று கட்டளையிடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இல்லை. மத்திய அரசுக்கு இது தெரியவே செய்யும். எனினும் முஸ்லிம்களை பாதிக்கும் கருத்தை நீதிமன்றம்

கூறிவிட்டதால் அதை அவசர அவசரமாக செயல்படுத்த மத்திய அரசு துடிக்கிறது.

ஒரே நேரத்தில் மூன்று தலாக் சொல்லும் நடைமுறையை தடை செய்யும் சட்டத்தைக் கொண்டுவரத்தான் உச்சநீதி மன்றம் கூறியதே தவிர அதை சிறை தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கவோ பண அபராதம் விதிக்கும் படியான குற்றமாக ஆக்கவோ கூறவில்லை.

திருமணம், தலாக் என்பவை சிவில் (குடியுரிமை) தொடர்பானவை. இவற்றை கிரிமினல் எனும் குற்றநடவடிக்கையாக ஆக்கி யிருப்பது மத்திய அரசின் காழ்ப்புணர்ச்சியைக் காட்டுகிறது.

மகிழ்வோடு ஏற்க வேண்டுமாம்.!!

**ஷரீஅத்தை தூக்கி எறிந்து விடவேண்டுமாம்..!!**

**மோடியின் சட்டமே முஸ்லிம் பெண்களை பாதுகாக்குமாம்.!**

**அல்லாஹ்வின் சட்டம் பெண்களை வஞ்சிக்கிறதாம்! என்னவொரு அயோக்கியத்தனம்!**

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே நீதி, சமமான வாழ்வு, சமமான கவுரவம் (Gender justice, Gender Equality, Gender Dignity) என்பதே எங்கள் இலட்சியம் என்கிறார் சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்.

# ஏற்போம் மனிதச் சட்டங்களை ஜமாஅத்துல் உலமா அறைகூவல்

### சிறையில் தள்ளும் சதித்திட்டம்

முஸ்லிம்களை வில்லன்களாக காட்டவும், முத்தலாக் சொன்னவர் என்று பொய் வழக்குப் போட்டு முஸ்லிம்களை வைத்து சிறைகளை நிரப்பவும் திட்டமிட்டே இந்த சட்டத்தை கொண்டுவர மத்திய அரசு விரும்புகிறது. குண்டுவெடிப்பில் தொடர்புடையவர் என்று பொய் வழக்குப் போட்டு பல்லாயிரம் முஸ்லிம் களை சிறையில் தள்ளிவிட்டு மிச்சம் மீதி இருக்கும் முஸ்லிம்களை இந்த சட்டத்தில் பொய்வழக்கு போட்டு சிறைக்கு அனுப்பி விடலாம் என்று கணக்குப் போடுகிறது.

மத்திய அரசு இப்படி ஒரு சட்டத்தை கொண்டு வரும் முன் முஸ்லிம் மார்க்க அறிஞர் களை அழைத்து கருத்துக்களை கேட்டிருக்க வேண்டும். இது மரபு. இந்த மரபைக்கூடச் செய்ய மனமில்லாத அளவுக்கு முஸ்லிம் வெறுப்பை இதயத்தில் சுமந்து திரிகிறது அரசு.

அருண் ஜெட்லி , ராஜ்நாத் சிங், ரவிசங்கர் பிரசாத் ஆகிய RSS ன் செல்லப்பிள்ளைகள் வடிவமைத்து மோடியின் கண்ணசைவுக்காக காத்திருக்கும் ஒரு சட்டத்தை முஸ்லிம்கள் இதை முஸ்லிம் பெண்களுக்கு மட்டும் பெற்றுத்தரப் போகிறாராம்! என்னவொரு பாசம்.! இரக்கம்.!

### இவர்கள் யாரென்று புரிகிறதா..?

குஜராத்தில் 2002ஆம் ஆண்டில் மூவாயிரம் முஸ்லிம் பெண்களை விதவைகளாக்கி கர்ப்பிணிப் பெண்ணென்றும் பாராமல் அவளை கதறக்கதற கூட்டுக்கற்பழிப்பு செய்து வயிற்றைக் கிழித்து ஏதுமறியா சிசுவையும் தாயுடன் சேர்த்தே எரித்துக் கொன்று இன்று வரை சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்பித்து வாழும் கூட்டமா பெண்களுக்கு சமநீதி வழங்கப் போகிறார்கள்?

காஷ்மீரில் விசாரணை என்ற பெயரில் காவல்துறையால் அழைத்தும் இழுத்தும் செல் லப்பட்ட முஸ்லிம்கள் 80,000 பேர். இவர்கள் ஆண்டுகள் பல ஆனபின்னரும் இன்னும் வீடு திரும்பவில்லை. அவர்களை எங்கே என்று கேட்டால் அரசு பதில் சொல்ல மறுக்கிறது. இவர்களின் மனைவிமார்கள் தம் கணவர் உயிருடனிருக்கிறாரா இல்லையா என்று கூட அறியமுடியாமல் அல்லல்பட்டு நிற்கின்றனர். உயிருடனிருந்தால் தேடிக்கண்டு பிடிக்கலாம்.

இறந்துவிட்டால் மார்க்க விதிப்படி "இத்தா" இருக்கலாம். எதுவும் செய்ய இயலாமல் தவிக் கின்றனர் அப்பெண்கள். இதனால் அவர்கள் "பாதி விதவைகள்" (Half Widows) என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களை இக்கதிக்கு ஆளாக்கிய மத்திய அரசு சமநீதி சமத்துவம் என்று வாய்ப்பந்தல் போடுகிறது.

'இந்தியாவிலேயே ஊட்டச்சத்து குறைந்த பெண்கள் அதிகமாக இருப்பது குஜராத்தில் தான்' என்று ஐ.நா. மன்றத்தின் துணை அமைப்பு தனது ஆய்வின் முடிவை வெளியிட்ட போது, "பெண்கள் ஊட்டச்சத்தை விட உதட்டுச் சாயத் துக்கே முன்னுரிமை தருகின்றனர் " என்றார் மோடி. இப்படி பெண்களை இறுமாப்புடன் இழிவுபடுத்தியவர் இன்று பெண்களின் கவுரவம் பற்றி பாடம் நடத்துகிறார். ஊரையும் உலகையும் ஏமாற்றப் பார்க்கிறார்.

**இச்சட்டம் கூறுவதென்ன?**

மத்திய அரசு கொண்டுவர திட்டமிட்டுள்ள இச்சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள்:

*1.* ஒரே நேரத்தில் மூன்று தலாக் சொல் பவருக்கு மூன்று ஆண்டு சிறை தண்டனையும் நீதிபதி விரும்பும் அளவுக்கு அபராதமும் விதிக்கப்படும்

*2.*முத்தலாக் விடப்பட்ட பெண்களுக்கு அவளின் பழைய கணவன் மாதந்தோறும் ஜீவனாம்சம் வழங்க வேண்டும்

*3.* இவ்விருவருக்கும் பிறந்த குழந்தை பருவ வயது வரை தாயிடமே வளர வேண்டும்.

ஒரே நேரத்தில் மூன்று தலாக் சொல்லுவது பிணையில் வர முடியாத குற்றமாக (non bailable offence) கருதப்படும் என்பது சட்டத்தின் கொடிய பகுதியாகும்.

**நாம் ஏன் எதிர்க்கிறோம்?**

இதுவரை கடைபிடித்து வந்த நடைமுறைக் கும் பழக்க வழக்கத்துக்கும் ஷரீஅத் நெறி முறைக்கும் மாறாக எந்த சட்டம் வந்தாலும் அது எந்த வடிவத்தில் வந்தாலும் அதை நாம் ஏற்க மாட்டோம். எங்களை ஷரீஅத்தின் படி வாழ விடு என்று எவரிடமும் கெஞ்ச மாட்டோம். மன்றாட மாட்டோம். அதற்கு அவசியமும் இல்லை.ஏனெனில் " இந்திய அரசியலமைப்புச் சட்டம் (அடிப்படைஉரிமைகள்) பிரிவு25 இந் தியர்கள் அனைவரும் தாம் விரும்பும் மதத்தை தழுவிட, அதைப் பின்பற்றிட, பிரச்சாரம் செய்திட உரிமையுடையவர்கள் என்கிறது.

எனவே ஷரீஅத்தின் படி வாழும் உரிமைக்கு எதிராக உள்ளது இந்த புதிய சட்டம். அரசிய லமைப்பு சட்டத்துக்கு எதிரான எந்த சட்டமும் ஏற்க முடியாதது. புறக்கணிக்கப்பட வேண்டி யது. இதுவரை முஸ்லிம்கள் கடைப்பிடித்து வந்த சட்டமே தொடர வேண்டும்.



ஷரீஅத்தில் செய்யப்படும் சிறிதளவு மாற்றத்தையும் முழு மூச்சுடனும் வீச்சுடனும் எதிர்ப்போம்.

அல்லாஹ்வின் அடியார்களே! அன்புத் தாய்மார்களே!

முஸ்லிம்கள் இல்லாத இந்தியாவை உருவாக்க முயலும் மதவாத, பாசிஸ சக்திகள் இந்தியாவில் வாழும் எல்லா முஸ்லிம்களையும் கொன்றொழிக்க இயலாது என்பதால் ஷரீஅத்தை அன்றாட வாழ்விலிருந்து அகற்றி பெயர் தாங்கி முஸ்லிம்களாக நம்மை ஆக்கப் பார்க்கிறது மத்திய அரசு. ஷரீஅத்தை அழிக்க RSS எடுத்து வைக்கும் முதல் காலடி இது.

இந்த ஒரு சட்டத்தோடு முடியாது. ஷரீ அத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கை வைப் பார்கள். பிறகு முற்றாக ஒழித்து விடுவார்கள். இதுவே RSS ன் திட்டம். இது வெறும் கற்பனையோ மிரட்டலோ அல்ல. உண்மை. உண்மை. உண்மையன்றி வேறில்லை.

**ஸ்பெயின் கற்றுத் தந்த பாடம்**

கி.பி 712 முதல் 1492 வரை 780 ஆண்டுகளாக ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் முஸ்லிம்கள் கண்ணியமான ஆட்சியை நடத்தினார்கள். இன்றைக்கும் ஸ்பெயின் மக்கள் பேசும் ஸ்பானிஷ் மொழியில் அரபு மொழியின் உச்சரிப்பு இருப்பதை அறிய முடியும். ஒரு காலத்தில் ஐரோப்பாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருந்த இஸ்லாமிய நாடான ஸ்பெயினில் ஒரு முஸ்லிம் கூட இல்லை இது எப்படி?திட்டம் தீட்டி அழித்தார்கள் ஓராண்டு ஈராண்டு திட்டமல்ல 120 ஆண்டு திட்டம்...!இத்திட்டத்திற்கு பலியான முஸ்லிம்கள் அதிகாரம் இழந்தனர்.

**ஸ்பெயின் அஜெண்டாவின் அம்சங்கள்**

* இஸ்லாமிய முறைப்படி நடக்கும் திருமணங்கள் அரசிடம் பதிவு செய்தால் மட்டுமே செல்லும்

* இஸ்லாமை தழுவியோர் மீண்டும் பழைய மதத்திற்கு மாற கட்டாயப்படுத்தப்பட்டார்கள்

* வரலாற்று நூல்களில் பொய் வரலாறு சேர்க்கப்பட்டு முஸ்லிம் ஆட்சியாளர்கள் வில்லன்களாக காட்டப்பட்டனர்



* முஸ்லிம் வீடுகள் கண்காணிக்கப்பட்டு பின்னர் சூறையாடப்பட்டன,அரசுக்கு எதிராக இரகசிய கூட்டங்கள் நடத்தினார்கள் என்றும் ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளார்கள் என்றும் பொய் காரணங்கள் கூறப்பட்டன.

* பள்ளிவாசல்கள் மீதும் மதரஸாக்கள் மீதும் கெடுபிடிகள் ஏவி விடப்பட்டன,சட்டத்தின் பெயரால் நெருக்கடிகள் தரப்பட்டன.

இப்படி ஒரு புறம் நெருக்கடிகள் நடக்கும் போது அப்போதைய ஸ்பெயின் மன்னன் பெரிடினான்ட் "எல்லா மதத்தினருக்கும் சம உரிமை உண்டு" என்று அறிக்கை விட்டுக் கொண்டே இருந்தான்.அதை நம்பிய முஸ்லிம்கள் ஏமாந்தனர் அழித்தொழிக்கப்பட்டனர் .

அன்று ஸ்பெயினில் நடந்ததை இன்றைய இந்தியாவில் நடக்கும் சம்பவங்களுடன் ஒப்பிட் டுப் பாருங்கள். உண்மை புரியும். RSS-ன் சதித் திட்டம் விளங்கும்.ஒற்றைக் கலாச்சாரத்தையும் ஒரு சாதி ஆதிக்கத்தையும் நோக்கி இந்தியாவை இழுத்துச் செல்ல முயல்கிறது மத்திய அரசு, இது நீண்ட சதித்திட்டத்தின் ஒரு பகுதி.

இந்த அநீதிக்கு எதிராக போராடி வெல்வோம், எவரிடமும் சரணடையமாட்டோம்.ஈட்டியின் முனையில் நிறுத்திய போதும் ஈமானை இழக்க மாட்டோம். எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு அன்றி எவருக்கும் அஞ்ச மாட்டோம்.

இவண்,

**அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாஅத்**
**தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை**

## இந்தியாவையும் இந்துக்களையும் காப்பாற்றிய அலாவுத்தீன் கில்ஜியின் பொருளாதார நடவடிக்கைகள்

"வைகறை வெளிச்சம்" ஜனவரி 2018 இதழில் பத்மாவதியும் அலாவுத்தீன் கில்ஜியும் என்ற கட்டுரையில் அலாவுத்தீன் கில்ஜியைப் பற்றிய விரிவான வரலாற்றைத் தந்திருந்தோம்.

வாசகர்களின் அமோகமான வரவேற்பைப் பெற்றது. எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே!

அலாவுத்தீன் கில்ஜியின் வரலாற்றில் அவர் இந்துக்களையும், இந்தியாவையும் காப்பாற்றியது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது அவரது பொருளா தார சீர்திருத்தங்களும், அங்காடிகள் என்ற சந்தைகளில் விவசாயத்தில், விலைவாசி கட்டுப் பாட்டில் அவர் கொண்டுவந்த சீர்திருத்தங்கள் வரலாறு காணாதவை. வரலாற்றிலும் முதன்மையானவை என எல்லோரும் குறிப்பிடு கின்றார்கள்.

அலாவுத்தீன் கில்ஜியைக் குறைகாண வேண்டும் என்ற வன்மத்தை நெஞ்சிலே வளர்த்துக்கொண்டு வரலாற்றை எழுதியவர்கள் கூட அவரை அங்காடி சீர்திருத்தங்களில் பாராட் டிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

**நிலச் சீர்திருத்தங்கள்**

*கி.பி. 1200 களில்* ஆட்சியாளர்களிடையே ஓர் வழக்கம் இருந்தது. அது பிராமண சமுதா யத்தைச் சார்ந்தவர்களுக்கு பெரும் நிலப்பரப்பு களை இலவசமாக பரிசாகத் தருவது. இதனால் இவர்கள் பெரு நிலப்பிரபுகளாக வாழ்ந்தார்கள். இந்த பெருநில பிரப்புக்கள் பிரம்மதேயா என அழைக்கப்பட்டார்கள். ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த Nobles என்ற சீமான்களைப்போல் சுகபோக வாழ்வு வந்தார்கள்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் வாழ்பவர்கள், இவர்களுக்கு அடிமைகளாய், அனைத்து ஏவல்களையும் செய்து வாழ்ந்தார் கள். இந்த நிலங்களில் வாழ்ந்தவர்கள் இந்த பிரம்மதேயாக்களுக்கு வழங்கப்பட்ட நிலங் களில் விவசாயம் செய்ய வேண்டும். இலவசமாக



# அலாவுத்தீன் கில்ஜியின் பொருளாதார சீர்திருத்தங்கள்

இந்த பிரம்மதேயாக்கள் அவர்களாகப் பார்த்து தருவதைக் கொண்டு உயிர் வாழ்ந்திட வேண்டும்.

இந்த நிலப் பிரபுகளுக்குத் தரப்பட்ட நிலங்களில் வாழும் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும், குழந்தைகளும் கூட இவர்களுக்கு அடிமைகளாய் வாழ்ந்திட வேண்டும். இவர்களை "விஸ்தி" அடிமைகள் என அழைத்தார்கள்.

இப்படி ஒரு கூட்டம் மக்கள் நிலத்தில் உழைத்துக் கொட்டிக்கொண்டிருந்ததால், இந்த பெரு நில சீமான்கள், ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எகிப்திலிருந்தும், ஐரோப்பியாவிலிருந்தும் குதிரைகளைத் தருவித்து அவற்றில் சவாரி செய்தார்கள். உலகில் எந்தப் பகுதியில் விலையுயர்ந்த ஆடைகள் கிடைக்குமோ அவற்றை வாங்கி உடுத்தி கழித்துக் கிடந்தார்கள்.

இவர்கள் தங்களுக்கு அரசு தந்த நிலங்களை விருப்பப்பட்டால் விவசாயம் செய்வார்கள். அதிலும் தங்களுக்கு விருப்பப்பட்ட பகுதியை மட்டுமே விவசாயம் செய்வார்கள்.

"விஸ்தி" என்ற தங்கள் நிலங்களில் வாழ்ந்த ஆண்களையும், பெண்களையும் தங்கள் விருப்பம்போல் பயன்படுத்தினார்கள், அதாவது பெண்களைத் தங்கள் ஆசை நாயகிகளாகவும் ஆக்கிக் கொண்டார்கள். நிலமானிய முறையின் பொற்காலம் இது எனக் கூறிடும் அளவுக்கு சுகபோகம் அங்கே கொட்டிக் கிடந்தது.

(Source : Alauddin Khilji - Saviour of Hindusm, Monish Borah)

### உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தம்

அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தார்கள் "விஸ்தி" களுக்கும் நிலம் சொந்தம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால் பிரம்மதேயாக்களுக்குக் கொடுத்த நிலங்களில் பெரும் பகுதியை கையகப்படுத்திட வேண்டியதாயிற்று.

அடுத்து யாரும், யாருக்கும் இலவசமாக உழைக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்திட இயலாது. உழைப்பிற்கேற்ற கூலியை வழங்கியே ஆக வேண்டும். அது விஸ்தியாக இருந்தாலும் சரி, பிரம்மதேயாக்களாக இருப்பதாலும் சரி என பிரிதொரு சட்டத்தைக் கொண்டு வந்தார்.

அலாவுத்தீன் கில்ஜியின் இந்த சீர்திருத் தங்களை பூமியிலேயே சொர்க்கத்தை தருவித்து, வாழ்ந்து கொண்டிருந்த பிரம்மதேயாக்கள் என்ற பிராமணர்களால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அதே நேரத்தில் அவர்களால் அலாவுத்தீன் கில்ஜி-க்கு எதிராக எதுவும் செய்திட இயலவில்லை. ஏனெனில் அலாவுத்தீன் கில்ஜி தன் சட்டத்தை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை அறிவித்திருந்தார். அந்தத் தண்டனைகளைக் கண்டிப்பான முறையில் செயல்படுத்திடவும் செய்தார். இதனால் சில நேரங்களில் இந்த பிரம்மதேயாக்கள், நிலத்தில் உழைத்திட வேண்டியவர்களாகவும் ஆனார்கள்.

அன்று அலாவுத்தீன் கில்ஜியின் ஆளுமைக்கெதிராக எதுவும் செய்திட முடியாதவர்கள், பிற்றை நாள் வரலாற்றில் அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இந்துக்களுக்கு எதிரானவர் என்றும், இந்துக்களின் நிலங்களைப் பிடுங்கிக் கொண்டவர். இந்துப் பெண்களையும், வேலை செய்ய வைத்தவர் என்றெல்லாம் பொய்களைப் பரப்பி, அதை இன்றுவரை பள்ளிக்கூடங்களில் பாடமாகவும் கற்றுக் கொடுக்கின்றார்கள்.

ஆக அலாவுத்தீன் கில்ஜியின் காலத்தில் விஸ்திகளுக்கு அதாவது பாமரர்களுக்கும் உழைப்பவர்களுக்கும் அன்றைய சொல்லாட்சியில் அடிமைகளுக்கு நிலம் சொந்தமானதால் அவர்கள் இரட்டிப்பு உற்சாகத்துடன் உழைத்தார்கள். இதனால் உற்பத்தி பெருமளவில் பெருகிற்று.

அத்தோடு நாட்டிலுள்ள விளை நிலங்கள் அனைத்தும் விவசாயத்தின் கீழ் உற்பத்தியின் கீழ் வந்துவிட்டன. இதனால் உற்பத்தி பெருகி நாட்டில் வளம் கொழித்தது. ஏழை பாழைகளுக்கும் வருவாய் வந்தது, அது பெருகிற்று.

### வரி விலக்கம்

இத்தோடு அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இன்னொரு பொருளாதார நடவடிக்கையையும் மேற்கொண்டார்கள். அன்றைய நாட்களில் விளையும் விளை பொருட்களின் மேல் மூன்று விதமான வரிகள் புழக்கத்தில் இருந்தன. அவை, அப்போதைய மொழி வழக்கில் போஹா, போக், கார் என வழங்கப்பட்டன.

இதனை ஆங்கிலத்தில் இப்படி மொழி

பெயர்க்கின்றார் வரலாற்று ஆசிரியர் சத்திஷ் சந்திரா. அது Land Revenue - நில வருமானம், Cess - தீர்வை, Tax - வரி என்பனவாகும். Medieval India Part-1 by Satish Charnda.

இப்படி மூன்று தலைப்புகளில் விவசாயிகளி டமிருந்து வரிகள் வசூலிக்கப்பட்டு வந்தன. இவை அனைத்தையும் ரத்து செய்து விட்டு ஒரே வரியைக் கொண்டு வந்தார். இந்த ஒற்றை வரியில் ஜிஸ்யா - என்ற பாதுகாப்பு வரியும் அடங்கும். இதனால் நிலத்தில் உழைப்பவர்கள் வரிச்சுமையிலிருந்து பெருமளவில் விடுவிக்கப் பட்டார்கள்.

### மங்கோலியர் முற்றுகையின்போது வரி

மங்கோலியர்கள் ஆறுமுறை இந்தியாவைத் தாக்கிடத் தகர்த்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோம். (பார்க்க வைகறை வெளிச்சம், ஜனவரி 2018)

இந்த மங்கோலியர்களை வீழ்த்திட ஒரு பெரும் இராணுவம் நிரந்தரமாகத் தேவைப் பட்டது. அதற்காக இராணுவத்திற்கு சிறப்பு ஆட் சேர்ப்புகளை நடத்தினார். அவர்களுக்கு மிகவும் கண்ணியமானதோர் ஊதியம் வழங்கிட விரும்பினார். இதற்காகப் பெரும் நிதி தேவைப் பட்டது. இதனால் வரிகளைச் சற்று உயர்த்தி னார். சில நேரங்களில் விவசாய பொருள்களில் ஐம்பது விழுக்காடுகளை வரியாகப் பெற்றார். அதில் ஜிஸ்யா வரியும் அடங்கும்.

இதேபோல் வியாபாரிகளிடமும் சிறப்பு வரிகளைப் பெற்றார். அன்றைய வியாபாரிகளில் பெரும்பாலோர் முஸ்லிம்களாக இருந்தார்கள். இதனால் வரி வசூல் எளிதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (Monish Borah)

### விலைவாசிக் கட்டுப்பாடு

விலைவாசிகள் ஏறிவிடாமலிருக்க அலாவுத் தீன் ஒரு முரட்டுக்கட்டுப்பாட்டை கொண்டு வந்தார் என்றிலிலை. அவர் அங்காடியின் இதர கூறுகளிலும் கூர்ந்து கவனம் செலுத்தினார்.

மக்களுக்குத் தேவையான பொருள்கள், அங்காடிக்கு வந்து சேர்ந்திடும் வண்ணம், வியாபாரிகளை நெறிப்படுத்தினார். மாட்டு வண்டிகளே பெரும்பாலும் பொருட்களை எடுத்து வந்திடும் வாகனங்கள் இவற்றிற்கான கூலிகளை நிர்ணயித்தார். அவை முறையாக வண்டிகளையும், மாடுகளையும் பராமரிப்பவர்களுக்குக் கிடைத்திட ஆவண செய்தார்.

### விலைவாசியைக் கட்டுப்படுத்திட அலாவுத்தீன் கில்ஜியின் அங்காடி சீரமைப்புகள்

அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இந்துக்களுக்கு பெரும் சுமைகளைத் தந்தார் என எழுதி அலாவுத்தீன் கில்ஜியின் சீரிய வரலாற்றை மாசுபடுத்திட வேண்டும் என விரும்புகின்றார் வரலாற்று ஆசிரியர் சந்தீஷ் சந்திரா. அவர்கள் கூட மறுக்கவியலாத அங்காடி சீர்திருத்தங்களைச் செய்தீருக்கின்றார்கள் அலாவுத்தீன் கில்ஜி அவர்கள்.

அலாவுத்தீன் கில்ஜியின் அங்காடி சீர்திருத் தங்கள், அன்றைய ஆட்சியாளர்களுக்கு அரிய படிப்பினையாக இருந்தன. இடைக்கால வரலாற்று நாயகரான அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் நகரங்களில் வாழுகின்றவர்களுக்கு வாழ்வின் அடிப்படை தேவைகள் குறிப்பாக, உணவு பொருள்கள் எந்த தங்கு தடையுமின்றி கிடைக்க வேண்டும் என்பதிலும் மிகவும் கவனமாக இருந்தார். அதிலும் அவர் இந்தப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்றும் விரும்பினார். அதனை அப்படியே நிறைவேற்றவும் செய்தார்.

விலைவாசிக் கட்டுப்பாடுகளைப் பொறுத் தவரை மிகச்சில ஆட்சியாளர்களே விலைவாசி யைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். இவர்களும் கூட அதிக காலம் விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திட இயலவில்லை. ஆனால் வரலாற்றில் முதன் முதலாக விலைவாசியை அதிக நாட்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒரே ஆட்சியாளர் அலாவுத்தீன் கில்ஜிதான் Medieval India Part-1 by Satish Charnda. இதில் அவர் தெளிவான முறைமை களைக் கடைப்பிடித்தார்.

இதனால் அலாவுத்தீன் கில்ஜி அவர்களால் அரசு அலுவலர்களுக்கும், இராணுவத்தில் பணி யாற்றியவர்களுக்கும், நீண்ட நெடியதொரு காலம், சீரான ஊதியங்களை வழங்கிட முடிந்தது. விலைவாசி ஏறிவிட்டது எனக்கூறி

யாரும் அதிகமான ஊதியம் வேண்டும் எனக் கேட்டிடவில்லை. அதனால் ஊதியத்தை உயர்த் தித் தந்திட வேண்டிய நிலை வந்திடவில்லை.

மங்கோலியர்களை எதிர்கொள்ள அலாவுத் தீன் கில்ஜி அவர்களுக்கு மிகப்பெரியதொரு படை தேவைப் பட்டது. மிகப்பெரியதொரு படையை நீண்ட காலம் தக்க வைத்துக்கொள்ள வேண்டியதும் வந்தது. தேவையானப் படையைத் திரட்டி வைத்திருந்தார். அதற்கு தேவையான ஊதியத்தைத் தந்து எப்போதும் தயார் நிலையில் வைத்திருந்தார். அலாவுத்தீன் கில்ஜி அவர்கள், அங்காடியை மூன்றாகப் பிரித்து வைத்திருந்தார்கள்.

அவை,

**முதல் அங்காடி :** உணவுப் பொருள்கள், தானியங்கள் என்பனவற்றிற்கு.

**இரண்டாவது அங்காடி :** துணி மணிகள், ஆடைகள், விலை உயர்ந்த பொருள்களான சக்கரை, நெய், எண்ணெய், உலர்ந்த பழ வகைகள் போன்றவற்றிற்கு

**மூன்றாவது அங்காடி :** குதிரைகள், பணி யாட்கள் அல்லது வீட்டுக்கு வேலை செய்பவர்கள் Domestic Helpers அல்லது அடிமைகள், ஆடு, மாடுகள் போன்றவற்றிற்கு இந்த அங்காடிகளை முறைப்படுத்திட நெறிமுறைகள் இருந்தன. அவற்றை செயல்படுத்திட அதிகாரிகளுமிருந் தார்கள். விதிகளை மீறுவோருக்குக் கடினமான தண்டனை யிமிருந்தன.

பொருள்களை அங்காடிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதில் செலவு, அதனால் விலைவாசி உயர்வு என்ற பேச்சே அலாவுத்தீன் கில்ஜியின் காலத்தில் எழவில்லை.

அரசு தானியங்களஞ்சியத்திற்கு, தேவையான பொருள்களை - உணவுப் பொருள்களை வாங்கி வைத்திருந்தார். விளை பொருள்கள் உபரியாக அங்காடிக்கு வந்தால் விவசாயிகளுக்கு நஷ்டம் வந்துவிடாததெரு விலையில் அவற்றை வாங்கி அரசு தானியக் கிடங்குகளில் வைத்திருந்தார்.

**தேவையும் - பொருள்களின் வரவும் :**
Demand & Supply

அங்காடிகளில் ஒரு குறிப்பிட்ட பொருள் அதிகமாக மக்களுக்கு தேவைப்பட்டால் அதை அதாவது (Demand) தேவை அதிகப்பட்டால், விலைகள் உயரும். இந்த விலை உயர்வை கட்டுப் படுத்த அரசு தானியக் களஞ்சியங்களில் இருந்த அந்த குறிப்பிட்ட பொருளை அங்காடிக்கு அனுப்பி விடுவார். இதனால் தேவைக்கு ஏற்ப தேவையான பொருள்கள் கிடைத்துக் கொண்டே



இருந்தன. விலைவாசி கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

அதேபோல் வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்திடும் நிலையும் அங்கு இல்லை. மக்களுக்குத் தேவைப்படும் பொருள்களைப் பதுக்கி வைத்து, விலை உயர்ந்த பின்பு அதனை விற்பனை செய்து அதிக இலாபம் சம்பாதிப்பது ஒரு வியாபார தந்திரம். இதனை Hoarding and Profiteering என்பார்கள். இப்படி ஏதேனும் பொருள்கள் பதுக்கப்பட்டால் அந்தப் பொருள் உடனேயே அரசு களஞ்சியத்திலிருந்து அங்காடிக்கு வந்துவிடும். அதனால் மக்களுக்கு குறித்த விலையில் பொருள்கள் கிடைத்துவிடும்.



سلطان علاءالدین خلجی محمد شاہ اول (۶۹۵ ھ ق)
Sultan Aala-Ouddine Khildji (1295)

அதேபோல் அத்தியாவசியப் பொருள்களை பதுக்குவோருக்கு தண்டனைகளையும் விதித்திருந்தார் அலாவுத்தீன் கில்ஜி அவர்கள். அந்தத் தண்டனைகளைதந்தார்கள். அவர்கள் அவற்றைக் கண்டிப்புடன் நிறைவேற்றவும் செய்தார்கள். இந்தத் தண்டனைகளுள் ஒன்று வியாபாரிகளால் பதுக்கப்பட்ட பொருள்களைப் பறிமுதல் செய்வதாகும்.

ஆக அங்காடியில் விலைகள் Fixed Price - குறித்த விலை - நியாயமான விலை (Fair Price) என்று நிலை கொண்டது.

பஞ்சம், வறட்சி இவற்றின்போது தானியங்களையும் அத்தியாவசியமான பொருள்களையும், அந்தப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்றிட 10,000 முதல் 20,000 மாட்டு வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. அலாவுத்தீன் கில்ஜியின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதி முழுவதும்.

இதுவல்லாமல் இதர மாட்டு வண்டிகளின் சொந்தக்காரர்கள் அனைவரையும் ஒருங்கிணைந்து அவர்களையும் அவரே தேவைகளின் போது பயன்படுத்திட ஏற்பாடு செய்திருந்தார். இதில் போதுமான நெறிமுறை வகுத்திட அந்த மாட்டு வண்டிக்காரர்களையே கேட்டுக் கொண்டார்.

இந்த ஏற்பாடு, வறட்சி, பஞ்சம், பற்றாக் குறை இவற்றால் தொலைதூர பகுதிகளில் வாழும் மக்கள் துவண்டுவிடாமல் தற்காத்தன.

சாதாரண நாட்களில் இந்த வாகனங்கள் ஏராளமான உணவுப் பொருள்களை அங்காடிக்குக் கொண்டு வந்தன. இதனால் அரசு கருவூலத்திலிருந்த பொருள்களை கொட்டிட வேண்டாம் என்ற நிலை இருந்தது.

அங்காடி பரிவர்த்தனைகளை, கண்காணிக்க அங்காடி ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை அன்றைய மொழி வழக்கில் (Shehna) ஷிஃஹ்னா என்றழைத்தார்கள். இவருக்குப் பக்கபலமாக சில பல சிப்பாய்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதனால் அரசின் நல்வாழ்வு திட்டங்களும், அரசின் ஆணைகளும், கண்டிப்பான முறையில் செயல்படுத்தப்பட்டன. இதனால் எல்லாப் பொருள்களும் நியாயமான விலையில் எல்லா நேரமும் கிடைத்துக் கொண்டே இருந்தன.

(Source : Cambridge Economic History of India, Vol-2, C1757)

- MGM






# நீதித்துறையின் சிப்பாய் கலகம்

நமது நாட்டில் எல்லாவற்றையும் கடந்த அதிகபட்ச அதிகாரம் கொண்ட அமைப்பு நீதிமன்றங்கள். அதிலும் அதிபட்சமான அதிகாரம் கொண்ட அமைப்பு உச்சநீதிமன்றம். அந்த உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நாட்டின் முதன்மையான நீதிபதி. அவர் தான் நாட்டின் நியாய தர்மங்களை காக்க வேண்டிய இடத்தில் உள்ள அதிமுக்கிய பொறுப்பாளர்.

ஆனால் அப்படி ஒருவர் மீதான குற்றச் சாட்டுகளின் மூலம் இன்று இந்திய நீதிமன் றங்கள் ஒட்டுமொத்தமாக கேள்விக்குட்படுத் தப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நான்கு பேர் வரலாற்றில் முதன்முறையாக ஊடகங்களுக்கு பேட்டி அளித்தது இப்பிரச்சனையின் தீவிரத்தை உணரச் செய்துள்ளது.

வெளிவந்த நீதிபதிகள் தங்களுக்கு வேறு வழியில்லாத காரணத்தால் தான் வெளி வந்தோம் என்றும் தலைமை நீதிபதியான தீபக் மிஸ்ரா அவர்கள் மீது தங்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின்மையையும் வெளிப்படுத்தினார் கள். இந்த நாளை பலர் இது ஜன நாயகத்தின் கருப்பு நாள் என்றும் சொல்கிறார்கள்.

சொராபுதீன் எண்கவுண்டர் வழக்கை விசாரித்த நீதிபதி லோயா அவர்களின் மர்ம விசாரணையில் ஏற்பட்ட அதிர்ப்தியும் மத்திய அரசின் கைப்பாவையாக நீதிமன்ற தலைமை செயல்படுகிறதா என்ற எண்ணமும் தாம் இந்த நான்கு நீதிபதிகளையும் வெளிவர வைத்திருக் கிறது. இந்நாட்டின் உச்சநீதிமன்ற நீதிபதி களுக்கே இந்நிலை என்றால் இந்நாட்டின் சராசரி குடிநிலை கொண்ட அதற்கும் கீழான நிலையில் வாழும் மனிதர்களின் நிலை என்ன?. அவர்கள் இந்த நீதிமன்ற அமைப்பின் மீது கொண்டுள்ள நம்பகத்தன்மை என்னவாக இருக்க முடியும்?!

**நான்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளின் திடீர் விஷ்வரூபம்**

ஜனவரி.12,2018 உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நீதிபதி ஜஸ்டி செல்லமேஷ்வர்,

நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதிபதி மதன் லோகூர், மற்றும் நீதிபதி குரியன் ஜோசப் என

நான்கு பேர் பத்திரிக்கை சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்த சந்திப்பில், தங்களுக்கு வேறு வழியில்லாமலேயே இந்த சந்திப்பை தாங்கள் நிகழ்த்தியுள்ளோம் எனவும் நம் நாட்டின் ஜனநாயகத்திற்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்கள்.

நாட்டின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் மீதே இந்த நான்கு நீதிபதிகளும் தங்களுக்குரிய நம்பிக்கையின்மையை தெரிவித் தனர். அதிலும் மேலாக. வழக்குகளை பிரித்து கொடுப்பதில் தலைமை நீதிபதி எடுத்துக்

கொண்ட நடவடிக்கைகள் முற்றிலும் முரண்பாடாக இருக்கின்றது என்றனர்.

உண்மையில் நீதிமன்றங்கள் பல வழக்குகளில் அநியாயமாகத்தான் நடந்துள்ளன. அப்போதெல்லாம் குரல் கொடுக்க வழக்கறிஞர்களும் சில உயர் நீதிமன்ற நீதிபதிகளுமே

முன்வந்தனர். ஆனால் இப்போது உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் வெளிவந்து " நம் நாட்டில் ஜனநாயகத்திற்கு ஆபத்து" என சொல்வது பிரச்சனையின் தீவிரத்தை காட்டுகிறது.

இந்த நீதிபதிகள் மிகப்பெரும் உண்மையை வெளிக்கொண்டு வந்துள்ளார்கள். உச்சநீதிமன்றத்திற்கு வரக்கூடிய வழக்குகளை பிரித்து வெவ்வேறு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றக்கூடிய அதிகாரம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகளுக்கே உண்டு.

இப்படியான நிலையில் மிகப்பெரும் வழக்குகள் எல்லாம் மூத்த அனுபவம் நிறைந்த

நீதிபதிகளிடம் மாற்றாமல் ஜுனியர் நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு அனுப்பப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் இப்படி மாற்றப்பட்ட சில மிக முக்கியமான வழக்குகள்,

*1) ராஜீவ் காந்தி கொலை வழக்கு, 1998*

*2) போஃபோர்ஸ் வழக்கு,1999 (ஹிந்துஜா சகோதரர்கள் ஜாமீன் கேட்ட வழக்கு)*

*3) பெஸ்ட் பேக்கரி இஷ்ரத் ஜகான் வழக்கு,2004*

*4) குற்றவழக்கில் தண்டனை பெறப்பட்ட* MLA / MP *க்களின் பதவி தகுதியிழப்பு செய்யப்பட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருடம் தண்டனை வழங்க வேண்டும் என்ற வழக்கு, 2005.*

*5) சொஹ்ராபுதீன் போலி எண்கவுண்டர் வழக்கு, 2007*

*6) ராம் ஜெத்மலானியுடைய கருப்பு பண வழக்கு, 2009*

*7) ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு, 2010*

*8)* LGBTQ *வழக்கு,2010*

*9) பாபரி மஸ்ஜித் இடிப்பில் அத்வானியின் மீதான சிபிஐ விசாரணை வழக்கு, 2011*

*10) ஆதார் செல்லுபடியாகும் வழக்கு,2012*

*11) நிலக்கரி ஊழல் வழக்கு,2012*

*12)* Section 66A of IT act *செல்லுபடியாகும் சட்டம், 2012*

*13) ராகுல் காந்தி வழக்கில் கிஷோர் சாம்ரைட் மேல் முறையீடு,2012*

*14)* BCCI *வழக்கு 2013*

*15) விஜய் மல்லையா வழக்கு , 2016*

*16) நீதிபதி லோயா அவர்கள் மரணத்தின் மீதான வழக்கு.*

இந்த வழக்குகள் எல்லாம் கடந்த காலங்களில் அதிகம் கவனம் பெற்ற வழக்குகள் அதாவது,

அதிகார மையத்திற்கு எதிராக தொடங்கப்பட்ட வழக்குகள். இந்த வழக்குகளை விசாரித்து நீதி வழங்க நியமிக்கப்பட்ட நீதிபதிகள் எல்லாம் உச்சநீதிமன்றத்தின் ஜூனியர் நீதிபதிகள்.

அதற்கேற்றவாறு இந்த வழக்குகளில் எல்லாம் அதிகார மையத்தில் உள்ளவர்களுக்கு ஆதரவாகவே தீர்ப்புகள் வந்துள்ளன.

நீதிமன்ற அமைப்பில் உச்ச பொறுப்பிலிருந்து அடிமட்ட பொறுப்பு வரை வகுப்புவாத சக்திகள் பெரிய அளவில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது இதன் மூலம் உறுதியாகிறது. அதனால் தான் தீர்ப்புகளும் வகுப்புவாத சிந்தனையுடன் வழங்கப்படுவதை தற்போது பார்க்கிறோம்.

இந்திய நீதிமன்றங்கள் அடிப்படையில் மக்களின் நம்பிக்கையை பெற முடியாததற்கான காரணம்..

அடிப்படையிலேயே இந்திய நீதிமன்ற அமைப்பு ஒரு ஒழுங்கற்ற போதுமான நீதிபதிகள் கொண்டிருக்காத ஒரு அமைப்பாகவே இருக்கிறது. அதனால் தான் இந்நீதிமன்றங்களின்

தீர்ப்பு மிக மிக மெதுவாக வெளிவருகின்றன. 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற சீக்கியர்களின் கலவரம், இந்த கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பலரும் இறந்தே போய் விட்டார்கள்.

ஆனாலும் 35 ஆண்டுகள் ஆன பிறகும் இன்னும் தீர்ப்பு முடிவாகாமல் விசாரணை நடைபெற்று வருகிறது. இப்படியிருக்கும் ஒரு

நீதிமன்ற அமைப்பின் மீது யார் ஒருவருக்கு முழு நம்பிக்கை வரும்?..

இந்திய நீதிமன்றங்களில் வழங்கப்படும் நீதி மூன்று அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கீழ் நீதிமன்றங்கள் அதற்கு மேலாக மாநிலம் சார்ந்த உயர் நீதிமன்றங்கள், அதற்கு மேலாக உச்ச நீதிமன்றங்கள். இதில் உச்ச நீதிமன்றத்தின் முடிவே இறுதியானது இதற்கு மேலாக எந்த மேல்முறையீடும் இல்லை.

ஆனால் இந்த மூன்றடுக்கு நீதிமன்றங் களுமே சந்திக்க வேண்டிய சவால்கள், தீர்க்க வேண்டிய குறைகள் என பல்வேறு பிரச் சனைகளுக்குள் தான் உள்ளன. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்டதற்கு சமம் என்றால் இங்கே நம் நாட்டின் நீதிமன்றங்கள் அதை மட்டுமே செய்து வருகின்றன.

இதுவரை 27 மில்லியன் வழக்குகள் இந்திய நீதிமன்றங்களில் நிலுவைகளில் உள்ளன.

இதில் 6 மில்லியனுக்கும் மேற்பட்ட வழக் குகள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் வழக்குகள். ஆனால், இந்த இமாலய கணக்கினாலான வழக்குகளை விசாரிக்க நம் நாட்டில் 16,000 வழக்காடு மன்றங்கள் மட்டுமே இருக்கின்றன.

இன்னும் நிரப்படாத இடங்களாக உச்ச நீதிமன்றத்தில் 7 நீதிபதிகளின் இடம் நிரப்பப்படாமல் உள்ளது. அதே போல் உயர் நீதிமன்றத்தில் 464 நீதிபதிகளின் இடங்கள் நிரப்படாமல் உள்ளன. இதுவே கீழ் நீதிமன்றங் களில் 4166 நீதிபதிகள் இடங்கள்

நிரப்படாமல் உள்ளன. அதாவது நாட்டில் 73,000 மக்களுக்கு ஒரு நீதிபதி என்ற கணக்கில் நீதி வழங்கியாக வேண்டும் என்ற நிலை

**செய்ய வேண்டியது..?**

1) விரைவாக வழக்கை முடிக்கக் கூடிய நீதிபதி அமர்வை ஏற்படுத்தி நிலுவையில் உள்ள வழக்குகளை முதலில் முடிக்க வேண்டும்.

2) தேவையில்லாத வழக்குகளை உயர் நீதிமன்றத்திற்கோ உச்ச நீதிமன்றத்திற்கோ கொண்டு வரும் போது கடுமையாக எச்சரித்து அபராதம் விதிக்க வேண்டும்.

3) நீதிபதிகள் தேவைப்படும் இடங்களை விரைந்து நடவடிக்கை எடுத்து நிரப்ப வேண்டும்.

4) அத்தியாவசிய பொருட்கள் எப்படி விடுமுறையின்றி கிடைக்கிறதோ அவ்வளவு அத்தியாவசிய தீர்வை தரும் நீதிமன்றங்கள் வருடத்தின் 365 நாட்களும் இயங்கவேண்டும். அதிலும் பகுதி நேர கணக்கில் இயக்கப்பட்டால் பிரச்சனை ஓரளவு குறையும்.

5) மிக அதிகமாக நீதிமன்ற கிளைகள் திறக்கப்பட்டு இயக்கப்பட வேண்டும். உயர் நீதிமன்றங்களின் எண்ணிக்கைகள் உயர்த்தப்பட வேண்டும். மேலும் உச்ச நீதிமன்ற கிளைகளை முக்கியமான மாநிலங்களில் உருவாக்க வேண்டும். ஒரு சாமானிய மனிதனுக்கு உச்ச நீதிமன்றம் எல்லாம் எட்டாக்கனி! உச்ச நீதி மன்றம் சென்று ஒரு வழக்கை நடத்த வேண்டும் என்றால் லட்சங்களை மட்டுமே எண்ணுபவராக இருக்க வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தில் வாதாடுகின்ற வழக்கறி ஞர்களின் சம்பளம் மட்டுமே குறைந்த அளவில் 10 லட்சங்களிலிருந்து தான் ஆரம்பம். இப்படியான பட்சத்தில் கூலிக்கு வேலை செய்யும் ஒரு மனிதர் எப்படி உச்ச நீதிமன்றத்தை நாடிட முடியும்..?

இதுவே தான் சார்ந்த மாநிலத்தில் உச்ச நீதிமன்றத்தின் கிளை இருந்தால் தனது நிலை பிரச்சனைகளின் வீரியத்தை உணர்ந்த ஒருவர் எளிதாக இலவசமாக செய்ய முன்வருவார். ஆனால் டெல்லி சென்று என் நிலை என்னவென்று சொல்லவே பல வருடம் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை இதில் எப்படி வழக்காடுவது!

**வேகமாக நீதி பெறும் மகான்கள்..!**

நமது நாட்டின் உச்சநீதிமன்றத்தில் மட்டும் 65,000 வழக்குகளுக்கு மேல் நிலுவையில் உள்ளன. ஒவ்வொரு வழக்கும் ஐந்து ஆண்டு களுக்கு மேலாக நடந்து வருகிறது. ஆனால் நமது உச்ச நீதிமன்றத்தில் சொல்லப்படாத நீதி ஒன்று உள்ளது. வேகமாக விசாரணை நடைபெற வேண்டுமென்றால் அவர் மிகப்பெரும் கோடீஸ் வரராக இருக்க வேண்டும். அல்லது அரசியல் ஆதாயம் நிறைந்த நீதிபதிகளுக்கு காரியம்

ஆகக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**அப்படி விரைவாக நீதி பெற்ற சிலர்...**

**1) அண்டர்வேர்ல்டு தாதா பப்லூ ஸ்ரீவாஸ் தாவா, தலித் சுனஜாவை கொண்றதாக வழக்கு.**

*தண்டனை : ஆயுள் சிறை*

*தண்டனை நாள்: ஜூலை 3,2006*

*மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் : ஜூலை, 12 2006*

*மேல்முறையீட்டின் தீர்ப்பு : விடுதலை, பிப்.23, 2007.*

**2) முன்னாள் ஜார்க்கண்ட் முதலமைச்சர் யிவிவி தலைவர் ஷிபு ஷோரன்.**

*காரணம்: ஷஷினாத் ஜா கொலை வழக்கு.*

*தண்டனை : ஆயுள் தண்டனை, நவம்பர் 28, 2006.*

*மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் : ஜன,24 2007.*

*மேல்முறையீட்டின் தீர்ப்பு : விடுதலை, ஆகஸ்ட் 22, 2007.*

**3) முன்னாள் முதலமைச்சர், INLD தலைவர் ஓம் பிரகாஷ் ஷோதாலா.**

*காரணம் : ஆசிரியர்கள் நியமிப்பதில் ஊழல்.*

*தண்டனை: 10 வருட சிறைதண்டனை, ஜன. 16,2013.*

*மேல்முறையீடு செய்யப்பட்ட நாள்: பிப்,7 2013.*

*மேல்முறையீட்டின் தீர்ப்பு: பிணை வழங்கப்பட்டது. மே 21,2013.*

**4) ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் பெரும் முதலாளிகளான அன்சல் சகோதரர்கள்.**

*காரணம் : உப்கார் தியேட்டர் தீ வைப்பு சம்பவம்.*

*தண்டனை : இரண்டு வருட சிறை தண்டனை, நவ 21,2007.*

*பாதுகாப்பு பிணை கிடைத்தது; 23 நவம்பர் 2007*

*மேல்முறையீட்டின்காரணமாகபின்னர்இந்த தண்டனையை ஒருவருடகாலமாக நீதிமன்றம் குறைத்தது டிசம்பர், 20 2008*

**5) தொழிலதிபர் சஞ்சீவ் நந்தா**

*காரணம் : 1999ல் BMW காரில் மோதி விட்டு ஓடிய வழக்கு.*

*தண்டனை: 5 வருட சிறைவாழ்க்கை , செப்டம்பர் 5, 2008*

*மேல்முறையீடு : தண்டனை காலம் இரண்டு ஆண்டாக குறைக்கப்பட்டது. ஜூலை 21, 2009*

இவர்களை போன்று கோடீஸ்வரர்களாகவும் அரசியல் ஆதாயம் மூலம் நீதிபதிகளுக்க்கு

ஏதேனும் தரக்கூடியவராக இருந்தால் தான் நமக்கும் இதுபோன்ற விரைவு நீதி எல்லாம் என்று

இருக்கும் பட்சத்தில் நாம் எப்படி நீதியை பெறுவது?...

இந்திய நீதிமன்றங்களில் நிகழ்த்தப்பட்ட வேடிக்கையான மற்றும் வேதனையான வழக்குகள்

**1) L.N. மிஸ்ரா கொல்லப்பட்ட வழக்கு**

இவர் இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் இரயில்வே துறை அமைச்சராக இருந்தார். 1975ஆம் ஆண்டு பீகாரில் குண்டு வெடித்ததில் கொல்லப்பட்டார்.

குற்றப்பத்திரிக்கை 1977 ஆம் ஆண்டு பாட்னா நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. பின்னர் 1979ம் ஆண்டு டெல்லிக்கு மாற்றப்பட்டது. எல்லா சாட்சியங்களும்

விசாரணை செய்து முடித்து வழக்கு 2012ல் / ஒருங்கிணைக்கப்பட்டது. இறுதியில் 2014ம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் இவ்வழக்கு நடந்துள்ளது. 20 நீதிபதிகள் இந்த வழக்கை கையாண்டிருக் கிறார்கள். தண்டனை வழங்கப்பட்ட இருவரில் ஒருவர் கொல்லப்பட்டார். இன்னொருவர் 65 வயதை தாண்டி விட்டார். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்டதற்கு சமம் அல்லவா!

**2) பிலிஃபிட் போலி எண்கவுண்டர் வழக்கு**

1991ல் சீக்கிய யாத்ரீகள் அவர்களின் புனித இடங்களை தரிசித்து விட்டு வீடு திரும்பும் போது அவர்கள் சென்ற ஒரு பேருந்து பிலிஃபிட் காவல்துறையால் இடைமறிக்கப்பட்டு அதில்

இருந்த 11 பேரை சுட்டு கொன்றனர். இந்த வழக்கின் தீர்ப்பு 2016ம் ஆண்டு வந்தது.

25 வருடங்களுக்கு பிறகு பெறப்பட்ட தீர்ப்பில் 57ல் 47 பேர் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெற்றனர். இந்த 47 பேரில் 10 பேர் ஏற்கனவே மரணமடைந்திருந்தார்கள்.

### 3) தீவனம் வழக்கு

1991-96 பீகாரில் லாலு பிரசாத் ஆட்சி இருந்தது. அப்போது 'காரா கோடாலா' என்ற 9.4 பில்லியன் ரூபாய் கொண்ட மிகப்பெரும் ஊழல் வெளிச்சத்திற்கு வந்தது.

இதுபோக லாலு பிரசாத் மீது வேறு சில வழக்குகளும் இருந்தது. 1998 ஆம் ஆண்டு லாலு பிரசாத் மீது பதியப்பட்ட வழக்கில் இவர் 4.6பில்லியன் ரூபாய் மக்களிடம் இருந்து ஏமாற்றினார். 370மில்லியன் ரூபாய் பணத்தை அரசாங்க கருவூலத்திலிருந்து தனது தேவைக்காக எடுத்துக் கொண்டதாக 2012ம் ஆண்டு ஒரு வழக்கு பதியப்பட்டது.

ஆனாலும் இன்று வரை பீகாரில் லல்லு பிரசாத் வெளியில் தான் இருக்கிறார்.ஒவ்வொரு முறையும் சிறை செல்லும் போது பிணை வாங்கி வெளி வந்து விடுவார். தற்போது தான் அரசுஅவர் மீதான தண்டனையை உறுதி செய்துள்ளது.

### 4) சல்மான் கான் காரில் இடித்து விட்டு ஓடிய வழக்கு

2002ம் ஆண்டு குடித்து விட்டு வண்டி ஓட்டியதில் சாலையோரத்தில் இருந்த ஒருவர் இறந்து விட்டார். மூன்று பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டு விட்டது என்ற வழக்கு பாலிவுட் நடிகர் சல்மான் கான் மீது போடப்பட்டது.

13 வருடங்களுக்கு பிறகு மே, 2015ல் மும்பையின் கீழ் நீதிமன்றம் 5 வருட சிறை தண்டனை விதித்தது. சல்மான் கான் அதே நாளில் பிணை ஆணையையும் நீதிமன்றத்தில் வாங்கி நீதிமன்றங்களுக்கே சவால் விடுத்தார். டிசம்பர், 2015ம் ஆண்டு மும்பை உயர்நீதிமன்றம் சல்மான் கானை முற்றிலுமாக இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்தது. இப்போது இவர் நாட்டின் ஒலிம்பிக் விளையாட்டின் தூதராகவும் இருக்கிறார். இவர் மீதான வழக்கு உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் தீர்ப்புக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று தெரியவில்லை. கண்டிப்பாக உச்சநீதி மன்றத்திடமும் சவால் தொடுப்பார் என நம்பலாம்.

### 5) 2G ஸ்பெக்ட்ரம் வழக்கு

காங்கிரஸ் ஆட்சி இருக்கும் போது மொபைல் கம்பெனிகளுக்கு குறைந்த விலையில் லைசன்ஸ் தரப்பட்டது. இதில் 1.76 ட்ரில்லியன் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டது. 2012ல் ஸ்பெக்டரம் ஒதுக்கீடு என்பது சட்டத்திற்கு புறம்பானது மற்றும் நியாயமற்றது என கூறி 2008ம் ஆண்டு வழங்கப்பட்ட அத்துனை லைசன்ஸ் களையும் கேன்சல் செய்தது உச்சநீதிமன்றம்.

10 ஆண்டுகளுக்கு பிறகு இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த ட்ரில்லியன் ரூபாய் இழப்புக்கு யார் பொறுப்பேற்பது என்பது குறித்து எந்த நீதிமன்றமும் கவலைப்படுவதில்லை.

### 6) நிலக்கரி ஒதுக்கீட்டு வழக்கு

2004-2009 ம் ஆண்டு காலத்தில் இந்தியாவில் நடந்த மிகப்பெரும் ஊழல். நிலக்கரியை தனியார் கம்பெனிகளுக்கு பிரித்து கொடுக்கப்பட்டதில் முறைகேடு நடந்துள்ளது. கிட்டத்தட்ட 1.86 ட்ரில்லியன் ருபாய் அரசாங்கத்தின் கருவூலத்திலிருந்து எடுக்கப்பட்டது.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் உள்ளது. இன்னும் தீர்ப்பு வர எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று தெரியவில்லை.

### 7) காமன்வெல்த் போட்டி ஊழல்.

2010ம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற காம்ன்வெல்த் போட்டியில் பெரிய அளவில் முறைகேடு நடந்திருப்பதாக ஒருங்கிணைப்பாளர் கல்மாடி மற்றும் ஆறு பேர் மீது சிபிஐ 2011ம் ஆண்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது.

7 ஆண்டுகள் ஆகியும் வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனை பயமின்றி வெளியில் சுதந்திரமாக சுற்றி வருகின்றனர்.

### 8) பாபரி மஸ்ஜித் வழக்கு.

அத்வானி போன்றோர்கள் பாபரி மஸ்ஜித்

இடிப்பில் எந்தவொரு

குற்றமும் செய்யவில்லை என அலஹாபாத் நீதிபன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதை எதிர்த்து சிபிஐ அதிகாரிகள் உச்ச நீதிமன்றம் சென்றனர்.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் வாதத்தை எடுத்துவைக்கும் போது புகழ் பெற்ற பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட வழக்கில் என்று ஆரம்பித்தார். உடனே, உச்ச நீதின்ற நீதிபதி டட்டூ பாபரி மஸ்ஜித் இடிப்பு

புகழ் பெற்றதுமல்ல, புகழ் பெறாததுமல்ல அது ஒரு சாதாரண நிகழ்வு தான் என்றார். இப்படியானவர்கள் அமர்ந்திருக்கும் நீதிமன்றங்களில் எப்படி நீதியை எதிர்பார்த்திட முடியும்?...

### 9) ஹாதியா வழக்கு

மகளின் மன மாற்றத்தை லவ் ஜிகாத், தீவிர வாதிகளுடன் தொடர்பு என கூறி மனு தாக்கல் செய்த ஹாதியாவின் தந்தை அசோகன் அல்ல. அதற்கு பின்னால் இருந்து எப்போதுமே நச்சு கருத்துக்களை மட்டும் பதிவு செய்யும் பாசிச இந்துத்துவ இயக்கங்களும் இல்லை.

ஆனால், 24 வயது பெண் அதோடு அவர் ஒரு மருத்துவர் அவருக்கு தன்னுடைய முடிவை தானே முடிவு எடுக்கும் பக்குவம் இல்லை என்றும் செல்போன்கள் உபயோகப்படுத்தக் கூடாது, கண்காணிக்க ஒரு காவலர் எப்போதும் கட்டாயம் உடனிருக்க வேண்டும் என்று தீர்ப்பு எழுதிய நீதிபதிகளே அதிகபட்ச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பை சொல்ல அதை உச்ச நீதிமன்றம் மறுக்க, இப்படியான பல வினோத தீர்ப்புகளை இந்திய நீதிமன்றங்கள் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றன.

### தற்போதைய நீதிமன்றங்களின் தீர்ப்பு பற்றி நீதிபதிகளின் கருத்து

அலகாபாத் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான B.G.கோல்சே பட்டில் இந்திய நீதிமன்றங்கள் தர்மத்தை காப்பதில் இருந்து தவறி விட்டன. அதற்கு மிகப்பெரிய உதாரணம் பாபரி மஸ்ஜித் உடைய வழக்கு என்கிறார்.

குஜராத் பாபரி மஸ்ஜித் வழக்கில் அலகாபாத் நீதிமன்ற தீர்ப்பு குறித்து அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மார்கண்டேயே கட்ஜூ மற்றும் சுதா மிஸ்ரா அலஹாபாத் நீதிமன்றங் கள் இடும் ஆணைகளால் சாதாரண மனிதர்கள் நீதிமன்றங்கள் மேல் வைத்திருந்த நம்பிக்கையும் தூள் தூளாக போய் விட்டது என்பதை நாங்கள் மெத்த வருத்தத்தோடு தெரிவித்து கொள் கிறோம். அலஹாபாத் நீதிமன்ற நீதிபதிகள் சிலரின் மேல் அவர்களின் நடைமுறை பற்றி சில புகார்கள் வந்தவண்ணமிருக்கின்றன.

நீதிபதிகள் அதே உயர்நீதிமன்றத்தில் தங்கள் சொந்த பந்தங்களை வழக்கறிஞர்களாக பணியாற்றிட வைத்துளார்கள். வழக்கறிஞர் தொழிலை தொடங்கியவுடனேயே இவர்களின் மகன்களும், உறவினர்களும் கோடீஸ்வரர்களாக மாற தொடங்கி விடுகிறார்கள். வங்கி கணக்குகள் ஊதி பெருத்து விட்டன. உல்லாச ஊர்களில் இராஜ பவனி வருகிறார்கள்.

எல்லா நீதிபதிகளும் இப்படியானவர்கள் என நாங்கள் சொல்ல வரவில்லை. சில நீதி பதிகள் தங்களுக்கு எதிராக யாரும் விரலை உயர்த்திடக் கூடாது என்பதில் மிகவும் கவன மாக இருக்கிறார்கள். ஆனால் பலர் நீதிபதிகளு டன் இருக்கும் உறவுகளை வெட்கமின்றி பயன் படுத்தி கொள்கிறார்கள். இன்னும் சில நீதிபதிகள் மீது மிகவும் கேவலமான குற்றச்சாட்டுகள் வந்துள்ளன. நாங்கள் இந்த நீதிமன்றங்களின் மீது தலைமை நீதிபதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இதில் திருந்தவே மாட்டோம் என கூறிக்கொள்ளும் நீதிபதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுங்கள் தேவையானால் இடமாற்றம் செய்யுங்கள் என்கின்றனர்.

இந்தியாவில் ஜனதா தளம் ஆட்சியில் இருந்த போது நாட்டின் சட்ட அமைச்சராக இருந்தவர் ஷாந்தி பூஷன். இவர் நம் நாட்டின் இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிகளை பற்றி 2010ல் கூறும்போது, இதுவரை 16 நீதிபதிகள் தலைமை நீதிபதிகளாக இருந்திருக்கின்றார்கள். இவர்களில்

8 பேர் லஞ்சம் வாங்கியவர்கள். இரண்டு பேரின் நன்மையை பற்றி எதுவும் சொல்ல முடியாது. ஆறு பேர் மட்டுமே நேர்மையான



வர்கள் என குறிப்பிட்டார். உண்மையில் நம் நாட்டின் நீதிபதிகளின் அதுவும் தலைமை நீதிபதிகளின் நிலையே இப்படித்தான் இருக்கிறது.

இந்த நிலையைக் கொண்டு மக்களின் நம்பகத்தன்மையை பெற முடியுமென்று நினைப்பது எவ்வளவு பெரிய முரண்பாடு.

இந்தியாவில் பார் கவுன்சில் நடத்திய ஆய்வின் அடிப்படையில் பாதிக்கு பாதி வழக்கறிஞர்கள் போலியானவர்கள். (Hindustan Times 24/01/2017) பாதிக்கு பாதி போலி வழக்கறிஞர்களை கொண்ட இந்திய நாட்டில் பாதிக்கு பாதி கூட நீதி கிடைக்காமல் இருக்கிறதே!

### பெண்களுடைய பாதுகாப்பில் கவனம் செலுத்தாத நீதிமன்றம்.

2011ம் ஆண்டின் கணக்கின் படி 24,206 கற்பழிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது ஒரு 20நிமிடத்திற்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள். இந்திய காவல்துறையின் தகவல் படி கற்பழிப்பு சம்பவங்களில் பாதிக்கப் பட்ட பெண்களில் 10ல் 4 பேர் தான் வழக்கு பதிவு செய்ய முன் வருகின்றனர்.

இவ்வளவு கஷ்டத்திற்கு பிறகு வந்து வழக்கு பதிவு செய்தாலும் பெரும்பாலான வழக்குகள் குற்றவாளிகள் இல்லை என்றே தீர்ப்பு தரப்படுகிறது. காரணம், நீபதிகள் சொல்வது நீதிமன்றத்திற்கு சரியான சாட்சியங்கள் தான் அவசியம் ஆனால் காவல்துறையினர் உறுதியான சாட்சியங்களுடன் வந்து நிற்பதில்லை என்கின்றனர்.

கற்பழிப்பு சார்ந்த ஒரு சராசரி வழக்கானது முடிய 5லிருந்து 10 வருடம் வரை ஆகும் என நிபுணர்கள் சொல்கிறார்கள். இந்த 5 முதல் 10 வருடம் வரை கற்பழிப்பு வழக்கில் பாதிக்கப் பட்டுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தின் நிலை என்ன? எந்த கேள்விக்கும் பதிலில்லாத சொல்ல முடியாத சட்டங்களை வைத்து சமீபத்தில் ஒரு தீர்ப்பு, மாற்றுத்திறனாளி பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக கூறி ஒருவனுக்கு விசாரணை நீதி மன்றம் தண்டனை வழங்குகிறது. இந்த வழக்கு உயர் நீதிமன்றத் திற்கு செல்ல டெல்லி உயர்நீதி மன்றம், சாட்சிகள் போதுமான தாக இல்லை எனக்கூறி அவனை விடுதலை செய்கிறது. அடுத்து உச்ச நீதிமன்றம், விசாரணை நீதி மன்றம் சொன்ன தண்டனையே சரியானது என சொல்லி தீர்ப்பு வழங்குகிறது.

இந்த தீர்ப்பின் அடுக்குகள் சில நேரம் உச்ச நீதிமன்றத்தில் இருந்து விசாரணை நீதி மன்றம் வரை முரண் கொண்டதாகவே பல வழக்குகளில் அமைகிறது. ஆனால், ஒரு வழக்கை எதிர்கொள்ள விசாரணை நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றம் வரை எடுத்து செல்ல சாமானிய மனிதன் தன் சொத்தில் பாதியை, முழுமை யாகவும் இழக்க வேண்டியிருக்கும். அதுவும் உதவிகள் கூடிய வழக்குகள் மட்டுமே உச்ச நீதிமன்றத்தை எட்டிப் பார்க்கிறது.

தற்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா சம்பந்தமான வழக்கை அவரே தலைமை தாங்கி விசாரிக்கிறார். தன் மீதான குற்றத்தின் விசாரணைக்கு தானே விசாரித்து தானே தீர்ப்பெழுதும் நிலை நம் உச்ச நீதிமன்றங்களில் நடைபெறுவதை நாம் என்ன சொல்வது?..

### ஒய்வு பெற்ற உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ராஜேந்திர மல் லோதா கூறும் போது

நீதித் துறையில் ஊழலே இல்லை என்று யாராவது கூறினால், அவர் நேர்மையான பதிலைச் சொல்லவில்லை என்பேன். நீதித் துறையில், வேண்டியவர்களுக்கு அறவே சலுகை காட்டப் படுவதில்லை என்று யாராவது கூறினால், அவர் நேர்மையற்றவர் என்றே கூறுவேன் என்றார்.

அதிகாரத்தின் உச்சபட்சமாக கருதப்படும் நீதிமன்றங்களுள் இருக்கும் குழப்பங்களும் வினோதமான செயல்பாடுகளையும் முதலில் விசாரணை செய்து சரி செய்ய முனைய வேண்டும். பிறகு அவர்கள் நீதி எது என தீர்ப்பு சொன்னால் சிறப்பாக இருக்கும்.

- அபூ சித்திக்.



# எல்லாம் திப்புசுல்தான்

2012ஆம் ஆண்டு நமது அண்டை மாநிலமான கர்னாடகாவின் முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா பாரதீய ஜனதா கட்சியை விட்டு வெளியே வந்தார். அன்றுவரை அந்தக் கட்சியின் கர்னாடகாவின் காவலர் எனக் காட்டப்பட்டவர், போற்றப் பட்டவர்.

பாரதீய ஜனதா கட்சியை விட்டு வெளியே வரும்போது திப்புசுல்தான் அணிவதைப் போன்ற தலைக்கவசத்தை அவர் அணிந்திருந் தார். கையில் திப்புவின் வாளைப் போன்ற தொரு வாளைக் கையில் வைத்து கம்பீரமாகக் காட்சித்தர முயற்சி செய்தார்.

இவற்றோடு அவர் புதியதாக ஆரம்பித் திருந்த கட்சி "ஜனதா பக்ஸ்" -இன் மேடையில் வேகமாக ஏறினார். திப்புசுல்தானின் ஆட்சி யின் மாட்சியை வானாளவப் புகழ்ந்தார். ஆமாம் முஸ்லிம்களைத் "தாஜா" பண்ணியாக வேண்டும். அவர்களின் வாக்குகளைப் பெற்றாக வேண்டும் என்ற நிர்பந்தம் அவருக்கு அன்று.

இந்த வெட்கங்கெட்ட எடியூரப்பாதான் இரண்டாண்டுகளுக்கு பின்னர் மீண்டும் "பி.ஜே.பி." பாரதீய ஜனதா கட்சியின் கன்னட மாநில தலைவர். இப்போது திப்பு ஜெயந்தி எனப்படும் திப்புசுல்தான் பிறந்தநாள் விழாக் களை எதிர்ப்பதில் முன்னணியில் நிற்கின்றார். திப்புச் சுல்தான் பிறந்த நவம்பர் 10-ம் நாளை அவரால் பொறுத்துக் கொள்ளவே இயல வில்லை.

இந்தப் பிறவிகள் வரலாற்று நாயகர்களைத் தங்கள் விருப்பம்போல் வளைத்துக் கொள்ள லாம் என நினைக்கின்றார்கள். வயிறு பிழைக்க என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்.

**ஒரு கலாச்சார புருஷனை வில்லனாகக் காட்டுகின்றார்கள்**

தீரர் திப்புசுல்தானின் வீர மரணத்தை விரித் துரைக்கும் பாடல்கள் பல (லாவானிஸ்) 19ஆம் நூற்றாண்டு வரை கன்னட இலக்கியங்களின் நாட்டுப்புறப் பாடல்களில், பவனி வந்து கொண்டே இருந்தன. மைசூர் பகுதியில் இந்தப் பாடல்களைப் பாடாத நாட்களே இல்லை எனலாம். இந்தப் பாடல்கள் கேட்போர் காது களைப் பிணிக்கும், நெஞ்சங்களில் வீரத்தை விதைக்கும்.

திப்பு சுல்தான் - மைசூர் இராஜியத்தை *1750-1799* ஆட்சி செய்தவர். அங்கு ஒவ்வொரு வரும் பெருமையோடு பேசிக்கொள்ளும் வீரர். திப்பு சுல்தான் செரு முகத்தில் வீரமரணமடைந்த *1799* மே-*4*. ஒராண்டுக்குள் இந்த நாட்டுப்புற பாடல்கள் புழக்கத்தில் வந்துவிட்டன. இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் நாட்டுப்புற பாடல்கள் வேறு எந்த கன்னட மன்னருக்கும் இல்லை. ஆனால் ஆங்கிலேயர்களுடன் போரிட்டு வீர மரணமடைந்த கிராமவாசி களுக்கு மட்டும் இந்த நாட்டுப்புறப் பாடல்கள் இருக்கின்றன.

அதேபோல் திப்புவின் தியாகத்தை ஊரறிய ஆயிரக்கணக்கான நாடகங்கள் அரங்கேற்றப் பட்டன. திப்புவின் வீர வாழ்க்கையை மக்க ளுக்கு யதார்த்தமாக காட்டுவதே இவற்றின் நோக்கம். இது 19ஆம் நூற்றாண்டை கடந்து 20 ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது.

வரலாற்று நூல்களிலும் மக்களிடையே அதிகமாகப் புழக்கத்திலிருக்கும் இலக்கியங் களிலும் அவர் ஒரு பெரும் வீரபுருஷன், சமர்க் களத்தில் சாவை சந்தித்தவர் என்ற அடிப்படை யில் அன்று திப்புவைப் பாராட்டியது ஆர்.எஸ். எஸ்.

கன்னட வீரர்களின் வரலாற்றுச் சுருக்கம் என திப்புவைப் பற்றி 1970களில் ஆர்.எஸ்.எஸ். என்ற ராஷ்ட்ரிய சுயம் சேவக் வெளியிட்ட வரலாற்றுத் தொகுப்பிலும் திப்புசுல்தானை பெரிதாகப் போற்றுகின்றார்கள் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள். இது அவர்கள் வெளியிட்ட "பார்த்தா பாரதி" என்ற தொடர் வரலாற்றுத் தொகுப்பின் ஒரு பகுதியாக வந்தது. அப்போதெல்லாம் ஆர்.எஸ்.எஸ். வரலாற்று ஆசிரியர்கள் திப்பு சுல்தானை பெரும் தேச பக்தர் என்றும் தியாகி என்றும் புகழ்ந்தனர்கள். இவற்றிற்கெல்லாம் வீரமகன் திப்பு சுல்தானுக்கெதிராக ஒரு சொல் கூட இல்லை. மாறாக புகழாரங்களே அதிகம்.

தற்போது ஆர்.எஸ்.எஸ்.-ஐ சேர்ந்த அதாவது வலது சாரியைச் சார்ந்தவர்கள் திப்புவை ஒரு தீவிர முஸ்லிம் ஆதரவாளர் எனக் காட்டிட படாத பாடுபடுகின்றார்கள். அவர்கள் அவரை வைத்து அரசியல் நடத்தி வயிறு பிழைக்க விரும்புகின்றார்கள்.

**முக்கிய குற்றச்சாட்டுகள்**

இவர்கள் திப்புச் சுல்தான் மீது சொல்லும் குற்றச்சாட்டுகளில் முந்திக்கொண்டு நிற்பது திப்பு கூர்க் பகுதியில் ஆயிரக்கணக்கான "கொடவாஸ்" என்ற இனத்தைச் சார்ந்த மக்களைக் கொன்றுவிட்டார். அதோடு மங்களூர் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான கத்தோலிக்க கிருஸ்தவர்களைக் கட்டாயப்படுத்தி இஸ்லாத் தில் இணைத்து விட்டார் என்ற பசப்புரை களாகும்.

மங்களூர் பகுதிக்கு திப்பு சென்றார் என்பதும் அங்கு ஒரு கிளர்ச்சியை அடக்கினார் என்பதும் உண்மை. ஆனால் அதன் பின்புலங்கள் பொய்யாகப் புனைக்கப்பட்டு புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

அன்றைய நாட்களில் மங்களூர் பகுதியை ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்திட தொடர் முயற்சிகளை மேற் கொண்டு வந்தார்கள். இதற்காகக் கிழக்கிந்திய கம்பெனியினர் பல திட்டங்களைத் தீட்டி னார்கள். அவற்றை திப்பு சுப்புசுல்தான் தெரிந்து கொண்டார்கள். மங்களூர் பகுதியை ஆங்கிலே யர்கள் கைப்பற்றினால் (இந்தியாவுக்கு) ஒரு புது ஆபத்து வந்துவிடும். அதனை தடுத்தாக வேண்டும் தயாராகுங்கள் என அண்டை நாட்டு ஆட்சியாளர்களான மராட்டிய ஆட்சி யாளர்களுக்கும், ஹைதராபாத் நிஜாமுக்கும் கடிதங்களை எழுதி அவர்களை அணி திரட்டி னார் திப்புசுல்தான். தானும் மங்களூர் பகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்தார்.

ஆங்கிலேயர்களுடன் அணி சேர்ந்து விடக்கூடாது என எச்சரித்தார். ஆனால் அங்கு கிருஸ்தவத்தை ஏற்றுக் கொண்டிருந்த சிலர் கிளர்ச்சியில் ஆங்கிலேயர்களின் ஆலோசனை, ஆயுதங்கள் ஆகியவற்றுடன் கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். திப்பு அவர்களை அடக் கினார். அங்கு யாரையும் அவர் மதமாற்றவில்லை. அவருக்கு அது நோக்கமுமில்லை. அவர் ஏற்றுக் கொண்டிருக்கும் இஸ்லாம் அதற்கு இடந்தராது என்பதை அவர் நன்றாகவே அறிவார்.

இவற்றால் ஆங்கிலேயர்களின் சதியும் மங்களூரை தங்கள் வசப்படுத்தும் திட்டங்களும் தோற்றுப் போய்விட்டன.




தங்கள் தோல்வி அதனால் விளைந்த ஆதங் கங்கள் இவற்றை திப்புசுல்தான் மீது பழிபோடு வதன் மூலமும் அவரை இழித்துரைப்பதன் மூலமும் தணித்துக் கொண்டார்கள். இதனால் இயலாதவர்கள் இட்டுக்கட்டிய கதைதான் திப்பு ஓர் முஸ்லிம் மத வெறியர் என்ற கதையும். அங்கு கிருஸ்தவர்களைக் கட்டாயப்படுத்தி இஸ்லாத்தை ஏற்றிடச் செய்தார் என்ற பொய்யுரையும் (இதனை சங்கப்பரிவாரத்தினர் அப்படியே அப்பிப் பிடித்துக்கொண்டார்கள்)

**தொடர்ந்த ஆங்கிலேயர்களின் சதி**

ஆங்கிலேயர்கள் பரப்பிய பொய்யுரையின் அடிப்படையில் அவர்கள் மங்களூர் மக்களை திப்புவின் கெடுபிடிகளிலிருந்து காப்பாற்றிடும் இரட்சகர்களாகத் தங்களைக் காட்டிடவும், அதன் வழியாக மங்களூர் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கீழ் கொண்டு வந்திடவும் முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதனை இடைவிடாமல் திப்புசுல்தான் எதிர் கொண்டார். ஏமாந்தார்கள் ஆங்கிலேயர்கள். ஆனால் அனைத்து ஏமாற்றங்களையும் திப்பு வின் மீது அள்ளிச் சொரியும் அவதூறுகளால் மறைத்தார்கள்.

**இன்றைய நாள் பாசிஸ்ட்டுகள்**

அந்த அவதூறுகளை பற்றிப் பிடித்துக் கொண்டு அரசியல் நடத்துகின்றார்கள் இன்றைய பரிவாரங்கள்.

இந்த உண்மைகளை திப்புவின் வரலாற்றை ஆய்வு செய்த ஆய்வாளர் மைக்கேல் ஷோராக்கோ "Michel Soracoe" என்பவர் நமக்கு வெளிச்சம் போட்டு காட்டுகின்றார். அத்துடன் உண்மையான வரலாற்றில் அக்கறையுடைய பலரையும் அவர் எச்சரிக்கின்றார். அந்த எச்சரிக்கை

**வரலாற்று ஆய்வாளர்கள் அறிவுரை**

திப்புவை பூதமாகக் காட்டும் இலக்கியங்கள், கேலிச்சித்திரங்கள், குழந்தைக் கதைகள் இவை ஏராளமாகப் புழங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை மக்கள் கவனிக்க வேண்டும். இவற்றில் திப்பு சுல்தான் கட்டாயமாக மதம் மாற்றினார், மைசூர் பகுதில் 8000 கோயில்களை இடித்தார் என்றெல்லாம் பொய்கள் தாராள மாகப் புழக்கத்தில் விடப்படுகின்றன.

ஆங்கிலேயர்களின் பொய்களை விஞ்சும் விஷயங்கள் வீதியெல்லாம் விற்பனை செய்யப் படுகின்றன. இவை பொய் அவற்றை நம்ப வேண்டாம் என எச்சரிக்கின்றார்கள்.

வரலாற்று ஆய்வாளர் : "Kate Brittlebank" கேற்றிபிரிட்டில்பாங்க்

இவர் மாவீரன் திப்புசுல்தான் பற்றி விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். அவர் கூறுகின்றார்

"திப்பு சுல்தான் 1750 - முதல் 1799 வரை ஆங்கிலேயர்களுடன் இடைவிடாமல் போர் செய்து கொண்டே இருந்தார். ஆனால் கூர்க் பகுதியிலிருந்தும் (கொடவால் வாழ்ந்த பகுதி) மங்களூர் பகுதியிலிருந்தும் அவருக்குத் தலை வலிகள். அந்தப் பகுதி மக்கள் ஆங்கிலேயர் களுக்கு உளவு சொல்லுவதும் உதவி செய்வது மாக இருந்தார்கள். அதனால் அவர்களை அடக்கிப்போடுவதும் ஒரு வேலையாக இருந்தது. இதை வைத்துக்கொண்டு கிளர்ச்சியாளர்களைக் ஹீரோக்களாகவும் திப்புசுல்தானை வில்லனாகவும் காட்டுகின்றார்கள்.

ஆங்கிலேயர்களிடம் விலைபோய் விட்டவர் களை, ஆங்கிலேயர்களுடன் இணைந்து நம்மவர் களுக்கு எதிராக ஆயுதந் தாங்கி வந்தவர்களை அடக்கிப் போட்டதை அடாத செயல் என்று புனைந்துரைப்பதா என ஆதங்கப்படுகின்றார்.



வரலாற்று ஆய்வாளர் கேற்றி பிரிட்டில் பேங்க் இவையெல்லாம் 1750 முதல் 1799 வரை தொடர்ந்து ஆங்கிலேயர்களுடன் போர் செய்து கொண்டிருந்தபோது நடந்தவை என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும் என்கிறார்.

திப்புசுல்தானை குறை சொல்பவர்கள் ஒரு முக்கிய கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டும். இராஜ ராஜ சோழனையும் கிருஷ்ணராஜ உடையாரையும் மிகப்பெரும் போர் வீரர்கள் எனப் போற்றுகின்றோம். ஆனால் இவர்களால் கொல்லப்பட்டவர்கள், பலியாக்கப்பட்டவர்களைப் பற்றி நாம் பேசுவதே இல்லை. இவர்கள் நடத்திய போரில் கொல்லப்பட்டவர்களை நியாயமானதே என எடுத்துக் கொள்கின்றோம்.

மாறாக கொல்லப்பட்டவர்களை ஹீரோக் களாகவும் இவர்களை வில்லன்களாகவும் எடுத்துக் கொள்வதில்லை.

ஆம்! நமது பார்வைகள் மாச்சர்யமிக்கவை. இவர்களைப் போல் இன்னும் பல மன்னர்களைக் குறிப்பிடலாம். தேவையானால் இவர்களால் கொலை செய்யப்பட்டவர்களின் சார்பில் பேசி இவர்களை வில்லன்களாகக் காட்டலாம். ஆனால் அதைச் செய்ய வேண்டும் என நினைப் பதில்லை.

இப்போது திப்புசுல்தானை வில்லனாகக் காட்டிடவேண்டும் என்பதற்காக அன்றைக்கு நம் மீது அநீதிகளையும் கொடூரங்களையும் புரிந்தவர்களுக்காக பரிந்து பேசுகின்றோம். இது என்ன நியாயம்?

இந்திய பாசிஸ்ட்டுகள், வலது சாரிகள் இவர்களின் பார்வையில் நாம் வரலாற்றைப் பார்த்தால் நாம் பல நல்லவர்கள் தியாகிகள் இவர்களைப் பற்றிய யதார்த்தங்களையும் அவர்களின் ஆளுமையிலிருந்து நாம் படித்திட வேண்டிய பாடங்களையும் படிப்பினைகளை யும் பெற தவறி விடுவோம். இவற்றை புறக்கணித் தவர்களாவோம்.

தியாகி திப்புவின் ஆட்சிக் காலத்தில் இராஜாங்கப் பரிபாலனம், பார்சி, கன்னடா, மராத்தி ஆகிய மொழிகளில் நடந்தது. அவருடைய முக்கிய அமைச்சர்களெல்லாம் பிராமணர்களாகவே இருந்தார்கள். அவர் கோயில்களுக்கும் மடாலயங்களுக்கும் அள்ளித் தந்த மானியங்கள் நன்றாகவே பதியப்பட்டி ருக்கின்றன.

10 நாள் "தசரா" கொண்டாட்டம் இன்றளவும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது. அதில் உடையார் குடும்பத்தை சார்ந்த ஒருவரே தலைமைத் தாங்கி வருகின்றார். இந்த விழாக்கள் அவை வந்த வரலாறு இவற்றில்



தீரர் திப்புசுல்தான் அன்றைய நிஜாம் களுக்கும் மராட்டிய மன்னர்களுக்கும் எழுதிய கடிதங்கள் அவர் ஆங்கிலேயர்களை நன்றாகப் புரிந்து வைத்திருந்தார் என்பதைப் பறைசாற் றும். ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்குள் தலையெ டுக்கும் பேராபத்து என்பதை அனைவருக்கும் புரிய வைத்தார்.

அதேபோல் இந்தியாவின் ஆட்சி ஆங்கி லேயர்களின் கைகளுக்குப் போய்விட்டால் இந்தியாவின் எதிர்காலம் ஒட்டுமொத்தமாகப் பாழ்பட்டுப்போகும் என்பதையும் அறிந்தோர் அனைவருக்கும் அறிவுறுத்தினார். இவையெல் லாம் ஆங்கிலேய ஆபத்துகள் அவற்றை ஆதிமுதலே தெரிந்துகொண்டு விடுதலைப் போரை முதன்முதலில் தொடங்கியவர்களின் வரிசையிலே அவரை வரலாறு நிறுத்துகின்றது.

**விஞ்ஞான வித்தகர் திப்பு**

தன்னுடைய இராணுவ தளவாடங்களை நவீனப்படுத்திட வேண்டும், புதியனவற்றையும் புதிரானவற்றையும் அவற்றில் இணைத்திட வேண்டும் என்பதில் அவர் காட்டிய ஆர்வம் அக்கறை இவை விஞ்ஞானிகளையும், பொறியி யல் வல்லுநர்களையும் மலைக்கச் செய்கின்றது.

இன்றைய நாட்களில் அரசு நிர்வாகங்கள் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற வருவாய் அமைப்பை பார்ப்பவர்கள் திப்புவைப் பாராட்ட மலிருப்பதில்லை. அரசு வருவாய் வரக்கூடிய

எங்கேயும் திப்புசுல்தான் கட்டாய மதமாற்றம் செய்தார் என்ற பேச்சே எழவில்லை. இவற்றின் வரலாற்றில் இடம்பெறவில்லை.

வீரமகன் திப்பு சுல்தானின் ஆட்சி பல்வேறு திருப்பங்கள், மாற்றங்கள், புதிய திட்டங்கள் வரலாற்றில் அன்றுவரை இல்லாத வளர்ச்சித் திட்டங்கள் இவற்றால் பின்னப்பட்டது. அவரை முறை யாக படிப்பவர்கள், தெரிந்தவர்கள் யாரும் அவரை மத வெறியர் எனக் கூறிட முடியாது.

**எங்கே தவறு நடக்கின்றது?**

வலது சாரிகளின் கருத்துக் களில் மட்டுமே நாம் கவனம் செலுத்தினால் திப்புசுல்தானை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாதவர்களாக ஆகிவிடுவோம்.



வடிகால்களை அவர் செம்மையாகவும் நேர்த்தியாகவும் கட்டமைத்து வைத்திருந்தார்.

**கல்விமான் திப்புசுல்தான்**

திப்புசுல்தான் தனக்கென ஓர் நூலகத்தை வைத்திருந்தார். அதில் (2000) இரண்டாயிரத் திற்குமேல் நூல்கள் இருந்தன.

இதனை ஆங்கிலேயர்கள் ஓர் அறிவுக் கருவூலமாகக் கண்டார்கள். அந்த நூல்களை லண்டனிலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திற்கும் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்திற் கும் எடுத்துச் சென்றார்கள். அத்தோடு "Fort Williams College" வில்லியம் கோட்டையிலுள்ள கல்லூரிக்கும் ராயல் கல்லூரி கல்கத்தாவிற்கும் மாற்றினார்கள்.

**கன்னட மாநிலம் ஏன்?**

இன்றைய வலதுசாரிகள் கன்னட மாநில அரசு ஏன் திப்புவின் பிறந்த நாளைக் கொண்டாடக் கூடாது என்கின்றார்கள் என்றால், திப்புவின் வீரதீர செயல்களும் அறிவாற்றலும் ஆட்சியின் மாட்சியும் மக்களுக்குத் தெரிந்துவிடும். அதனால் திப்புவை மக்கள் தங்கள் நாயகனாக நெஞ்சில் நிறுத்துவார்கள். இதனால் நமது வலதுசாரிகளின் அரசியல் பிழைப்பும், வயிற்றுப் பிழைப்பும் அழியும்.

இதே காரணத்திற்காகத்தான் இவர்கள் பசாவத் ஜெயந்தியையும் - பசாவத் என்பவர் பிறந்த நாளையும், (பாசவ ஜெயந்தி) (கனக ஜெயந்தி) கனகாவின் பிறந்த நாள் (வால்மிகி-ஜெயந்தி) வால்மிகி (தலித் தலைவர்) ஜெயந்தி ஆகியவற்றையும் கொண்டாட மறுக்கின் றார்கள்.

காரணம் இவர்களின் பிறந்த நாட்கள் கொண்டாடப்படுமேயானால் இந்த ஜாதிக் கொடுமை எதிர்ப்பாளர்கள் (சனாதான) ஜாதி அடுக்குமுறைகளுக்கு எதிராக தொடுத்தப் போர்களும் சந்தித்த அடக்குமுறைகளும் மக்கள் மன்றத்தில் நினைவுக்கு வரும். அப்போது இவர்களின் பாசிச பாசறையில் அந்த மக்கள் இணைய மாட்டார். உடைத்துக்கொண்டு இந்து மதத்திலிருந்து போய்விடு வார்கள். பலர் பிற மதங்களை ஏற்பார்கள்.

அத்தோடு இந்தத் தலைவர்கள் தங்கள்



மக்களுக்காக அரசிடம் கோரிய இட ஒதுக்கீடு போன்ற போராட்டங்கள் மீண்டும் எழுச்சி பெறும்.

ஆக அரசுகள் சிலருக்கு பிறந்தநாள் விழாக் களை கொண்டாட வேண்டும். பலருடைய பிறந்த நாட்களை புறக்கணிக்க வேண்டும் என்பவை அரசியல் புரட்டுகள் நம்மிடம் எடுபடாது.

Source : Article by சந்தன் கவ்டா
Michel Soracoe
Also : The Hindu Nov - 9, 2016
தமிழ் வடிவம் MGM


இப்போது பரபரப்பான விற்பனையில்




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்புக்கு : 8148129887

# திப்புவால் பலன்பெற்ற சிருங்கேரி மடம்!

திப்பு 1790 முதல் 1799இல் இறக்கும் வரை சிருங்கேரி சங்கர மடத்திற்கு இருபத்தியொரு கடிதங்கள் எழுதியிருந்தார். அவை அனைத்தும் பழைய கன்னட மொழியிலானது. அக்கடிதங்கள் அனைத்தும் இன்றும் சிருங்கேரி சங்கர மடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு எழுதப் பட்ட பதில் கடிதங்கள் அனைத்தும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தன. திப்புவிற்கு ஓரளவு சமஸ்கிருதம் தெரியும். எனினும் தன்னுடைய பார்ப்பன அமைச்சர்கள் மூலம் திப்பு அவற்றைப் படித்து அறிந்து கொண்டு சங்கர மடத்திற்கு தேவைப் பட்டபோதெல்லாம் உதவிகளைச் செய்துள்ளார். இந்தக் கடிதங்கள் முழுவதும் மைசூர் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திப்பு சங்கர மடத்திற்குக் கடிதம் எழுதும் போது ஒவ்வொரு முறையும் மிகுந்த மரியாதை கொடுத்து பணிவான வணக்கத்துடன் எழுதுவார்.

திப்பு 1790இல் சிருங்கேரி சங்கராச்சாரிக்கு எழுதிய முதல் கடிதத்தில் சிறீமத் பரமாம்ச பரிவர ஆச்சாரிய சிருங்கேரி சச்சிதானந்த சாமிகளுக்குத் திப்புவின் வணக்கங்கள் என்றுதான் தொடங்கியுள்ளார்.

தன் நாட்டு மக்களைப் பாதுகாக்க ஈசுவரனை வேண்டும்படி அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். 1791இல் மராட்டிய தளபதி பரசுராமபாகு என்பவன் தலைமையில் சிருங் கேரி சங்கரமடம் கொள்ளை அடிக்கப்பட்டது. அப்போதே சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் களவாடப்பட்டன. அத்தோடு நில்லாமல் சாரதா தேவியின் சிலையையும் புரட்டிப் போட்டான் அவன்.

அங்கிருந்த பார்ப்பனக் குருக்களையும் கொன்றான் அந்த மராட்டிய தளபதி. கார்கிலாவுக்கு ஓடி ஒளிந்து கொள்ள வேண்டிய நிலை சங்கராச்சாரிக்கு அன்று ஏற்பட்டது.

கார்கிலாவிலிருந்து தமக்கு உதவும்படி திப்புவிற்குக் கடிதம் கொடுத்தனுப்பி இருந்தார் சிருங்கேரி சங்கராச்சாரி. (சிருங்கேரி சங்கர மட கடித எண்கள் 54,55, New History of Marathas by sardesi G.S. Volume III P.180)



அக்கடிதத்திற்கு திப்பு பதில் கடிதம் எழுதி உள்ளார் அவை வருமாறு.

புனித இடங்களை அழிப்பவர்கள் தங்களது தீய செயல்களுக்கான பலனை அனுபவிப்பார்கள். குருவுக்குத் தீமை செய்பவர்களுக்கு அழிவே உண்டாகும். சாரதா பீடம் மீண்டும் அமைய 200 ரஹாடி ரொக்கமாகவும், 200 ரஹாடி பொருட்களாகவும் 200 ரஹாடி தானியமாகவும் வழங்கியுள்ளேன்.

மேலும் நிதி தேவையெனில் கொடுக்கும் படி கிராம நிர்வாக அலுவலர்க்கு உத்தரவிட்டுள் ளேன் என திப்பு சிருங்கேரி சங்கராச்சாரிக்கு எழுதி உள்ளார். (திப்புவின் கடித எண் 47)

சிருங்கேரி சங்கராச்சாரி மீண்டும் உதவி கேட்டு திப்புவிற்குக் கடிதம் கொடுத்து அனுப்பி யிருந்தார். அதைப் பெற்றுக் கொண்ட திப்பு, சுவாமிகள் உங்கள் கடிதம் வேலூர் வெங்கட்ராம ஜோய்ஸ் மற்றும் அகோபில சாஸ்திரிகள் மூலம் கிடைத்தது. செய்தியை தெரிந்து கொண்டேன்.

உங்களுக்காகப் பல்லக்கு ஒன்று அனுப்பி உள்ளேன். உங்களுக்கு மேலும் நிதி உதவி அளிக்கும் படி நகர நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன் என எழுதியுள்ளார். (திப்புவின் கடித எண்48)

நரசிம்ம சாஸ்திரி மூலம் சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு மீண்டும் கடிதம் கொடுத் தனுப்பப்பட்டது. அக்கடிதத்தை பெற்றுக்

கொண்ட திப்பு, 200 ரஹாடி நெல் மற்றும் சாரதாதேவிக்கு அணிவிக்க விலையுயர்ந்த பட்டு புடவையையும் மேலாடையையும், சங்க ராச்சாரியின் சொந்த பயன்பாட்டிற்கு விலை யுயர்ந்த இரண்டு சால்வைகளையும் அசாப் என்பவர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். (திப்புவின் கடித எண் 49)

சிருங்கேரி சங்கராச்சாரி மீண்டும் உதவி கேட்டுத் திப்புவிற்குக் கடிதம் எழுதி உள்ளார். அக்கடிதத்தை பெற்றுக் கொண்ட திப்பு, நாராயணன் என்பவர் மூலம் யானை ஒன்றை யும் புதிதாக வெளியிட்ட நாணயங்கள் பலவற்றை யும் கொடுத்தனுப்பி உள்ளார். அவை வருமாறு:

| நாணயத்தின் பெயர் | எண்ணி. | மதிப்பு |
|---|---|---|
| 1. ஹைதர் மகாரி | 50 | 100 |
| 2. அபிடி | 100 | 50 |
| 3. பாகபி | 200 | 500 |
| 4. பாகேநலுக்கு | - | 700 |
| 5. பொடைக்கி நாசி அகமதி | | 580 |
| 6. சிக்கர் | 10 | 80 |
| 7. பீமாரி | 10 | 40 |
| 8. குடபாகே | 3 | 300 |

இதனுடன் கூடுதலாக ரூ.500 சேர்த்து அனுப்பி வைத்தார். அன்னை சாரதா தேவியின் கோவிலை விரைவில் கட்டி முடித்துக் குட முழுக்கு நடத்த வேண்டிக் கொண்டார். (திப்புவின் கடித எண் 50) அதே கடிதத்தில் திப்பு மேலும் எழுதி உள்ளதாவது:

1000 பார்ப்பனர்களை அழைத்து 40 நாட் களுக்கு சாஸ்திரா சண்டி ஜபம் செய்ய வேண்டிக் கொண்டார். இதற்கான முழு செலவையும் தாமே ஏற்றுக் கொள்வதாக எழுதியுள்ளார்.

நாட்டின் எதிரிகளை அழிக்க இந்த ஜபம் பயன்படுமென திப்பு சங்கராச்சாரிக்கு எழுதி உள்ளார். கடித எண்கள் 51, 52, 53 ஆகியவற் றிலும் சாஸ்திரா சண்டி ஜபம் நல்ல முறையில் நடத்துவது குறித்த ஏற்பாடுகளைப் பற்றியே எழுதி உள்ளார்.

கடித எண் 54 இல் சாரதா தேவிக்கு மூன்று கால பூசையும் தவறாமல் நடத்தும்படி வேண்டிக் கொண்டுள்ளார். இந்தக் கடிதம் எழுதிய போதும் சங்கராச் சாரி பயணம் செய்ய வேலைபாடுகள் மிகுந்த பல்லக்கு ஒன்றை அனுப்பி உள்ளார்.

சிருங்கேரி சங்கராச்சாரியின் வேண்டு கோளுக்கிணங்கி அரசுப் பணத்தைக் கையாடல் செய்து சிறையில் அடைத்து வைத்திருந்த இரண்டு பார்ப்பனர்களை விடுதலைச் செய்தார்.

மேலும், திப்புவின் ஆட்சியில் நாற்பத்து ஐந்து ஆயிரம் முதல் ஐம்பதாயிரம் வரை மிகப்பெரிய எண்ணிக்கையிலான பார்ப்பனர்கள் அரசாங்க வேலைகளில் இருந்தனர்.

இவர்கள் தவறு செய்தால் தண்டிக்கும் பொறுப்பு அரசிடமிருந்ததை மாற்றி சங்கர மடத்தினிடமே அப்பொறுப்பையும் ஒப்படைத் தார். இந்து சாஸ்திரத்தில் என்ன தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோ அதே தண்டனையை நீங்களே ஒரு அலுவலரை அமர்த்தி நிறைவேற் றும்படி சங்கராச் சாரியை திப்பு கேட்டுக் கொண்டார். (திப்புவின் கடித எண் 58) மேலே கண்ட கடிதத்திலேயே சங்காராச்சாரிக்கு வெள்ளை குதிரை ஒன்று அனுப்பி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சிருங்கேரி மடத்தின் சாரதா தேவி கோவிலின் திருவிழாவிற்காக திப்பு தங்கத் தகட்டாலும், வெள்ளிக்குமிழிகளாலும் செய்யப் பட்ட பல்லக்கு ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத் துள்ளார் என்பதை அவருடைய கடிதம் வாயிலாக அறிய முடிகிறது. (திப்புவின் கடித எண் 59)

திப்பு சிருங்கேரி சங்கர மடத்திற்கு ஸ்பதிக லிங்கம் ஒன்றை விலையுயர்ந்த கற்களால் செய்து கொடுத்துள்ளார். (Tippusultan a Fanatic.84)

மேலே கண்ட ஆவணங்களின் மூலம் திப்புவிற்கும் சிருங்கேரி மடத்திற்கும் இருந்த நல்லுறவை அறிந்து கொள்ள முடிகிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாலமாக இருந்து நேர்மையாக ஆட்சி செய்துள்ளார். அரசு செலவு செய்த மொத்த தொகையில் 90% இந்து கோவில் களுக்கும் 10% இசுலாமிய மசூதிகளுக்கும் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் செலவு செய்துள்ளார்.



# நாடாளுமன்றத்தின் மீது நடந்த முதல் தாக்குதல்?

நாம் வெள்ளி விழாக்கள், பவள விழாக்கள் என விழாக்களை விமரிசையாக எடுக்கின்றோம். அவற்றின் மூலம் பல வரலாற்று நிகழ்வுகளை மக்களுக்கு நினைவூட்டுகின்றோம். அவற்றிற்குப் பின்னால் உள்ள வரலாற்றை, பெருமையை இன்றைய இளைய தலைமுறையின் - அறிந்து தெரிந்திட ஆவண செய்கின்றோம்.

ஆனாலும் சில வரலாற்று நிகழ்வுகள் நமது பார்வையிலிருந்து தவறிவிடுகின்றன. அப்படி தவறிய நிகழ்வுகளுள் ஒன்றுதான் நமது நாடாளு மன்றத்தின்மேல் நடந்த முதல் தாக்குதல்.

**முதல் தாக்குதல் நாள்**

*1966* ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் நாள் தான் சங்கப்பரிவாரத்தினர் நமது நாடாளு மன்றத்தை தாக்கினார்கள். இந்த நாளில் (1000) ஆயிரக்கணக்கான சாதுக்கள் - சமூக விரோதிகள் பசுவதை தடைச் சட்டத்தை உடனேயே கொண்டு வந்திட வேண்டும் என தலைநகர் டெல்லியில் வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டார்கள். இதனை தூண்டி விட்டவர்கள் வகுப்புவாத சிந்தனைகளால் ஊட்டம் பெற்ற பாரதீய ஜன சங்கத்தைச் சார்ந்தவர்கள்.

அதிலும் குறிப்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமி, இரமேஷ் வரனந்த் என்பவர்தான் முதல் நாடாளுமன்ற தாக்குதலை தலைமை ஏற்று நடத்தினார். இவர் அன்றைய பஞ்சாப் மாநிலத்தின் கர்னால் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்.

சுவாமி இரமேஷ்வரானந்த்-இன் தலைமையில் ஒரு பெருங்கூட்டத்தினர், நாடாளு மன்றத்தை தாக்கிட விரைந்தார்கள். ஆனால் அதன் அனைத்து கதவுகளும், பூட்டப்பட்டு இருந்தன. கதவுகளை உடைத்திட மேற்கொண்ட முயற்சிகள் தோற்றுப் போனது. இந்தக் கூட்டம் வீதிகளில் இறங்கி, கடைகளையும் வீடுகளையும், அரசு அலுவலகங்களையும், இன்னும் கண்ணில் கண்டவற்றையும் தாக்கினார்கள், தகர்த்தார்கள், சூறையாடினார்கள். எதையும் விட்டு வைத்திடவில்லை.

கர்ம வீரர் காமராசரின் உயிரைக் குடிக்கத் துணிந்து அவருடைய வீட்டை நோக்கிப் பாய்ந்தார்கள் (பார்க்க தனி கட்டுரை)

**இந்திரா காந்தி**

இந்தப் போராட்டம் அப்போதைய பிரதமர் இந்திரா காந்திக்கு ஒரு பெரும் தலைவலியாக இருந்தது. காரணம் அவர் பத்து மாதங்களுக்கு முன்னர்தான் (முதன்முதலாக) பிரதமர் பதவி ஏற்றிந்தார். முதன் முதலாக மிகப்பெரியதொரு பொறுப்பை சுமந்திட வேண்டிய கட்டாயம் இந்திரா காந்திக்கு.

அந்த ஆண்டு மழை பொய்த்துப்போனதால் நாடெங்கும் வறட்சி, அதனால் எழுந்த சிக்கல்கள் இப்படி எத்தனையோ அவர் எதிர்



கொண்டார்கள். அத்தனையும் சமாளித்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் இந்தப் பிரச் சனையும் அவர் எதிர்கொள்ள வேண்டிய தாயிற்று.

பசுவதை தடைச்சட்டம் ஒன்று வேண்டும் என்ற இந்தப் பிரச்சனை காங்கிரஸ் காரிய கமிட்டி யின் விவாதத்திற்கு வந்தபோது அப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த காமராஜர் அவர்கள் அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திடவே இயலாது என்றார்கள். அதனால் பசுவதை தடைச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதில்லை என திட்டவட்டமாக அறிவித்தது காங்கிரஸ் கட்சி.

இதனை எதிர்க்கிறோம் என்ற போர்வையில் தான் வன்முறை வெறியாட்டங்களைக் கட்ட விழ்த்து விட்டார்கள் சங்கப்பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள். நிர்வாண சாமியார்கள் களமிறங்கி நின்றார்கள்.

**குல்சாரிலால் நந்தா**

டெல்லியை இவர்கள் கபளீகரப்படுத்திய பின் அமைச்சரவையை உடனேயே கூட்டினார் பிரதமர் இந்திராகாந்தி. அத்துடன் தன்னிடம் உள்துறை அமைச்சராக இருந்த குல்சாரிலால் நந்தாவை உடனேயே மந்திரி சபையிலிருந்து நீக்கினார்.

இந்த குல்சாரிலால் நந்தா காங்கிரஸ்-இல் ஒரு முக்கிய தலைவராக தன்னைக் காட்டிக் கொண்டே, பாரதீய சாதுக்கள் சபையிலும் உறுப்பினராக இருந்தார். இவர் கலவரக் காரர் களுக்கு உதவியாக இருந்தார். இதனால்தான் கலவரக்காரர்கள் தாங்கள் செய்யும் கலவரங் களுக்குத் தங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்ற மதமதப்பில் தாராளமாக தீவைப்பு, கதவுடைப்பு என்றெல்லாம் செயல் பட்டார்கள், நாடாளுமன்றத்தையே தைரிய மாக தாக்கினார்கள்.

இந்தக் கலவரங்கள் காமராசர் கொலை முயற்சி இவையெல்லாம் சங்கப்பரிவாரத்தின் அப்போதைய அரசியல் கட்சி பாரதீய ஜன சங் கத்தின் மக்கள் ஆதரவைக் குறைக்கவில்லை. அவர்கள் பிப்ரவரி 1967-இல் நடைபெற்றத் தேர்தலில் இரண்டு மடங்கு இருக்கைகளை நாடாளுமன்றத்தில் பெற்றார்கள்.

இவர்கள் பசுவை வைத்து அரசியல் நடத்து கின்றார்கள் என்பதை நன்றாக அறிந்துகொண்ட பிரதமர் இந்திரா காந்தி பசுவதை தடுப்பு விவகாரத்தில் கவனம் செலுத்தியாக வேண்டும் என விரும்பினார்.

ஆகவே இந்த விவகாரம் குறித்து விரிவான விசாரணை ஒன்றை மேற்கொள்ள குழு ஒன்றை அமைத்தார். அந்தக் குழுவுக்கு அப்போது ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.கே.சர்கார்-ஐ நியமித்தார். இந்த குழு ஜூன் 29, 1967-இல் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவுக்கு அதிகமான அதிகாரங்கள் தரப்பட்டன. எந்த அளவுக்கு என்றால் நாடு தழுவிய அளவில் பசுக்களை, மாடுகளை அறுப் பதை தடை செய்ய முடியுமா? அதற்கு மத்திய அரசு, இந்தியா முழுவதும் செயல்படக் கூடிய அளவில் ஒரு பொதுச் சட்டத்தைக் கொண்டு

வந்திட இயலுமா? இயலுமானால் அதற்கு என்னென்ன செய்திட வேண்டும். இதற்கு நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்திடலாமா? அதற்கு என்னென்ன செய்திட வேண்டும்? என்ற கேள்வி களுக்கெல்லாம் இந்தக் குழு விடைகளைக் காண வேண்டும். பரிந்துரைகளைச் செய்திட வேண்டும் என்பனவற்றிற்கெல்லாம் இந்தக் குழு பதில் சொல்லிட வேண்டும்.

ஆனால் இதற்காக அமைக்கப்பட்ட குழு எட்டு நபர்களை கொண்டது. ஆமாம்! அந்தக் குழு பசுவை வைத்து அரசியல் ஆதாயம் தேடவும், சிறுபான்மையினருக்கு நெருக்கடி களைத் தந்திடவும் வரிந்துக் கட்டிக்கொண்டு நின்றவர்கள் அந்தக் குழுவில் இடம் பெற்றார்கள்,

**பசுவதை - தடை குழுவில் இடம் பெற்றவர்கள்**

*1.* இந்திய பாசிசத்தின் தந்தை எம்.எஸ். கோல்வார்கர். அப்போது அவர் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பின் தலைவராக இருந்தார்.

*2.* ஆர்.பி.முகர்ஜி - இவர் ஓய்வு பெற்ற நீதிபதி. அத்தோடு பாரதீய ஜனசங் என்ற கட்சியைத் தோற்றுவித்தவரின் சகோதரர்.

*3.* பூரி சங்கராச்சாரியார்

*4,* சரண்சிங் - இவர் அப்போது உத்திரப் பிரதேச மாநிலத்தின் முதல்வர்

*5,* டி.பி.மிஸ்ரா - இவர் மத்திய பிரதேச மாநிலத்தின் முதல்வர்

*6.* வி. கொரியன் - இவர் இந்திய பால்வளத்தின் தந்தை என அறியப்பட்டவர். அப்போது தேசிய பால்வளத்துறை வாரியத்தின் தலைவர் (National Diary Development Board) இவர் தான் பசுக்கள் இறைச்சிக்காக அறுத்திடுவதே சிறந்தது என வலியுறுத்தியவர். பசுக்களை நாம் திண்ணாவிட்டால் பசுக்கள் நம்மைத் தின்றுவிடும் என கோல்வால்கரின் முகத்தில் அறைந்தார் போல் கூறியவர்.

இவருக்கும் கோல்வால்கருக்குமிடையே நடந்த உரையாடலை வைகறை வெளிச்சம் டிசம்பர் *2017* இதழில் விரிவாகத் தந்திருந்தோம். வாசகர்கள் அதனை படிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

*7.* அசோக் மித்ரா - இவர் ஒரு பொருளா தார நிபுணர் அன்று விவசாய பொருள்களின் விலை நிர்ணய அவையின் அவைத் தலைவர் Chairman of the Agricultural Prices Commission.

*8.* H.A.B. PAT. A : ஏ.பி.பாசியா என்றொரு வரும் இந்தக் குழுவில் இடம் பெற்றவர். இவர் உணவு வகைகள் பற்றிய ஆராய்ச்சி மையத்தின் தலைவர்

இந்தக் குழு புதுமாட்டை குழிப்பாட்டிடும் உற்சாகத்துடன் தொடக்கத்தில் வேகமாக செயல் பட்டது. பல விவாதங்களை நடத்தியது. இந்த விவாதங்களில்ஒன்றை வைகறை வெளிச்சம் டிசம்பர் *2017* இதழில் இடம் பெறச் செய்திருந் தோம். வாசகர்கள் அதனைப் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அதற்குள் இந்தக் குழுவுக்கு ஏராளமான கடிதங்களும், பசுமாடுகளை இறைச்சிக்காக அறுக்காவிட்டால், அவற்றால் மனிதர்களுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடுகள், சுற்றுப்புறச் சூழல் அழிவுகள் இவற்றைப் பற்றி கடிதங்கள், கள ஆய்வுகள் இவையெல்லாம் அனுப்பப்பட்டன.

இப்படி கள ஆய்வுகள் அனுப்பியவர்களில் முக்கியமானவர்கள், சலீம் அலீயும் ஜாஃபத் ஃபத்தியுல்லாஹ்வும்.

டாக்டர். சலீம் அலீ அவர்கள் பறவையியல் மற்றும் உயிரியல் நிபுணர். ஜாஃபர் ஃபத்தி யுல்லாஹ் புகழ்மிக்கதொரு பத்திரிகையாளர். இவர் ஒர் கட்டுரையில் ஏ.கே.சர்கார் கமிட்டி, பசுக்களையும், மாடுகளையும் இறைச்சிக்காக அறுக்காமல் விடுவதால் ஏற்படும் சீரழிவுகளை யும், சேர்த்தே ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அதையும் தாங்கள் தாக்கல் செய்யும் இறுதி அறிக்கையில் இடம் பெற்றிடச் செய்திட வேண்டும் என்றார்.

இந்தக் கட்டுரை மக்களிடையே பெற்ற வரவேற்பை தொடர்ந்து இது கடிதமாக நீதிபதி ஏ.கே.சர்காருக்கும் பிரதமர் இந்திரா காந்திக்கும் அனுப்பப்பட்டது. ஆனால் பிரதமர் இந்திரா இப்படியெல்லாம் கடிதம் தனக்கு வந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை.

அப்போது அமெரிக்காவின் சார்பில் இந்தியாவின் தூதராக இருந்தவர் சார்லஸ் போவைல் என்பவர். இந்திரா காந்தியின் வலது

கரம் எனக் கணிக்கப்பட்ட பி.என். ஹாஸ்கர் அவரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது இப்படி யொரு கடிதம்/கள ஆய்வு தனக்குக் கிடைத்ததாக பி.என். ஹாஸ்கர் ஒத்துக்கொண்டார். இதனை அமெரிக்காவின் தூதர் சார்லஸ் போவைல் ஜாஃபர் பைத்தியுல்லாஹ்விடம் தெரிவித்தார்.

இந்தக் குழு, அதாவது பசுவதை தடைச் சட்டம் பற்றி ஆய்வுகளை நடத்திய குழு தனது அறிக்கையை 6 மாதங்களுக்குள் தந்திட வேண்டும் என பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பணித்திருந்தார்கள். ஆனால் அது 1976 வரை தனது அறிக்கையைத் தந்திடவில்லை.

மொரார்ஜி தேசாய் - இன் ஆட்சிக் காலத் தில்தான் அந்தக்குழு இழுத்து மூடப்பட்டது. இறுதிவரை அறிக்கையை அறிவிக்கவில்லை.

**இரண்டு நூல்கள் கூறும் உண்மை ?**

பிற்றை நாட்களில் இரண்டு நூல்கள் வெளிவந்தன. ஒன்று "I Too Had A Dream" அதாவது "எனக்கும் ஓர் கனவு இருந்தது" இந்த நூலை எழுதியவர் வி.கொரியன். இவரைத்தான் இந்திய பால் வளத்தின் தந்தை என அழைத் தோம். இந்த நூலில் இந்திய பாசிசத்தின் தந்தை கோல்வால்கர் ஓர் உண்மையை ஒத்துக் கொண்டதாக எழுதுகின்றார்.

அந்த உண்மை : "1966-இல் நாங்கள் ஆர்.எஸ். எஸ்.வும், சாமியார்களின் அமைப்பும் பசுவதை தடைச் சட்டம் வேண்டும் எனக் கேட்டதெல் லாம் ஒரு அரசியல் விளையாட்டுக்காகத்தான்" என கோல்வால்கர் பலமுறை தன்னிடம் கூறியதாக எழுதி உள்ளார். அதன்பின் பிரதமர் இந்திரா காந்தி அமைத்த அந்த குழுவில் அங்கம் வகித்த இன்னொரு டாக்டர் மித்ரா அவர்கள் " A Troddler's Tale ஒரு மழலையின் பிதற்றல் என்ற நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"பூரி சங்கராச்சாரியார் அவர்கள் பாலாடை சாப்பிடுவதில் அலாதியான ஆர்வம் உடைய வராக இருந்தார். இதனால் நாங்கள் மேற் கொண்ட சுற்றுப் பயணத்தின் போது கொரியன் அவர்கள் அவருக்கு பாலாடையில் செய்த திண்பண்டங்களை அனுப்பினார். அவற்றை அனைத்தையும் உண்டு மகிழ்ந்தார். அடுத்த நாள் சங்கராச்சாரியார் அவர்களின் முகத்தில் ஒரு பெரிய சலசலப்பு காரணம். வி.கொரியன் அவர்கள் சொன்ன உண்மைதான். அந்த உண்மை



பாலாடையின் இதர திண் பண்டங்களும் கன்றுக் குட்டிகள் மல குடலிலிருந்து எடுக்கப் பட்ட ஒரு பொருளினால்(Rennet) ஆனது என்பது.

இப்படி பசுவால் கிடைக்கும் எல்லாப் பொருள்களையும் தின்றுவிட்டு அதன் இறைச் சியை தடுக்கும் சட்டம் பற்றி விசாரணை நடத்திக் கொண்டிருந்தோம். (A Troddler's Tale by DR. Mitra)

இந்த முரண்பாட்டாளர்கள் இன்று நாடாள வந்து விட்டார்கள். ஜனநாயகத்தின் சூழ்ச்சி - ஜனநாயகமே!

- Source : TH. Nov. 9, 2017, Jayaram Ramesh Article, The First attack on Parliament

தமிழ் வடிவம் - எம்.ஜி.எம்.

**வாசகர்கள் கவனிக்க**

தொடக்க நாள்களில் மாட்டுக்கறி இல்லாமல் திருவிழாக்களோ, பூஜா புனஸ்காரங்களோ இல்லை என வாழ்ந்தவர்கள்தாம் இன்று அதை வைத்து அரசியல் நடத்துகின்றார்கள். ஆட்சியில் அமர்ந்துவிட்டார்கள்.

டாக்டர் பார்கவி அவர்கள் பசுவின் பாலும் இறைச்சியும் ஒரே விதமான உடற் கூறுகளால் தான் தயாராகின்றன. அதனால் பசுவின் பாலைக் குடிப்பதற்கும் இறைச்சியைத் திண்பதற்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை. ஆனால் பாலைக் குடிக்கும் கோல்வால்கர் ஏன் இறைச் சியை மறுக்கின்றார் என கோல்வால்கரிடமே கேட்டிருந்தார் என்பதை குறிப்பிட்டிருந்தோம்.

குறிப்பு : டாக்டர் பார்கவி அவர்களின் பேட்டியை வைகறை வெளிச்சம் 2017 டிசம்பர் இதழைப் பார்க்கவும்.



# காமராசரைக் கொலை செய்ய முயன்ற கா(லி)விகள்

**பெருந்தலைவர் காமராஜர் மீது 1966இல் காவிகள் கொலை வெறித் தாக்குதல் நடத்தியதன் 51-ஆம் ஆண்டு சில தகவல்கள்....**

*காவி நிறம் என்பது கலவரத்தின் குறியீடு என்பது உதாரணமாக்கப்பட்ட நாள் **07-11-1966.** அன்று மதியம் 3 மணிக்கு டில்லியில் காமராஜரை உயிரோடு கொளுத்த நிர்வாண சாதுக்கள், சங்பரிவாரங்களின் முயற்சியால், டில்லி வரலாறு காணாத கலவரங்களைக் கண்டது.*

*__1966__ஆம் ஆண்டு நவம்பர் 2 அன்று நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் காமராஜர், "பசுவதைத் தடைச் சட்டம்" கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை ஏற்க முடியாது என்றும், அது பைத்தியக்காரத்தனமானது என்றும் இந்தியா வின் மதச்சார்பின்மைக்கு எதிரானது, பெரும் பான்மை மக்கள் அசைவ உணவு உண்ணும் போது அதற்கு எதிராக அரசு முடிவெடுக்க முடியாது என்றும் கூறினார்.*

*இது போதாதா காவிகளுக்கு? காமராஜரை தீர்த்துக் கட்ட நாள் குறித்தார்கள். அந்த நாளே நவம்பர் 7.*

*நாடாளுமன்றக் கட்டடத்தின் முன்பு ஆர்ப் பாட்டம் நடத்த முடிவு செய்து தீர்மானமாக பல நாட்கள் திட்டமிட்டு பேருந்திலும், ரயிலிலும் பயணச்சீட்டே வாங்காமல் பயணம் செய்து கலவரத்தை ஆரம்பித்தார்கள்.*

*கண்ணில் பட்ட தந்திக்கம்பங்கள், மின் கம்பங்கள், அரசு அலுவலகங்கள் குறிவைக்கப் பட்டு தாக்கப்பட்டன. பெரும் சேதத்தை ஏற்படுத்திய இந்தக் கலவரத்தை பூரி சங்கராச் சாரியார் முழு ஆதரவளித்துத் தூண்டினார்.*

*ஜனசங்கம், இந்து மகா சபா, இடுப்பில் கட்ட வேண்டிய துணியை தலையில் கட்டி முழு நிர்வாணமாக வந்த சாதுக்கள் என்றழைக் கப்பட்ட சண்டியர்கள், குடும்பத்தைத் தவிக்க விட்டோ அல்லது குடும்பத்தினரால் அடித்து விரட்டப்பட்டோ சாமியாரான வீணர்கள் இதில் தங்கள் வெறித்தனத்தைக் காட்டினார் கள். இந்த வெறிக்கூட்டம் நடத்திய காட்டு மிராண்டித்தனத்தை "பிளிட்ஸ்"ஏடு விவரிக்கும் போது, "நரகத்தின் வேட்டை நாய்களாக" நடந்து கொண்டார்கள் என்று எழுதியது.*

*டில்லியில் பணியிலிருந்த காவல்துறை யினருக்கு சம்பளம் தர அந்த மாதம் தாமத மானதால் காவல்துறையினரும் பெரிய அளவில்*

அந்த வன்முறையைக் கண்டு கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் அப்போது எழுந்தது.

டில்லியின் முக்கிய வீதிகளில் வன் முறையை யும், சேதத்தையும் விளைவித்த கலவரக்காரர் கள், ஏற்கெனவே திட்டமிட்டபடி காமராஜர் இல்லத்தை நோக்கி ஓடினார்கள். அவர்கள் தாக்கத் தொடங்கியது அமைச்சர் ரகுராமை யாவின் வீட்டை. பின்பு காமராஜர் வீட்டை ஒரு காலிப் பயல் அடையாளம் காட்ட, மண்ணெண்ணெய் நனைத்த தீப்பந்தம், கற்கள், கட்டைகள், திரிசூலங்கள், குண்டாந்தடிகள் என்று சரமாரியாகப் பறந்தன. காவலாளி அடித்து விரட்டப்பட்டார். பாதுகாவலர்கள் காமரா ஜரைப் பார்த்து நிலைமை எல்லை மீறியுள்ளது என்று சொல்லி உடனடியாக தப்பிக்க வேண்டு கின்றனர்.

ஆனால் ஜனநாயகவாதியான காமராஜர், அவர்களிடம் நான் பேசுகிறேன் என்று கூறும் போதே கதவினைத் தள்ளிக் கொண்டு திரிசூலத்தோடு சாமியார்கள் வெறியோடு உள்ளே வரவும், ஒரு பக்கத்தில் தீயின் நாக்குகள் கட்டடத்தைப் பதம் பார்க்க, நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பாதுகாவலர்கள், காமராஜரை அவசரமாகக் கட்டாயப்படுத்தி பின்புறமாய் நூலிழையில் தப்பிக்க வைத்தனர்.

இந்தியா மட்டுமல்லாது, உலகையே அதிர்ச் சிக்குள்ளாக்கிய அந்த சம்பவத்தை பெரியார் கடும் கண்டனம் தெரிவித்து காவிகளின் வன்முறையை பொதுக் கூட்டங்கள் மூலம் அம்பலப்படுத்தினார்.

"காமராஜர் கொலை முயற்சி சரித்திரம்" என்ற ஒரு நூல் தொகுப்பை ஆசிரியர் கி.வீரமணி வெளியிட்டு, அந்த நூல் இன்றும் பல பதிப்புகள் வெளியிடப்பட்டு இன்றும் விற்பனையில் சாதனை படைத்து வருகிறது.

"காவிகள் என்றால் காலிகள் - காலிகள் என்றால் காவிகள் " என்ற புதிய சொல் வழக்கிற்கு உதாரணமாய் இந்த சம்பவம் காமராஜர் வரலாற்றில் மறைக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

**- நன்றி விடுதலை**






# 19 ஆண்டுகளுக்கு பின் தீவிரவாத வழக்கிலிருந்து விடுதலை

முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்று கூறி கைது செய்திடும் போது அதை தலைப்பு செய்தியாக்கி பரபரப்பை ஏற்படுத்திடும் பத்திரிகைகளும் ஊடகங்களும், அவர்கள் குற்ற மற்றவர்கள், அப்பாவிகள் என்று நிரூபணமாகி வெளியே வந்திடும் போது அவற்றை ஒரு செய்தியாக கூட வெளியிடுவதில்லை. இதுதான் இன்றைய இந்தியாவில் பெரும்பாலான ஊடகங்கள் கடைபிடித்து வரும் ஊடக அறம் அல்லது பத்திரிக்கை தர்மம்.

தீவிரவாத முத்திரை குத்திவிட்ட பின் குற்றம் சாட்டப்பட்டவரின் குடும்பங்களையும் சந்தேக கண் கொண்டே பார்க்கின்றன அவர்களோடு ஒன்றி வாழும் சமுதாயங்கள். அவர்கள் ஒரு வித சமுதாய புறக்கணிப்பிற்கு ஆளாகின்றனர். இந்த நிலைமை தான் அப்துல்லாஹ் சலபிக்கும் நேர்ந்தது.

**தீவிரவாத முத்திரை**

அப்துல்லாஹ் சலபி, கல்கத்தாவில் உள்ள முர்ஷிதாபாத்தை சார்ந்தவர். தனது பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்ற அவரை சாஹர் திதி காவல் துறையும் கல்கத்தா சிறப்பு பிரிவு காவல்துறையும் சேர்ந்து கைது செய்தது. இது நடந்தது 1998 டிசம்பர் மாதத்தில். அப்போது அப்துல்லாஹ்விற்கு வயது 38. பாகிஸ்தான் உளவு அமைப்பான ISI (Inter service Intelligence) உடன் இணைந்து இந்திய அரசுக்கு எதிராக செயல்பட்டார் என்று அவர் மீது குற்றம் சுமத் தப்பட்டது. அவருடைய கைது பத்திரிகைகளில் தலைப்பு செய்திகளாயின. தீவிரவாதியை பிடித்து விட்டதாக பரபரப்பை ஏற்படுத்தின. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 121 (இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுத்தல்), 121A (குற்றவியல் சார் சதிகளில் ஈடுபடுதல்), 467 (மோசடி), 471 (பொய் ஆவணங்களை உண்மை யானது என்று பயன்படுத்தல்) ஆகிய பிரிவுகளில் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட பின் அவர் கல்கத்தா வின் அலிபோர் மத்திய சிறையில் அடைக்கப் பட்டார். அவருக்கு எதிராக கல்கத்தா காவல் துறையால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியாத காரணத்தால் 90 நாட்கள் சிறைவாசம் அனுபவித்த பின் அவர் பிணையில் வெளியே வந்தார்.

அரசு தரப்பு வழக்கறிஞர்கள் தொடர்ந்து மாறி வந்ததால் அதன் பின் 5 வருடங்களாக இவ்வழக்கு சம்பந்தமாக எந்த வித விசாரணை யும் நடைபெறாமல் இருந்துள்ளது. அப்துல்லாஹ் விற்கு எதிராக தகுந்த சாட்சியங்களை சமர்பிக்க முடியாததால் அவரை சிறப்பு நீதிபதி கும்கும் சின்ஹா 19 வருடங்களுக்கு பின் 2017 டிசம்பரில் வழக்கிலிருந்து விடுதலை செய்தார்.

அப்துல்லாஹ் சலபி ஜமாத் இ அல் ஹதித்

என்ற அமைப்பின் மாவட்ட தலைவராக செயல்பட்டவர். அலிபோர் மத்திய சிறையில் அடைக்கப்பட்ட போதுதான் நான் எந்த காரணத்திற்காக கைது செய்யப்பட்டேன் என்று அறிந்து கொண்டேன். நான் ஒரு மிஷிமி ஏஜென்ட் என என்மேல் கல்கத்தா சிறப்பு காவல் துறை குற்றம் சாட்டியது. இதே காரணத்தை சொல்லி அஹ்லாக் அஹ்மத், அபுநாசிர் மற்றும் தாஸ் என மூன்று முஸ்லிம் இளைஞர்களையும் காவல்துறை கைது செய்தது.



நீதிமன்றத்தின் தீர்ப்பை நான் வரவேற்கிறேன். ஆனால் நடந்த ஒட்டுமொத்த துயர சம்பவங்களும் சமூகம் சுமத்தும் களங்கங்களை தாங்கி கொள்ளும் பக்குவத்தை எனக்கு தந்துள்ளது. (I welcome the Court's decision. But this entire ordeal has made me endure many social stigma).

நான் பிணையில் வந்த பின் என்னுடைய சில உறவினர்கள் என்னை விட்டு விலகி செல்வதை உணர்ந்து கொண்டேன். சில உறவினர்கள் நான் ஒர் அப்பாவி என்று நம்பினர். 19 வருடங்களாக நான் ஒர் அப்பாவி என்று நிரூபிப்பதற்காக நீதிமன்றத்தின் ஒவ்வொரு அமர்விலும் ஆஜரானேன். என்னை குற்றவாளியாக ஜோடித்திட காவல்துறை மேற்கொண்ட முயற்சிகள் என் வாழ்கையை நரகமாக்கியது. இன்று அல்லாஹ் என்னுடைய பிரார்த்தனைகளுக்கு பதில் அளித்துள்ளான்.

காவல் துறையின் கட்டுபாட்டில் நான் இருந்த நாட்களில் என்னுடைய குடும்பம் மிகுந்த சிரமத்திற்கு ஆளாக வேண்டியிருந்தது. சங்கடத்தை ஏற்படுத்தும் கேள்விகளையும் சமூக புறக்கணிப்புகளையும் என் குடும்பம் எதிர் கொள்ளவேண்டியிருந்தது.

நான் கைது செய்யப்பட்ட போது என்னை ஒரு தேசத்துரோகி என்றே வங்காளத்தில் வெளி வந்த பெரும்பாலான பத்திரிகைகள் எழுதின. இன்று நான் குற்றமற்றவன் என்று விடுதலை செய்யப்படும் போது இதை ஒரு செய்தியாக கூட அப்பத்திரிகைகள் வெளியிடவில்லை என நொந்து கொண்டார் அப்துல்லாஹ் சலபி.

ஆதாரம்: caravandaily, டிசம்பர் 27, 2017

அப்துல்லாஹ் என்ற பெயருடைய மற்றொருவருக்கு பதிலாக இவரை கைது செய்துவிட்டனர். அதாவது தவறான நபரை கைது செய்துவிட்டனர் என்ற அடிப்படையில் அவர் பிணையில் வெளியே வந்துள்ளார்.

எனினும் தீவிரவாத வழக்கிலிருந்து அவரை விடுவிக்க 19 வருடங்கள் ஆகியுள்ளது. அதெப்படி பெயரின் ஒற்றுமையை மட்டும் வைத்து ஒரு தவறான நபரை கைது செய்து தீவிரவாத முத்திரையை காவல் துறை குத்தியுள்ளது என்ற கேள்வி நம்முன் எழுகிறது.

இந்த வழக்கில் மட்டும் அல்ல, இதுபோல் முஸ்லிம்களை தீவிரவாத முத்திரை குத்திடும் வழக்குகளை ஆராய்ந்தால் அதில் பல அப்பாவிகள் கைது செய்யப்பட்டுள்ளதை கண்டுபிடித்திடலாம்.

இந்த அநீதிக்கெதிராக சட்டத்தின் உதவியுடன் நாம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டால் மட்டுமே நம்முடைய இளைய சமுதாயத்தை பாதுகாத் திடலாம். நீதியை பெற்றிடலாம்.

- அபூஹாசின்



# அன்பகம் தாவா நிகழ்ச்சி

கடந்த 21-01-2018 அன்று தஞ்சை மாவட்டம், வேப்பத்தூர் என்கிற சிறு கிராமத்தில் மாற்றுமத சகோதர, சகோதரிகளுக்கு இஸ்லாம் பற்றிய அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் இரவு 7 மணி முதல் 11 மணிவரை நடந்தது.

இதில் முன்னிலை வகித்த ஆரிஃப் அவர்கள் இஸ்லாம் கூறும் சகோதரத்துவத்தை பற்றியும், அதன்பின் சிறப்புரை நிகழ்த்திய தாஹிதுல்லாஹ் என்கிற பரமசிவம் இவர் இந்துவாக, தலித்தாக இருந்தபோது வாழ்க்கையில் நடந்த பல கஷ்டங்களை பகிர்ந்து கொண்டார். தான் இந்து மதத்தில் தலித்தாக இருந்தபோது அனுபவித்த கஷ்டங்களிலிருந்தும் தாங்களும் தலித் என்கிற காரணத்தால் அடிமைத் தனத்திலிருந்தும் விடுபட வேண்டுமென்றால் இஸ்லாம் ஒன்றே தீர்வு என்பதை மக்களிடம் எடுத்துரைத்தார்.

அடுத்த படியாக அனீஸ் என்கிற முத்து பாரதி இந்து மதத்திற்கும் இஸ்லாம் மதத் திற்கும் உள்ள வேறுபாடுகளை எடுத்துக் கூறினார். அவர் ஒரு தலீத்தாக இருந்த போது கல்வி படிப்பில் அனுபவித்த கஷ்டங் களையும், ஜாதியின் ஏற்றத்தாழ்வுகளைப் பற்றி தன் உறவுக்கார ஊரான வேப்பத் தூர் உறவினர்களுக்கு எடுத்துச் சொன்னார். ஏற்றத்தாழ்வுகளை போக்க வேண்டுமென் றால் இஸ்லாம் ஒன்றே தீர்வு என்று கூறி உரையை நிறைவு செய்தார்.

அதன்பின் முஹம்மது இஸ்மாயின் என்கிற வினோத். தான் பிறந்து வளர்ந்த ஊரான வேப்பத்தூரில் இஸ்லாத்தை வாழ் வியலாக எடுப்பதற்கு முன் அவர் தலீத் என்கிற காரணத்தால் அனுபவித்த கஷ்டங்கள்







அதை எதிர்த்து நடத்திய போராட்டங்கள் மற்றும் தான் வேலை பார்த்துக் கொண்டிருந்த இடங்களில் மேல் ஜாதியினர் இவரை பாடாய்ப்படுத்திய கஷ்டங்களையும் அவர் வாழ்க்கையில் நடத்த பல விஷயங்களையும் தன் உறவினர்களிடத்திலேயே மற்றும் தலீத் மக்களின் உரிமைக்காக நடத்திய பல போராட்டங்களில் பங்குபெற்ற நண்பர்களிடத்தில் பகிர்ந்து கொண்டார்.



இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற காரணத்தையும், இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் பரப்பப்படும் குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதிலை கொடுத்து, இன இழிவும், ஜாதி வெறியும் ஒழிய வேண்டுமானால் தலீத் மக்களின் தலைவராக திகழ்ந்த டி.எம்.மணி என்கிற உமர் ஃபாரூக் அவர்கள் நடத்திய போராட்டங்கள் அவர் அனுபவித்த சிறை வாழ்க்கை இறுதியாக இஸ்லாம்தான் தீர்வு என்று முடிவு செய்து இஸ்லாத்தை ஏற்றார்.

அதன் வழியில் நானும் இஸ்லாத்தை ஏற்றேன். ஜாதி தீ ஒழிய வேண்டுமென்றால் அனைவரும் சமம் என்கிற சகோதரத்துவத்தை போதிக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாம்.

இஸ்லாத்தை இறை வாழ்வியல் என்று ஏற்போம் என்று கூறி நிறைவு செய்தார். இதில் சுமார் 40-க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாகவும், அன்பகம் தாவா குழுமத்தின் சார்பாகவும் வெளியிட்ட அர்த்தமுள்ள இந்துமதம் என்கிற குறும்படம். இப்படத்தை யூட்யூபில் பார்க்க

http://youtube/4uduzd-cqc என்கிற தளத்தில் பார்க்க வேண்டி அன்பகம் தாவா குழுமத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**- யாசர் அரஃபாத்**





# கண்ணியமிகு காயிதே மில்லத்-இன் பேரன் தாவூத் மியாகான் தலைமையில் புதிய அணி.

மத வெறியும், சாதியமும் - இந்துத்துவாவின் இரு முகங்கள் என்ற தலைப்பின் கீழ் வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட்-இன் உரையும் தொடர்ந்து, கலந்துரையாடலும் சென்னை கவிக்கோ மன்றத்தில் 15-01-2018 அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் பேரனும் காயிதே மில்லத் கலைக்கல்லூரியின் தாளாளரும், காயிதேமில்லத் மீடியா அகாடமியின் செயலாளருமான தாவூத் மியாகான் அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

நிகழ்ச்சியில் "தமிழக மக்கள் ஒற்றுமை மேடை" என்றொரு அமைப்புத் தொடங்கப் பெற்றது. இந்த மக்கள் ஒற்றுமைக்கான மேடை இந்தியாவில் தலை விரித்தாடும் பாசிசத்தை எதிர்க்கும் மக்கள் மேடையாக அமையும். நிகழ்ச்சியில் தலைமை உரையாற்றிய தாவூத் மியாகான் அவர்கள், பாசிசத்திற்கு எதிர்காலம் என்பது இல்லை. உலகில் பல நாடுகளில் பாசிசம், தலையெடுத்துத் தழைத்தது. ஹிட்லரின் நாஜிசம், முசோலியின் பாசிசம், இவ்விரண்டும் படு தோல்வியில்தான் முடிந்தன. ஹிட்லரின் நாஜிசம் அவரே தன்னை மாய்த்துக் கொண்டு தற்கொலையில் முடிந்தது.

முசோலினியைப் பொறுத்தவரை அவரை ஆதரித்த மக்களே அவரை தலைகீழாக கட்டித் தொங்கவிட்டார்கள். வீதி, வீதியாக இழுத்துச் சென்றார்கள்.

அதேபோல் ஆஸ்திரேலியா அர்ஜன்டைனா, சிலி, ஆகிய நாடுகளில் தலையெடுத்த பாசிசமும் பயங்கர தோல்வியில் முடிந்தது.

ஆகவே பாசிசத்திற்கு எதிர்காலம் இல்லை என்பது வரலாற்று உண்மை. அதேபோல் இந்தியாவில் இப்போது தாண்டவமாடிக் கொண்டிருக்கும் பாசிசமும் வீழும்.

பாசிசத்தின் தொடக்கமே இத்தாலிதான். அந்த "சிசும்" என்ற சொல் இத்தாலிய மொழியின் சொல்தான்.

இத்தாலிய பாசிசத்தின் தொடக்க காலத்திலும், ஹிட்லரின் நாஜிசத்தின் தொடக்க

## சென்னையில்

# டீஸ்டா செட்டல்வாட்



காலத்திலும் இந்துத்துவ பாசிசத்தின் சிற்பி டாக்டர் மூஞ்சே அங்கு சென்று பாசிசத்தைப் படித்து வந்தார் எனப் பேசப்படுகின்றது. ஆனால் என்னைப் பொறுத்தவரை, இவர் அதாவது டாக்டர் மூஞ்சே அங்கு சென்று பாசிசத்தைக் கற்று வந்தார் என்பதைவிட அவர்களுக்குப் பாசிசத்தைக் கற்றுக்கொடுத்தார் என்பதே உண்மை (கரவொலி)

**பாபரி மஸ்ஜித் பிரச்சனை**

அதேபோல் பாபரி மஸ்ஜித் பிரச்சனையில் தாவூத் மியாக்கான் அவர்கள் மிகவும் தெளிவானதொரு பார்வையை முன் வைத்தார்கள். டீஸ்டாவின் கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டார். ஆனால் மிக சிறந்த இங்கிதத்தோடு இதில் மியாகான் அவர்களின் பார்வை மிகவும் கூர்மையாக இருந்தது. அதனால் அதை இங்கே குறிப்பிடுகின்றோம்.

**டீஸ்டாவின் நிலைப்பாடு**

வீரமங்கை டீஸ்டா பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் உச்ச (அ) நீதிமன்றத்தில் ஓர் குறுக்கீடு Intervening Petition-ஐ தாக்கல் செய்துள்ளார். அதில், பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயிலோ, மஸ்ஜிதோ கட்டாமல் அப்படியே இந்த இடத்தை "Free Space" ஆக அதாவது எதுவுமில்லாமல் பூமியாக விட்டு வைத்திட வேண்டும் என்பதே!.

இந்தக் கருத்தை மேடையில் தாவூத் மியாக்கான் அவர்கள் தெளிவாகவும் தீர்க்கமாகவும் மறுத்தார்கள். முதலில், பாபரி மஸ்ஜித்-ஐ இடித்தக் குற்றவாளிகளை தண்டிக்கட்டும்.

இரண்டாவதாக பாபரி மஸ்ஜித் இருந்த இடம் யாருக்குச் சொந்தம் என்பதை முடிவு செய்யட்டும். அதன்பின் மற்றவற்றைப் பார்க்கலாம் எனக் கூறினார்கள்.

இந்தக் கருத்தைச் சொல்வதில் அவர் காட்டிய தீர்க்கமும் தெளிவும் அனைவரையும் ஏன் டீஸ்டா செட்டல்வாட்டையும் பிரமிக்க வைத்தது. இதனால் டீஸ்டா கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட மறுத்து விட்டார்கள். (இதனை அடுத்த நாள் நிகழ்ச்சியின் போது நேரிலும் நம்மிடம் சொன்னார்கள்)

பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் இந்த நிலைப்பாடே உலக முஸ்லிம்களின் நிலைப்பாடு என்பது தெளிவு.

இதில் இன்னொன்றையும் நாம் இணைக்க வேண்டும். 1949-இல் பாபரி மஸ்ஜித்-இல் சிலை வைத்த கிரிமினல் குற்றத்தைச் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அவர்களில் பலர் இறந்து விட்டார்கள். எனினும் அவர்களைக் குற்றவாளிகள் என பிரகடனப்படுத்திட வேண்டும். தண்டனைகளையும் அறிவிக்க வேண்டும்.

இதில் பலர் இறந்துவிட்டார்கள் என்பதால் வழக்கு முடிந்துவிட்டது எனக்கொள்ளக்கூடாது. (இதையும் இணைத்துக் கொள்ள வேண்டும்)

**டீஸ்டாவிடம் கேள்வி**

15-01-2018-இல் கவிக்கோ அரங்கத்தில் நடந்த நிகழ்ச்சி ஓர் உரையாடல் நிகழ்ச்சி. இதனால் எல்லோரும் கேள்விக் கேட்டார்கள். அவர்களுக்கு டீஸ்டாவும் பதில் சொன்னார்கள். இதில் தாருல் இஸ்லாம் சார்பில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத், நீதி அமைக்கான மக்கள் இயக்கத்தின் சார்பில் டாக்டர் ஹபீஸ் அவர்களும் கேள்விகளைக் கேட்டார்கள்.

**கேள்வி - (எம்.ஜி.எம்.)**

நம் நாட்டை மதச்சார்பற்ற நாடு என்கின்றார்கள். இந்த மத சார்பற்ற நாட்டில் எப்படி இந்துத்துவ தீவிரவாத கட்சியாகிய பாரதீய ஜனதா கட்சியை தேர்தல் களத்தில் அனுமதிக்கின்றார்கள்.

**பதில் - (டீஸ்டா)**

நல்ல கேள்வி, தேர்தல் ஆணையம் பல நேரங்களிலும் அவர்களின் - பாரதீய ஜனதா கட்சியின் தவறுகளை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது. நாம் இதுபோன்ற கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டும், வலியுறுத்திக் கொண்டும் இருக்க வேண்டும்.

**கேள்வி - (டாக்டர் ஹபீஸ்)**

காசிம்புரா படுகொலைகளில் (1987)-இல் 50 முஸ்லிம்கள் பாதுகாப்புப் படைகளால் கொலை செய்யப்பட்டார்கள். அதில் நீதி நியாயத்தில் அக்கறையுடைய காவல்துறை உயர் அதிகாரி (எஸ்.பி) கூட 30 வருடங்கள்

கழித்து ஒரு நூலைத்தான் எழுதிட முடிந்ததே அல்லாமல் அவராலும் குற்றவாளிகளைத் தண்டித்திட இயலவில்லை. இதில் நமது அரசியல் சாசனம் தெளிவாகத் தோற்றுவிட்டது என்பதை ஒத்துக் கொள்கின்றீர்களா?



**பதில் - (டீஸ்டா)**

ஆமாம் அரசியல் நிர்ணயச் சட்டம் தோற்று விட்டது. நம்மைப் பாதுகாத்திட அரசியல் நிர்ணயச் சட்டம் மட்டும் போதாது வேறு உபாயங்களையும் ஆலோசிக்க வேண்டும். இதேபோல் குழுமி இருந்தவர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கும் பதில் தந்தார்கள் டீஸ்டா செட்டல்வாட்.

டீஸ்டா செட்டல் வாட் அவர்கள் தமிழக மக்கள் ஒற்றுமை மேடை என்ற பொதுத்தளத்தை தொடங்கிடத்தான் வந்தார்கள். அதைத் தொடங்கியும் வைத்தார்கள்.

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நிதானமாக, அறிவுப்பூர்வமாக பதில்களைத் தந்தார்கள். இதேபோல் பாசிசத்திற்கு எதிராக வரிந்துக் கட்டிக்கொண்டு போராடுபவர்கள்- அறிவார்ந்த எதிர்ப்புகளை முன் வைப்பவர்கள் குறைவாகவே இருக்கின்றார்கள். இவர்கள் இடையூறாது உழைக்கவும் செய்கின்றார்கள். இவர்கள் ஆற்றலாளர்கள், அறிவுப்பூர்வமானவர்கள். எனினும் பாசிசம் படருவதையும், பதவிகளில் அமருவதையும் தடுக்க இயலவில்லை.

காரணம் பாசிசத்தின் சில நடைமுறை விஷமங்களுக்கு பதிலோ எதிர்ப்போ நாம் மேற் கொள்ளும் விவாதங்களில் இடம் பெறவில்லை. அறிவார்ந்தவர்கள் ஆற்றிடும் உரையிலும் இடம் பெறுவதில்லை.

அவையாவன,

தினமும் சங்கப்பரிவாரத்தினர் நடத்தும் சாகாஸ்-அவற்றில்இளையதலைமுறையினரிடம் பரப்பப்படும் வெறுப்புப் பிரச்சாரங்கள். இந்தப் பிரச்சாரங்களில் பொய்யும் புனைந்துரைகளுமே பரப்பப்படுகின்றன. அதாவது எதிர்கால தலை முறையினரின் உள்ளங்களில் நஞ்சைப் பாய்ச்சுகின்றார்கள். அவர்கள் தங்கள் நெஞ்சங் களில் முஸ்லிம்களுக்கு எதிரான சிறுபான்மை யினருக்கு எதிரான விஷத்தைச் சுமந்தவர் களாகவே வளருகின்றார்கள்.

வாய்ப்புக் கிடைக்கும்போது முஸ்லிம்கள் மேல் அதேபோல் இதர சிறுபான்மையினர் மேல் பாய்ந்து நாள் முழுவதும் இளம் வயதில் விதைக்கப்பட்ட நஞ்சின் பிரதிநிதிகளாகவே வாழ்ந்து முடிக்கின்றார்கள். இதனால் முஸ்லிம் களும் சிறுபான்மையினரும் பெரும் இழப்பு களுக்கு ஆளாகுகின்றார்கள்.

இந்த விஷமப்பிரச்சாரத்திற்கு எதிரான திட்டங்கள் எங்கேயும் இல்லை என்பது குறிப் பிடத்தக்கது. எந்தச் சிந்தனை வட்டாரத்திலும் இது எழுப்பப்படவில்லை. இதனை எதிர் கொள்ளும் எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை.

பாசிசத்திற்கு எதிராக அறிவார்ந்த படை நடத்தும் போராளிகள் இவை குறித்தும் ஆலோசிக்க வேண்டும். விவாதிக்க வேண்டும், செயல் திட்டங்களை வகுத்து நடைமுறைப் படுத்த வேண்டும்.

நிகழ்ச்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சாதிக், முன்னாள் துணை வேந்தர் வசந்திதேவி, தீக்கதிர் ஆசிரியர் குமரேசன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் எம்.எச்.ஜவாஹிருல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

- நமது நிருபர்.



# சென்னையில் தலித் தலைவர் ஜிக்னேஷ் மிவானி

நடந்து முடிந்த குஜராத் தேர்தலில் மோடியின் பின்னடைவுக்கு மிக முக்கியமான காரணம் அங்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்றாய் ஒரே அணியில் நின்றதுதான்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் இராகுல் காந்தியின் இயலாமையால் அங்கு 6-வது முறையாக மோடியின் கட்சி ஆட்சியில் அமர்ந்து விட்டது. குஜராத் தேர்தலில் மோடியைத் திணற அடித்ததில் முன்னணியில் நின்றவர்கள் ஹர்த்திக் பட்டேல் என்ற பட்டேல் சமுதாயத்தைச் சார்ந்தவரும் ஜிக்னேஷ் மிவானி என்ற தலீத் சமுதாயத்தைச் சார்ந்தவரும்தான். இவர்கள் அனைவரையும் ஒருமுகப்படுத்தியவர் அஹ்மத் பட்டேல் அவர்கள்.

இவர்களிடம் அணிதிரண்ட இளைஞர்கள், பெண்கள் பட்டாளம் இவற்றால் மோடி திக்கு முக்காடி போனார். இதில் குஜராத் பாசிசத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களும், தலீத் பெண்களும் ஆற்றிய பங்கு அலாதியானது. இதை டீஸ்டா அவர்கள் 15-01-2018 அன்று கவிக்கோ அரங்கில் பேசும்போது குறிப்பிட்டார்.

நடந்து முடிந்த குஜராத் தேர்தலில் ஜிக்னேஷ் மிவானி சுயேட்சையாக நின்று அமோகமாக வெற்றி பெற்றார். அன்று முதல் இந்திய ஊடகங்களில் ஏன் உலக ஊடகங்களிலும் இவர் பிரபல்யமானார்.

இவர் 16-01-2018 அன்று சென்னை வந்திருந்தார். அவரை தாருல் இஸ்லாம் சார்பில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத், வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் பேராசிரியர் கே.எம்.இல்யாஸ் ரியாஜி, டாக்டர் ஹபீஸ், நாகை இம்தியாஸ் அஹ்மத், யாசர் ஆகியோர் சந்தித்தார்கள்.

### உரையும் உறையாடலும்

நிகழ்ச்சியில் ஜிக்னேஷ் மிவானி உரையாற்றினார், தொடர்ந்து உரையாடல்கள் நடைபெற்றன. போர்க் குணத்தோடு கேள்விகளுக்கு பதில் சொன்னார். ஜிக்னேஸ் மிவானியை அரங்கில் அறிமுகப்படுத்திய சகோதரி அவரை தலீத் தலைவராக அறிமுகப்படுத்தலாமா எனக் கேட்டபோது அவர் நான் ஒரு யூத் லீடர் Youth Leader. நான் இளைஞர்களின் தலைவர். தலீத் சமுதாயத்திலிருந்து வருகின்றேன் என்கின்றார். என நிகழ்ச்சியை ஒருங்கிணைந்த சகோதரி குறிப்பிட்டார்.

ஆனால் பின்னர் உரையாடலில் கலந்து கொண்ட சகோதரி ஒருவர், நீங்கள் ஒரு தலீத் தலைவர் என்பதனால் நாங்கள் பெருமையடைந்தோம். ஆனால் நீங்களோ "யூத் லீடர்" இளைஞர்களின் தலைவர் என பெருமை கொள்கின்றீர்கள். நீங்கள் அழுத்தமாக தலீத் தலைவர் எனச் சொல்லிட வேண்டும் என்றார்கள். இந்தக் கருத்தை குழுமி இருந்தவர்கள் அமோகமாக கரவொலி எழுப்பி வரவேற்றார்கள்.

### நமது ஆலோசனை

நமது சார்பில் பின்வரும் வினாவைக் கேட்டோம் குஜராத் பாசிசத்தின் Core State மையப் பகுதி. தமிழகம் பாசிசம் காலூன்றாத பகுதி. இங்கே தேர்தலில் நிற்பவர்கள் நாங்கள் பாசிசத்திற்கு எதிரானவர்கள் எனக்காட்டி விட்டால் ஓட்டுக்கள் தாராளமாக விழும்.

தமிழகத்தில் பாசிசத்தை ஒழித்து விட்டோம். ஆனால் ஜாதியத்தையும் அதனால் விளையும் வன்முறைகளையும் ஒழித்திட இயலவில்லை.

ஜாதியத்தை ஒழிக்க தந்தை பெரியாரும் டாக்டர் அம்பேத்கர் அவர்களும் மத மாற்றத்தைத்தான் பரிந்துரைத்தார்கள். நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் எனக் கேட்டோம்.



**மறுப்பு :** இதற்கு நாத்திகர் ஆகலாம், பௌவுத்த மதத்தை ஏற்கலாம் என்றார் இதையும் பலர் கரவொலி எழுப்பி வரவேற்றார்கள்.

**கருத்து :** ஜாதியத்தை ஒழிப்பதற்கு மதமாற்றத்தை குறிப்பாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் மட்டுமே முடியும். தலீத் மக்களுக்கு இஸ்லாத்தைதீர்வாக சொல்லாதவரை எவராலும் ஜாதி கொடுமைகளிலிருந்தும் தலீத் மக்களைக் காப்பாற்றிட இயலாது.

**அம்பேத்கர் :** டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வழியும் இதுவே. டாக்டர் அம்பேத்கர் அவர்களை விஞ்சி ஒருவர் தன் வாழ்நாளை தலீத் மக்களின் விடுதலைக்காக செலவிட்டார் எனச் சொல்லிடும் அளவில் எவருமில்லை. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மதமாற்றத்தைத் தான் பரிந்துரைத்தார்கள் இதற்கு அவர்களுடைய மே *31, 1936* உரை சாட்சி. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுவிடாமல் தடுத்தார்கள் டாக்டர் மூஞ்சே, பிர்லா போன்றவர்கள்.

**டி,எம்.உமர் ஃபாரூக் :** இந்த உண்மையை தன் வாழ்நாள் முழுவதும் தலீத் மக்களின் விடுதலைக்காக செலவிட்ட களப்போராளி. தீன் சுடர், டி.எம்.உமர் ஃபாரூக் (முன்னாள் டி.எம். மணி) அவர்கள் தான் எழுதிய அண்ணல் அம்பேத்கரின் மத மாற்றம் பின்னணி என்ன? என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்கள். இது வேர்கள் வெளியீட்டகத்தின் வெளியீடாக விற்பனையில் உள்ளது. விலை ரூபாய்15/- மட்டும்.

**தந்தை பெரியார் :** அதேபோல் தந்தை பெரியார் அவர்கள் இன இழிவு ஒழிய இஸ்லாம் ஒன்றே நன்மருந்து எனப் பிரகடனப் படுத்தினார்கள். தன் கடைசி மூச்சு வரைக்கும் இதனை சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

இன இழிவு ஒழிய இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களைப் பெரியார் அவர்கள் பாராட்டினார்கள். பல நேரங்களில் தன் சொந்தச் செலவில் சென்று பாராட்டினார்கள். எடுத்துக்காட்டாக அன்று சீலையம்பட்டியில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு இன இழிவை ஒழித்தவர்களை பெரியார் அவர்கள் தன் சொந்த செலவில் சென்று பாராட்டியதை குறிப்பிடலாம்.

ஆக பலநூறு ஆண்டுகளில் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தால் இஸ்லாம் ஒன்றே ஜாதீய கட்டமைப்பை உடைப்பதில் வெற்றி கண்டுள்ளது. அதனால்தான் தலீத் மக்களின் உண்மையான விடுதலையை அக்கறையுடைய வர்கள் இஸ்லாத்தை ஏற்கச்சொல்லி பரிந்துரைத் தார்கள். நூல்கள் : இதை ஜிக்னேஷ் மிவானிக்கு எடுத்து விளக்கிச் சொல்லிடும் முகமாக டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் ஜாதி ஒழிந்தது நூலையும் அதன் ஆங்கில மொழிப் பெயர்ப்பு, ஹிந்தி மொழிப்பெயர்ப்பு ஆகியவற்றையும் தாருல் இஸ்லாம் சார்பில் கொடுத்தோம்.

அதேபோல், வெளி மாநிலங்களிலிருந்தும் தலீத் மக்களின் விடுதலையில் நாட்டம் கொண்ட மக்கள் பலர் வந்திருந்தார்கள். அவர்களுக்கும் ஜாதி ஒழிந்தது நூலின் ஹிந்தி மொழியாக்கமும் ஆங்கில மொழியாக்கமும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சி கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்களின் பேரன் தாவூத் மியாக்கான் அவர்களால் நடத்தப்பட்டு வரும் காயிதேமில்லத் இதழியல் கல்லூரியின் அரங்கத்தில் நடை பெற்றது. அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

- நமது நிருபர்



# சவார்க்கரின் மன்னிப்பு கோரிய கடிதங்கள்

## பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் சவார்கர் கொடுத்த கருணை மனு - சில ஆதாரங்கள்

*வி.டி.சவார்கர் (கைதி எண். 32778) பிரிட்டிஷ் உள்துறை அமைச்சருக்கு அனுப்பிய கருணை மனு தேதி 14, நவம்பர் 1913.*

*அய்யா,*

*தங்களுடைய கருணையான பார்வைக்குக் கீழ் குறிப்பிட்ட குறிப்புகளை அனுப்பியுள்ளேன்.*

*1) 1911 ஜூன் மாதம் அந்தமான் சிறைக்கு என் கட்சியைச் சேர்ந்த மற்ற சிறைக் கைதிகளோடு வந்தபோது நான் முதன்மை கமிஷனரிடம் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு நான் "D" பிரிவில் வைக்கப்பட்டேன். D என்றால் ஆபத்தான கைதி என்று அர்த்தம். அதனால் நான் ஆறு மாதங்கள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டேன். மற்றவர்களுக் குத் தனிமைச் சிறை இல்லை.*

*அச்சமயம் கயிறு திரிக்கும் வேலை தரப் பட்டது அதனால் என் கைகள் ரத்தக் களரி யாயின. பிறகு எண்ணெய் மில்லில் வேலை செய்ய அனுப்பப்பட்டேன் அங்கு அதுதான் மிகக் கடுமையான வேலையாக இருந்தது. ஆறு மாதங்கள் என் நடத்தை மீது எவ்வித புகாரும் இல்லை. ஆறு மாதங்கள் முடிந்தவுடன் என் னுடன் வந்த மற்றத் தோழர்கள் வெளியில் அனுப்பப்படுவதுபோல் நான் அனுப்பப்பட வில்லை. அப்போதும் நான் என் நல்ல நடத்தையில் எவ்விதப் பழுதும் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டேன்.*

*2) அடுத்த கட்ட உயர்வுக்காக நான் மனு செய்தபோது நான் ஒரு ஸ்பெஷல் கைதி என்றும் ஸ்பெஷல் கைதிகளுக்கு எவ்விதப் பதவி உயர்வும் (WPA) கிடையாது என்றும் கூறப்பட்டேன். அதேசமயம் ஸ்பெஷல் (சிறப்பு) சாப்பாடு கேட்டால் நீங்கள் சாதாரண கைதிதான். அதனால் "ஸ்பெஷல்" உணவு தர முடியாது என்று கூறப்பட்டோம். நாங்கள் பிரத்தியேகமாக எவ்வித உரிமையும் இல்லாமல் இருப்பதுதான் ஸ்பெஷல் கைதியா என்பதை மேன்மை தங்கிய தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.*

*3) என்னுடன் சிறையிலிருந்தவர்களில் பெரும்பாலானோர் வெளியில் அனுப்பப்பட்ட போது என்னை மட்டும் வெளியில் அனுப்ப மறுத்துவிட்டனர். அதனைக் கேட்டதற்காக இருமுறை பிரம்பால் அடிக்கப்பட்டேன். என்னை விடுதலை செய்ய உத்தரவு வந்தும் வெளியிலிருந்து வந்த அரசியல் கைதிகள் செய்த பிரச்சனையால் என்னையும் சேர்த்து அடைத்து விட்டனர். விடுதலை செய்ய மறுத்துவிட்டனர்.*

*4) இந்தியச் சிறையிலிருந்தால் எனக்கு சிறைத் தண்டனை குறைக்கப்பட்டு விடுவிக்கப் பட்டிருப்பேன். என் குடும்பத்தினர் என்னைப் பார்க்க அனுமதித்திருப்பார்கள். அந்தமான் தீவிலிருந்து துணைக் கண்டத்திற்கு அனுப்ப டிக்கெட் (பயணச் சீட்டு) தரவும் மறுத்துவிட்ட னர். இந்தியச் சிறைகளில் உள்ள கைதிகளுக்குத் தரப்படும் வசதிகளோ, அந்தமான் சிறையிலிருப்*

பவர்களுக்குத் தரப்பட்ட வசதிகளோ எனக்குத் தரப்படவில்லை.

5) மேன்மையுள்ள தாங்கள் இந்த பார பட்சத்திற்கு முடிவு கட்டுமாறு வேண்டுகிறேன். என்னை விடுதலை செய்ய உத்தரவிடுங்கள். அல்லது இந்தியச் சிறைக்கு அனுப்பி விடுங்கள். நிரந்தரமாக இங்கே என்னை அடைத்து வைத் திருப்பது என் நம்பிக்கையைக் குலைத்து, நீண்ட நாட்கள் வாழ முடியுமா என்ற சந்தேகத் தையும் தருகிறது. எனக்கு வயது 50 ஆகி விட்டது. மற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் அனைத்தும் எனக்கு மறுக்கப்பட்ட நிலையில் என்னை எப்படியாவது இந்தியச் சிறைக்கு அனுப்பி வைக்குமாறு கோருகிறேன். அங்கிருந்தால் எனக்கு 14 ஆண்டுகள் சிறையி லிருந்ததற்கு தண்டனை குறைக்கப்படும். என் குடும்பத்தினர் என்னை வந்து பார்க்கலாம். முடிந்தவுடன் தண்டனையிலிருந்து விடுவிக் கவும் படலாம். இவை அனைத்தும் அந்தமான சிறையில் கிடையாது.

அவ்வாறு செய்ய இயலவில்லையென்றால் என்னை அந்தமான சிறையிலிருந்து மட்டும் விடுதலை செய்தால் நான் அத்தீவிலேயே எனக்கு டிக்கெட் தரும் காலம் வரை அங்கிருப்பேன். என் குடும்பத்தினரை அழைத்துச் சந்திக்கவும் முடியும்.

எனது குற்றத்திற்கு நான் மட்டுமே பொறுப் பாகக் கருத வேண்டும். சிறைக் கைதிகளின் முகாமில் சில சிறிய கைதிகளும் உள்ளனர். அவர்கள் அவ்வப்போது சிறைச் சட்டங்கள் மீறுவதும் அதற்காகச் சிறையில் உள்ள அத்தனை பேரையும் பொறுப்பேற்கவைப்பதும் தடை செய் யப்பட வேண்டும். யார் தவறு செய்கிறார்களோ, யார் சட்டத்தை மீறுகிறார்களோ, அவர்களை மட்டும்தான் தண்டிக்க வேண்டும்.

இம்மனுவை முடிக்கும் முன் மதிப்பிற்குரிய தங்களை மிகவும் வேண்டி விண்ணப்பிப்பது என்னவென்றால் என்னுடைய மனுவைப் பரி சீலித்து எனக்கு மன்னிப்பு வழங்கி, விடுதலை செய்ய உத்தரவிடுமாறு பணிவோடு இறைஞ் கிறேன்.

சமீபத்திய இந்திய நிலவரம், நான் பிரிட் டிஷ் அரசாங்கத்தின் கீழ் என்ன வேலை கொடுத் தாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். நான் பிரிட்டிஷ் அரசாங்க சட்டத் திருத்தங்களுக்குக் கீழ்ப்படிந்தும் என்னைப் போன்றோரை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் வருமாறு செய்யவும் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள இளைஞர்கள் என்னைத் தங்கள் வழிகாட்டியாகக் கொண்டிருப்பதால், அவர்களை நான் தங்கள் மேலான வழிக்கு கொண்டுவர முடியும். என்னை சிறை வைப்பதால் எவ்விதப் பலனும் இல்லை. என்னை மன்னித்து என் கருத்துகளை ஏற்று விடுதலை செய்யுமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

தங்கள் கருணை முடிவை எதிர் நோக்குகிறேன். தங்கள் கீழ்ப்படிந் துள்ள வி.டி.சவார்கர்.



குறிப்பு : பி.ஜே.பி. ஆட்சியில் இவருடைய ஒளிப்படம்தான் (Photo) நாடாளுமன்றத்தில் மகாத்மா காந்திக்கு இணையாக வைக்கப் பட்டது. காந்திஜி கொலை வழக்கில் இவரும் குற்றம் சாட்டப்பட்டவர் களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மீண்டும் சவார்க்கரின் கெஞ்சல் - கொஞ்சல்!**

சிறுபான்மையினர் பற்றி நேரு-லியாகத் ஒப்பந்தம் ஏற்பட்ட நேரத்தில், 1950 ஏப்ரல் 4 அன்று இந்து மகா சபையின் மற்றத் தலைவர் களுடன் சவார்க்கரும் 1950-ஆம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டார். சிறையிலிருந்து தன்னை விடுவிக்கும் படி 1950 ஏப்ரல் 26 அன்று, சவார்க்கர் அன்றைய பம்பாய் மாநில அரசுக்குக் கடிதம் எழுதினார்.

நிபந்தனையின்றி தன்னை விடுவிக்க அரசு தயாராக இல்லாவிட்டால் அரசு நிர்ணயிக்கும் காலம்வரை தான் எந்தவித அரசியல் நடவடிக்

கைகளிலும் ஈடுபடுவதில்லை என்று அளிக்கும் உறுதிமொழியை ஏற்று அந்த நிபந்தனையுடன் தன்னை விடுவிக்க வேண்டும் என்று சவார்க்கர் வேண்டிக் கொண்டதாக தனஞ்செய் கீர் என்பவர் கூறியுள்ளார்.

மேலும் அரசியல் களத்திலிருந்து தான் விரைவில் ஓய்வு பெற உள்ள செய்தி அனை வரும் அறிந்ததே என்றும் சவார்க்கர் தன் கடிதத் தில் குறிப்பிட்டு உள்ளார். அவரது இந்தக் கோரிக்கையை அன்றைய பம்பாய் அரசு நிராகரித்து விட்டது.

**நீதிபதியின் ஆணை!**

சவார்க்கரின் மகன் விஸ்வாஸ், பம்பாய் உயர்நீதிமன்றத்தில் செய்துகொண்ட ஹேபியஸ் கார்ப்பஸ் மனுவின்மீது, 1950 ஜூலை 13 அன்று அட்வகேட் ஜெனரல் தப்தாரி கீழ்க்கண்டவாறு நீதிமன்றத்தில் பம்பாய் மாநில அரசின் நிலையைத் தெரிவித்தார்.

"தான் எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்றும், பம்பாயில் உள்ள தனது இல்லத்திலேயே தங்கி இருப்பதாகவும் சவார்க்கர் உறுதிமொழி அளித்தால், அவரை விடுதலை செய்ய அரசு சம்மதிக்கும் என்பதைத் தெரிவிக்க அரசு எனக்கு அனுமதி அளித்துள் ளது.

சவார்க்கர் சார்பில் ஆஜரான தரப்பில் அளித்த உறுதிமொழியின்படி, எந்தவித அரசி யல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது, பம்பாயில்உள்ளதனதுவீட்டிலேயேதங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் சவார்க்கரை விடுதலை செய்ய, ஜூலை 13 அன்று நீதிபதி உத்தரவிட்டார்.

**சவார்க்கர் இந்து மகா சபையிலிருந்து விலகல்!**

"ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அரசியலில் ஈடுபடக்கூடாது என்று அரசு எனக்கு நிபந் தனை விதித்துள்ளபடியால், இந்து மகாசபையில் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் நான் விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள் ளது" என்று சவார்க்கர் 1950 ஜூலை 20 அன்று தெரிவித்துள்ளார்.

தனது விடுதலைக்குப் பின் ஆர்.எஸ்.எஸ்.-க்கு மிக நெருக்கமானவராக சவார்க்கர் ஆகிவிட் டார். ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர் விடுதலை செய்யப்பட்டபோது "நீங்கள் விடுதலை ஆனதற்கு மனமுவந்து பாராட்டுக்கள் இந்துக் கோட்பாடுகளின் காவலனாக உள்ள வீரம் மிக்க சங்கம் நீண்ட காலம் வாழட்டும்" என்று 1949 ஜூலை 15 அன்று சவார்கர் வாழ்த்துத் தந்தி அனுப்பியுள்ளார்.

சவார்க்கரின் விருப்பப்படி ஆர்.எஸ்.எஸ். வளர்ந்து இன்று வரை வாழ்ந்துதான் வருகிறது. அதற்கு மாறாக இந்து மகாசபை விரைவில் செல்வாக்கு இழந்து வீழ்ச்சி அடைந்தது. மனம் உடைந்தவராக சவார்க்கர் இறந்தார். நாற்பது ஆண்டுகளுக்கு முன் சவார்க்கர் எழுதிய இந்துத்துவாவை ஏற்றுக்கொண்டு ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர், 1963 மே 15 அன்று சவார்க்கரின் 80-ஆவது ஆண்டு பிறந்தநாள் விழாவில் பேசியது ஒன்றுதான் சவார்க்கருக்கு மன நிறைவளிப்பதாக இருந்தது.

காந்தியின் கொலைக்குப் பின் சவார்க்கர் ஆர்.எஸ்.எஸ்.-க்கு மிகவும் நெருக்கமானவர் ஆனார்.



# தொடரும் இந்துத்துவாவின் பயங்கரவாதம்...



பயங்கரவாதி சம்புலால்

இ ராஜஸ்தானை சேர்ந்த முதியவர் அப்ஸரஸ் கான். இவரை சம்புலால் என்னும் இந்துத்துவ பயங்கரவாதி வேலைக்கு அழைத்து செல்வதாக கூறி கூட்டிச் சென்று அவர் முன்னால் போய்க் கொண்டிருக்கும் போது பின்புறமிருந்து கொடூரமாக தாக்குகிறான். எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்த அவர் நிராயுதபானியாக இருந்த அவர் தாக்குதலை தாங்க முடியாமல் துவண்டு விழுந்து கதறுகின்றார். வெறி கொண்ட அம்மிருகமானது மேலும் மூர்க்கத்தனமாக ஈவு இரக்கமில்லாமல் தாக்குகின்றது. இதில் அம்முதியவர் மூர்ச்சையாகி விழுந்து விடுகிறார். அவரை அந்த பயங்கரவாதி பெட்ரோல் ஊற்றி தீவைக்கின்றார். அவர் துடிதுடித்து இறந்தே விடுகின்றார்

இப்படி கொடூரமாக கொன்றுவிட்டு அந்த இந்துத்துவ பயங்கரவாதி சொல்கிறான் லவ் ஜிஹாதில் இருந்து சிறுமியை காப்பாற்ற கொன்றதாக. அப்ஸரஸ் கான் முதியவர் ஆவார். அவருக்கு பேரக்குழந்தைகளும் உண்டு. அவர் காதலித்ததாக கூறுவது நகைப்புக்குறிய ஒன்று.

சம்புலால் என்ற பயங்கரவாதியை தற்போது காவல் துறை கைது செய்துள்ளது, இவன் ஒரு பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாகவும் தகவல். இப்படிபட்டவன் முதியவரை லவ்ஜிஹாத் என்ற பெயரில் கொன்றுள்ளான். காரணம் முஸ்லிம்களை கொன்றால் கேட்க நாதியில்லை என்ற எண்ணமே ,

இச்சம்பவம் மூலம் இந்திய முஸ்லிம்களுக்கு ஓர் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அதாவது நீங்கள் எப்போது வேண்டுமானாலும் கொல்லப் படலாம், எப்படி வேண்டுமானாலும் கொல்லப் படலாம் என்பதே அது. முஸ்லிம்களை கொன்று விட்டு அதை நியாயப்படுத்த என்ன காரணம் வேண்டுமானாலும் நாங்கள் சொல்வோம். அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதே அது.

இதற்கு முன்பும் தற்போதும் முஸ்லிம்களை கைது செய்ய இந்த தந்திரங்களை கையாண்டார்கள். சங்பரிவாரை சேர்ந்தவர்களே குண்டும் வைப்பார்கள், ஆனால் முஸ்லிம்கள் கைது செய்யப்படுவார்கள். அதுவும் ஜும்மாவிலும் நோன்பு திறக்கும் நேரத்திலும் வெடிக்கும் குண்டுகளுக்கும் முஸ்லிம்களே கைது செய்யப்படுவர். அதற்கு நேரத்திற்கு தகுந்தார் போல ஹுஜி, சிமி, லஷ்கர், டெக்கான் முஜாஹிதீன், இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயர்களில் அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப் படுவார்கள்.

சிறைக்கூடங்களில் அடைத்து சித்ரவதை செய்யப்படுவார்கள். குடும்பங்கள் அலைக்கழிக் கப்படும். ஏறத்தாழ இருபது வருடம் கழித்து நிரபராதி என விடப்படுவார். அதற்குள் அவரது குடும்பம் சின்னாபின்னமாகியிருக்கும். இளமை

தொலைந்திருக்கும். சித்ரவதைகளால் உடல் நலமிழந்து நடைபிணமாகியிருப்பார் அந்த அப்பாவி. இதில் சில அப்பாவிகள் தூக்கிலும் தொங்கவிடப்பட்டிருப்பர். அவர்களை கொல்ல நீதிமன்றங்கள் இரவு வேளையில் கூட இயங்கும். இப்படிப்பட்ட துயரங்களை முஸ்லிம் சமூகம் அனுபவித்து வரும் வேளையிலே தான் அடுத்த கட்டமாக இப்படிப்பட்ட கொடூரம் அரங்கேறி யிருக்கிறது.

இனி முஸ்லிம்களை எப்போது வேண்டு மானாலும் கொல்லலாம். கொன்ற பின் ஏதேனும் ஒரு காரணத்தை சொன்னால் போதும். ஆனால் முஸ்லிம் சமூகமோ எந்த விழிப்புணர்வுமின்றி வேடிக்கை பார்க்கிறது. எதிர்வினையாக சில இடங்களில் கண்டண ஆர்ப்பாட்டம் கோஷங்கள் என்று முடித்து கொள்கிறது.

இந்திய துணைக் கண்ட மானது பாபர், ஔரங்கசீப் போன்ற பலமான முஸ்லிம் ஆட்சியாளர்களால் நிர்வகிக்கப்பட்டதாகும். அடிமைத் தனத்திற்கு கிஞ் சிற்றும் இடம் கொடுக்காமல் போரிட்டு ஷஹீத்களான திப்பு சுல்தான், சையத் அஹமத் ஷஹீத் போன்ற வீரர்களை கொண்ட சமூகம் முஸ்லிம் சமூகம்.

அடக்குமுறைக்கும் அட்டூழியங்களுக்கும் அஞ் சாமல் பிரிட்டிஷாருக்கு எதிராக பெண்களும் ஜிஹாத் செய்த வீரமான வரலாற்றுக்கு சொந்தக் காரர்கள் முஸ்லிம்கள். பல இமாம்களும் அவர்களின் பின்னே அணிஅணியாக முஸ்லிம் சமுதாயமும் வலுவாக நின்று எதிரிகளை சின்னாபின்னப்படுத்திய சமூகம் முஸ்லிம் சமூகம்.

இன்றோ கேவலமான முறையில் கொல்லப் பட்டு வருகிறது. முஸ்லிம்கள் மாட்டுக்கறி வைத்திருந்ததாக கூறியும் கொல்லப்படலாம். இல்லாத லவ்ஜிஹாதின் பெயராலும் கொல்லப் படலாம் ஏனிந்த இழிநிலை இந்த சமூகத்திற்கு. இறைவனின் வேதத்தையும் இறைத் தூதரின் மொழியையும் முஸ்லிம்களிடையே தர்க்கம் புரியவும் பத்வா கொடுக்கவுமே மாற்றிக் கொண்டோம்.

முழுமையான வேதம் கொடுக்கப்பட்ட ஒரே சமுதாயம் முஸ்லிம் சமுதாயம். அது முஸ்லிம்களிடையே தர்க்கம் புரிய மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

முன்சென்ற நபிமார்கள் வாழ ஆசைப்பட்ட சமூகம் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் சமுதாயம். இறைவனின் மார்க்கத்தை முற்றுப் பெற செய்வதற்காக அனுப்பப்பட்ட நபி, அனைத்து மக்களுக்கும் அனுப்பப்பட்ட நபி, அவரின் போதனைகளை முஸ்லிம்களுக்குள் சர்ச்சை செய்வதற்காக மாற்றிக் கொண்டோம். எதற்காக இஸ்லாம் என்பதை மறந்து அடிப் படையான விஷயங்களை விட்டுவிட்டு நமது கவனத்தை திசை திருப்பியதாலேயே இப்படி



ஒரு இழிவு. இறைவன் கூறுகின்றான்,

"அவர்களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும் திறமையான போர் குதிரைகளையும் எந்நேரமும் ஆயத்தப்படுத்தி கொள்ளுங்கள். இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும், உங்களுடைய எதிரியையும் அச்சமடைய செய்யலாம். அவர்கள் அல்லாத வேறு சிலரையும், அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். அல்லாஹ் அவர்களை அறிவான்.

அல்லாஹ்வின் வழியில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும் உங்களுக்கு பூரணமாகவே வழங்கப்படும். உங்களுக்கு ஒரு சிறிதும் அநீதம் செய்யப்படமாட்டாது. (அல் குர்ஆன் 8:60)

- SKM

# செய்திக் கதம்பம்

## மேடையில் முழங்கும் மோடி 24/54

சென்ற வருடம் (2016) நவம்பர் 8 ஆம் நாள் மோடி பணமதிப்பு நீக்கத்தைப் பிரகடனப்படுத்தினார். அதுமுதல் கடந்த அக்டோபர் திங்கள் 2017 முடிய 24 மேடைகளில் 54 முறை பணமதிப்பு நீக்க நடவடிக்கை மாபெரும் வெற்றி எனப் பீற்றினார். ஆனால் இப்போது எந்த மேடையிலும் பேசுவதில்லை. குறிப்பாக ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத்தில் நடக்கும் தேர்தல்களில் பண மதிப்பு நீக்க நடவடிக்கை, கறுப்புபணம் இவற்றைப் பற்றிப் பேசுவதே இல்லை.

**விடுதலை 15/11/2017**




## மோடி ஆட்சிக்கு வந்தபின்

பசுவின் பெயரால் கொலை செய்யப் பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை 238. உ.பி.யில் 2015 ஆகஸ்ட் திங்களில் அஹ்லாக் என்பவர் கொலை செய்யப்பட்டதில் தொடங்கி நவம்பர் 2017 வரை 238 முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் கொலை செய்தவர்கள் யாரும் தண்டனைப் பெறவில்லை. அப்படி கைது செய்யப்பட்ட ஒரு சிலரும் கூட விடுதலைச் செய்யப்பட்டு விட்டனர். அனைத்து கொலைகளும் காவல் துறையினரின் உதவியுடனே நடந்தன. சிலக் கொலைகளை காவல்துறையினரே செய்தார்கள்.

முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற பேரறிவாளன், விடுதலை பெறுவார் என்ற நம்பிக்கை துளிர் விட்டிருக்கின்றது.

ஏனெனில் பேரறிவாளரிடம் விசாரணை நடத்திய சி.பி.ஐ. அதிகாரி தியாகராஜன் இப்படிக் கூறியுள்ளார். (விடுதலை 15/11/2017)

பேரறிவாளன் விசாரணையில் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ததில் ஒரு தலைபட்சமாக நடந்து கொண்டது உண்மைதான்.

"தன்னால் (பேரறிவாளனால்) வாங்கிக் கொடுக்கப்பட்ட பேட்டரி எந்தக் காரணத்திற் காகப் பயன்படுத்தப்பட விருக்கின்றது என்பது தனக்கு தெரியாது" எனப் பேரறிவாளன் கூறியதை நாங்கள் பதிவு செய்யவில்லை என்பதை ஒத்துக் கொண்டார்.

இராஜீவ் காந்தி படுகொலை விசாரணையில் பல குளறுபடிகள் நடந் துள்ளன. இந்தக் கொலை வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி. கே.டி.தாமஸ் கூறியதை இங்கே நினைவுக் கூற வேண்டும்.

# எஸ்.எம். முஷ்ரிஃப் சொன்ன உண்மை!

இந்தியாவை ஆரியவர்த் இந்து ராஷ்டிர மாக ஆக்கிடும் திட்டம் ஒன்று இரகசிய மாக நடந்து வருகின்றது. இந்தச் சதியினை நிறைவேற்றிட இஸ்ரேல் நாடு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் எனக் கோரப்பட் டுள்ளது. அந்தக் கோரிக்கையை இஸ்ரேல் ஒத்துக்கொண்டுள்ளது. இதில் மத்திய உளவுத் துறையே ஒரு பெரும் பங்காற்றி வருகின்றது என்ற உண்மைகளைக் கண்டுபிடித்தவர் மராட்டிய மாநிலத்தின் தீவிரவாதத் தடுப்புப் படையைச் சார்ந்த காவல்துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே. அவரை மும்பையின் நடு வீதியில் வைத்துச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். அந்த வீதிதான் ரங்கபவன் தெரு. கொலை செய்தவர்கள் அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள். இந்த ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்வதற்காக, ஏற்பாடு செய்யப்பட்டதுதான் 26/11 என்று அடையாளப் படுத்தப்படும் மும்பை தாக்குதல்.

இந்த உண்மைகளையெல்லாம் ஒன்றாய் தொடுத்து ஒரு வழக்கை உயர்நீதி மன்றங்களி லும், உச்ச நீதி மன்றத்திலும் தொடுத்தார். எஸ்.எம்.முஷ்ரிஃப் என்ற மராட்டிய காவல் துறை அதிகாரி. அவர் எழுதிய மிகவும் பிரசித் திப் பெற்ற நூல்தான் Who Killed Karkare? - The Real Face of Terrorism in India கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத் தின் உண்மை முகம். (வேர்கள் வெளியீட்டகம், 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை-1)

26/11 வழக்கை விசாரித்த நீதிமன்றங்கள் குறிப்பாக உச்ச நீதிமன்றம் மயங்கியே விட்டது. இதனை எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் உச்ச நீதிமன்றம் தோற்றுப்போய்விட்டது என்றார்கள்.

இதனை தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் என்ன நடந்தது என்றும் நாட்டில் நீதி எப்படி யெல்லாம் அலைக்கழிக்கப்படுகின்றது என்றும், ஒரு நூலை எழுதி மக்கள் மன்றத்தில் வைத் தார். அதுவே 26/11 Why Judiciary Also Failed? இதனை தமிழில் 26/11, விசாரணை நீதித் துறையும் மயங்கியது ஏன்? என தமிழில் தந்துள்ளோம் (வேர்கள் பதிப்பகம்)

இந்த நூலில் இராஜீவ்காந்தி படுகொலை யில் ஒரு முக்கிய ஆவணம் அழிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். அந்த ஆவணத்தை அழித் தவர் மத்திய உளவுத்துறையின் அப்போதைய தலைவர் எம்.கே.நாராயணன். இதனை எஸ்.எம்.முஷ்ரிஃப் தனது நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

**தலைப்பு :** திரு. இராஜீவ்காந்தி அவர் களின் படுகொலை பாதுகாக்கப்பட்ட பகுதி யில் மனித வெடி குண்டுகள் இருந்தன. மத்திய உளவுத்துறையின் அப்போதைய தலைவரான எம்.கே.நாராயணன் தவறிழைத்த மத்திய உளவுத்துறை அதிகாரிகளைக் காப்பாற்றுவதற் காக முக்கிய வீடியோ காட்சிகளை அழித்தார்.

இராஜீவ்காந்தி கொலை வழக்கின் தலைமை விசாரணை அதிகாரி திரு. கே.ராஜேந்திரன் அவர்கள் எழுதிய நூல் ராஜீவ் காந்தியைக் கொல்ல சதி. "இதில் அப்போதைய உளவுத் துறையின் தலைவரான எம்.கே.நாராயணன் அவர்கள் முக்கியமான சாட்சியத்தை அழித்த தாக குற்றம்சாட்டி உள்ளார். அது ஒரு வீடியோ பதிவு. மனித வெடிகுண்டான தாணு இராஜீவ் காந்தி அவர்கள் பேசிட இருந்த மேடைக்குப் பக்கத்திலுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்தப் பகுதியை அவர் வீடியோ பதிவிலிருந்து அழித்தார்.

இது அந்த மனித வெடி குண்டை பாதுகாக் கப்பட்ட பகுதியில் அனுமதித்த மத்திய உளவுத் துறை அதிகாரிகளைக் காப்பாற்றிடத்தான்" பக்கம் - தமிழ் நூல் 291/292 இதில் பல உண்மைகள் புதைந்துக் கிடக்கின்றன. பேரறி வாளன் விடுதலையில் அக்கறை உள்ளவர்கள் இதில் கவனம் செலுத்துகின்றார்கள் என்றே நம்புகின்றேன்.

இப்போதைய உச்ச நீதிமன்றத்தில் பேரறி வாளன் சார்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. நல்லது நடக்கும் (இன்ஷா அல்லாஹ்)

எம்.ஜி.எம்.




# மாற்றத்தை நோக்கி

நாகப்பட்டிணத்தைத் தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் சிறப்பாக "மாற்றத்தை நோக்கி" விழிப்புணர்வு கருத்தரங்கம் 14-01-2018 அன்று பரங்கிப்பேட்டையில் சிறப்பாக நடந்து முடிந்தது. அல்ஹம்துலில்லாஹ்.

முதலாவதாக இக்கருத்தரங்கத்தை கிராஅத் ஓதி துவங்கி வைத்தார் இமாம் அப்துர் ரஷீத் அவர்கள். அதன்பின் கருத்தரங்கத்தைத் தலைமையேற்று நடத்தினார்கள் பரங்கிப் பேட்டை இஸ்லாமிய ஐக்கிய ஜமாஅத்தின் துணைத் தலைவர் எம்.இப்ராஹிம் மாலிமார் அவர்கள்.

அதன்பின் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் செயல்பாடுகள் கடந்து வந்த பாதைகள் மற்றும் மாற்றத்தை நோக்கி கருத்தரங்கத்தின் நோக்கத்தை பற்றி சில நிமிடங்கள் உரையாற்றினார் இம்தியாஸ் அஹ்மத் அவர்கள். இக்கருத்தரங்கத்திற்கு முன்னிலை வகித்த சமூக ஆர்வலர் கா.மு.கவுஸ், எச்.ஷாஜஹான் நகர செயலாளர் (அம்மா அ.தி.மு.க) பரங்கிப் பேட்டை இளைஞர் அணி காங்கிரஸ் தலைவைர் எம். செய்யது அலி மற்றும் சிலர் சில கருத்துக்களை பரிமாறினார்கள்.





அதன்பின் சிறப்பு பேச்சாளர் எஸ்.ஜி.ரமேஷ் பாபு (ஒன்றிய செயலாளர், கம்யூனிஸ்ட் கட்சி) அவர்கள் உரையாற்றினார்கள்.

இதில் ஜி.எஸ்.டி. வரியைப் பற்றிய சில கருத்துக்களையும் சமுதாயத்தில் நடக்கக்கூடிய பிரச்சனைகளை பற்றியும் பேசினார். இதில் முஸ்லிம்கள் மீது சில விமர்சனத்தை முன் வைத்தார்.

அதன்பின் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் உரையின் துவக்கத்திலேயே எஸ்.ஜி.ரமேஷ்பாபு அவர்கள் முஸ்லிம்கள் மீது வைத்த குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதிலை ஆதாரத்துடன் கொடுத்துவிட்டு அதற்கான ஆதாரமாக விளங்கிய சில புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.

அதன்பின் மாற்றத்தை நோக்கி என்கிற கருத்தரங்கத்தின் மையக் கருத்தை நோக்கி பேச தொடங்கினார். இந்தியாவில் பல குண்டுவெடிப்புகளை நடத்திய இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ். பற்றியும் இந்த அமைப்பு இந்தியாவில் இந்து ராஷ்டிரத்தை அமைத்திட மேற்கொண்டு வரும் சதித்திட்டங்களை பற்றிய பெரும் தொடரை வழங்கினார்.

தற்போது நடைபெறும் பிரச்சனைகளுக்கு ஓர் நிரந்தரத் தீர்வை நோக்கி நாம் அனைவரும் ஒன்றாய் பயணிக்க வேண்டும் என்கிற மையக் கருத்துக்களை மக்களிடம் முன் வைத்து உரையை நிறைவு செய்தார். இறுதியாக ஹாரிஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பரங்கிப்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பெரியவர்கள், இளைஞர்கள், கம்யூனிஸ்ட் அமைப்பினர், மீனவர்கள் மற்றும் காங்கிரஸ் அமைப்பை சார்ந்தவர்களும் மாற்று மதத்தைச் சார்ந்த பெரியவர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சி முடிந்தபின் மாற்றத்தை நோக்கி எனும் தலைப்பிலே இதுபோன்ற பல கருத்தரங்கங்கள் நமது மண்ணிலே நடைபெற வேண்டுமென்று இந்நிகழ்ச்சியிலே கலந்துகொண்டவர்கள் பலர் கூறினார்கள்.

கருத்தரங்கத்தில் கலந்துகொண்ட பெருவாரியான மக்கள் மாற்றத்தை நோக்கி நாம் அனைவரும் ஒன்றாய் பயணிப்போம் என்கிற உறுதியோடு கலைந்து சென்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- யாசர் அரஃபாத்



பாகம் 3




# இஸ்லாமிய வங்கி முறை

இஸ்லாமிய கலாச்சாரம் வட்டியை தடை செய்த காரணத்தையும் அதனால் ஏற்படும் தீமைகளையும், சமூக சீரழிவை பற்றியும் இதுவரை பார்த்தோம்.

இந்திய வங்கிகளில் வட்டி என்பது அடிப்படை. மேலும் இவ்வங்கிகள் நேரடியாக எந்த வியாபாரத்திலும் ஈடுபடாது. இதற்கு மாற்றமாக இஸ்லாமிய வங்கிகள் வட்டியை தடை செய்து, நேரடியாக வியாபாரத்திலும் ஈடுபட அனுமதிக்கிறது. வியாபாரத்திலும் லாப நஷ்டத்தை பங்கெடுத்து ஒரு பங்குதாரர் போலவே செயல்படுவது இதன் சிறப்பு.

உதாரணமாக ஒருவர் வியாபாரம் செய்ய நாடி இந்திய வங்கியில் ஒரு பெரும் தொகையை கடனாக பெற்று வியாபாரம் ஆரம்பிக்கிறார். அவர் கடன் பெற்ற நாட்களில் இருந்தே வட்டி வசூல் செய்யப்படுகிறது. அவர் வியாபாரம் நல்லபடியாக இருக்கிறதோ இல்லையோ, லாபம் அடைகிறாரோ இல்லையோ ஆனால் வங்கிக்கு வட்டியை தவறாமல் கட்டிவிட வேண்டும்.

வங்கிக்கு அவர்களின் மீது எந்த அக்கறையும் இருக்காது. அவர்களின் பணம் வட்டியுடன் வசூலிக்கப்படவேண்டும் என்ற குறிக்கோள் மட்டுமே இருக்கும். ஒரு வேளை அவர் பணம் செலுத்த தவறினால் அவரின் சொத்துக்கள் முடக்கப்பட்டு அவமான படுத்துவது வேடிக்கையாகிவிட்டது.

இது போன்ற இன்னல்களில் இருந்து மனித சமூகத்தை காப்பதற்கு இஸ்லாமிய வங்கிமுறை (பொருளாதார திட்டம்) வைத்திருக்கும் ஒரு செயல் திட்டமே முஷாரகா.

**முஷாரகா**

முஷாரகா என்றால் கூட்டு வணிகம் என்று அர்த்தம். அதாவது வங்கியில் கடன் வாங்கி தொழில் தொடங்க விரும்புபவர்கள் வங்கியையே பங்குதாரர்களாக ஆக்கிக்கொள்ளலாம். வங்கியுடன் சேர்ந்து ஒருவரோ, ஒன்றுக்கும் மேற்பட்டவரோ சேர்ந்து இந்த வியாபாரத்தில் ஈடுபடலாம்.

வியாபார ஒப்பந்தத்தில் லாபத்தை எப்படி பிரித்துக்கொள்வது என்று தெளிவாக குறிப்பிட்டுக்கொள்ளவேண்டும். அனால் நஷ்டத்தை முதலீட்டுக்கேற்ப பிரித்துக்கொள்ளவேண்டும்.

உதாரணமாக, வங்கி முதலீடில் 50% பங்கு இருக்கிறது என்றால் லாபத்திலும் 50% கொடுக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. ஒப்பந்தத்தில் எவ்வாறு ஒப்புகொள்ளப்பட்டதோ அதை கொடுத்தால் போதும். அது 10% அல்ல 20% அல்ல 30% ஆக கூட இருக்கலாம்.

ஒரு வேளை நஷ்டம் ஏற்பட்டால் வங்கி முதலீட்டுக்கேற்ப, அதாவது 50% நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளும். அது, பங்குதாரர்களின் சோம்பல் காரணமாக நஷ்டம் இருக்கக்கூடாது. வியாபாரத்தில் ஏற்றம் இறக்கம் இருப்பது இயல்பு

**Table 3: Financing Mix (% Share)**

| | Dec-15 | Sep-16 | Dec-16 |
|---|---|---|---|
| Murabaha | 24.5 | 16.9 | 15.8 |
| Ijarah | 6.6 | 7.8 | 6.8 |
| Musharaka | 14.0 | 12.0 | 15.6 |
| Diminishing Musharaka (DM) | 31.7 | 38.5 | 34.7 |
| Salam | 5.3 | 3.3 | 4.4 |
| Istisna | 8.6 | 7.0 | 8.4 |
| Others | 9.3 | 14.5 | 14.3 |
| **Total** | **100.0** | **100.0** | **100.0** |

என்று உணர்ந்தும் ஒரு குறிப்பிட்ட லாபத்தை எல்லா மாதத்திலும் எதிர்பார்ப்பதால்தான், வியாபாரம் நஷ்டம் அடைகிறது.

வட்டி கட்ட வேண்டும் என்ற அழுத்தத்தால் குறைந்த தொகைக்கு கூட பொருட்களை விற்று நஷ்டம் அடைகிறார்கள். முஷாரகா-வில் இந்த காலத்துக்குள் இவ்வளவு சம்பாதிக்க வேண்டும் என்று நிர்பந்தம் இல்லாததால் வியாபாரமும் நல்ல முறையிலும், மன உளைச்சலுக்கும் ஆளாகாமல், அவசரம் காட்டாமல் செய்ய முடிகிறது.இதுவே இதன் வெற்றிக்கு காரணம் என்று கூட சொல்லலாம்.

**முஷாரகா எடுத்துக்காட்டு ஒப்பந்தம்**

அங்காடி தொடங்க வங்கி மற்றும் அப்துல்லா செய்யும் வியாபார ஒப்பந்தம்:

மொத்த முதலீடு : 100000 ரூபாய் (அதாவது ஒரு லட்சம்)

வங்கியின் பங்கு : 60000 ரூபாய் (அதாவது அறுபதாயிரம்)

அப்துல்லா முதலீடு : 40000 ரூபாய் (அதாவது நாற்பதாயிரம்)

வங்கியின் லாப பங்கு : 20% (இருவது சதவீதம்)

அப்துல்லா லாப பங்கு : 80% (என்பது சதவீதம்)

இந்த வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டால் முதலீட்டுக்கேற்ப பிரித்துக்கொள்ளப்படும்.

Diminishing Musarakah : இது முஷாரகா-ல் இருக்கும் இன்னொரு திட்டம். கூட்டு வியாபாரத்தில் வங்கியின் பங்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் விலக்கி கொள்ளும் முறை.

இந்த திட்டம் தான் அதிகப்படியான மக்களை கவர்ந்துள்ளது என்று ஸ்டேட் பேங்க் ஆப் பாகிஸ்தான் டிசம்பர் 2016 தனது அறிக்கையில் கூறியுள்ளது.

வங்கியின் பங்குகளை விலக்கி கொள்ளும் போது பங்குதாரரின் பங்கை உயர்த்தி கொள்ள வாய்ப்பு இருப்பது இதன் சிறப்பு. வீடு வாங்க, சிறு தொழில் தொடங்க போன்ற பல திட்டங்கள் இதன் மூலம் மக்கள் பயன் அடைகிறார்கள்.

இது எப்படி இயங்குகிறது என்று பாப்போம்.

ஒருவர் ஒரு ஆட்டோ வாங்க இஸ்லாமிய வங்கியின் இந்த திட்டத்தை நாடுகிறார். அவரிடம் 50000 உள்ளது, வங்கியிடம் 50000 கடன் கோருகிறார்.

அதனை ஏற்று வங்கியும் கடன் கொடுத்து

விடுகிறது. வங்கியும் தனது பங்குதாரரும் சம அளவில் இதில் முதலீடு செய்துள்ளதால் அந்த பொருளின் மீது உள்ள உரிமையும் சம அளவில் உள்ளது. இந்த பொருளின் வாடகையும் மூலம் கிடைக்கும் வருமானமும் சம அளவில் பங்கிட்டு கொள்ளலாம்.

வங்கியும், தனது பங்குதாரரும் இந்த ஆட்டோவிற்கு வாடகை தினசரி 100 ரூபாய் நிர்ணயித்தார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

கடன் வாங்கியவரே ஆட்டோ ஓட்டுகிறார் என்றால் அவர் தினமும் வங்கிக்கு 50 ரூபாய் வாடகை செலுத்தினால் போதும். காரணம், அவர் ஏற்கனவே அந்த ஆட்டோவிற்கு 50% உரிமை பெற்றவர்

ஆட்டோ மதிப்பு : 100000 (அதாவது ஒரு லட்சம்)

வங்கியின் முதலீடு : 50000 (அதாவது ஐம்பதியரம்)

வாடிக்கையாளரின் முதலீடு : 50000 (அதாவது ஐம்பதியரம்)

இருவரின் முதலீடும் சம அளவில் உள்ளதால் பொருளின் உரிமையும் சம அளவில் பங்கிட்டு கொள்ளப்பட்டது.

வங்கியின் உரிமை : 50%, வாடிக்கையாளரின் உரிமை : 50%

ஒப்பந்த காலம்: 3 வருடம். ( அதாவது 3 வருடத்திற்குள் ஆட்டோ வாங்கியவர் வாங்கிய கடனை வங்கிக்கு செலுத்தவேண்டும்)

சில மாதங்களில் ஆட்டோ ஓட்டியவர், தனது வருமானத்தை பெருக்கி வங்கியில் உள்ள கடனை அடைக்க 10000 (பத்தாயிரம்) செலுத்துகிறார்.

இப்போது அவரின் பங்கு 50% இருந்து 60% ஆக உயர்கிறது. காரணம் இப்போது அவரின் முதலீடு 50000 இருந்து 60000 ஆக உயர்ந்துள்ளது.

வங்கியின் பங்கு 50% இருந்து 40% குறைகிறது. காரணம் வங்கியின் முதலீடு இப்போது 50000 இருந்து 40000 ஆகி விட்டது.

அதே போல, வங்கிக்கு முதலீடு குறைந்துள்ளதால், அதற்கு வரவேண்டிய தினசரி வாடகை 50 இருந்து 40 ஆக குறையும்.

சில மாதங்களில் மீண்டும் அவர் 20000 (இருபதாயிரம்) வங்கியில் செலுத்துகிறார் என்றால் அவருடைய முதலீடு 60% இருந்து 80% ஆக உயரும். வங்கியின் பங்கு 40% இருந்து 20% ஆக குறைந்து வங்கி நாள் ஒன்றுக்கு 20 ரூபாய் வாடகையாக வசூல் செய்யும்.

இதே வழியில் அவர் வங்கியில் வாங்கிய மொத்த பணத்தையும் திருப்பு தந்துவிடும் போது அந்த பொருளின் முழு உரிமையாளராக அவர் ஆகிறார். வங்கியும் வாடகையின் மூலம் தனது வருமானத்தை பெருக்கி கொள்ளமுடிகிறது. இது போன்ற செயல் திட்டங்கள் இந்த நாட்டிற்கு வந்தால்தான் மக்கள் வட்டியில் இருந்து மீண்டு சுயமாகவும் சுதந்திரமாகவும் தொழில் செய்ய இயலும்.

அத்தகைய காலத்தை இறைவன் விரைவில் அமைப்பானாக.

**இன்ஷா அல்லா தொடரும்**

**- அபுதாஹிர்**


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள!**

**தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்.**

தொடர்புக்கு

**90955 40678**

# பொங்கல் விழாவில் பங்கேற்க வந்த தலித் மக்கள் மீது அராஜகத் தாக்குதல்

திருவண்ணாமலை மாவட்டம் காஞ்சி அருகே, பொங்கல் விழாவில் பங்கேற்க வந்த தலித் மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட துடன், அவர்களின் காலனியில் புகுந்த ஆதிக்க சாதியினர் அவர்களை விரட்டியடித்துள்ளனர். அதில் படுகாய மடைந்து மக்கள் திருவண்ணா மலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை யில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதன் விவரம் வருமாறு: திருவண் ணாமலை மாவட்டம், காஞ்சி அருகே உள்ளது ஆலத்தூர் கிராமம். இந்த கிராமத்தில் 60க்கும் மேற்பட்ட தலித் குடும்பங்கள் வசித்து வருகின்றன. கடந்த 15ஆம் தேதி மாட்டுப்பொங்கல் திருவிழாவின் போது, தலித், வேறு சாதி இளைஞர்களுக்கும் இடையே வாலிபால் விளையாடும் போது தகராறு ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து தலித் இளைஞர்கள் பொது மைதானத்தில் விளையாடக் கூடாது என ஆதிக்க வாதிகள் தடை விதித்துள்ளனர்.

ஆலத்தூர் கிராமத்தில் ஆதக்கண்டியம்மன் ஆலயம் உள்ளது. அந்த ஆலயத்தில் காலம் காலமாக தலித் மக்களும் பிற சாதி இந்துக் களும் இணைந்து வழிபடுவது வழக்கம்.

இந்நிலையில், பொங்கல் விழாவின் போது, ஆதக் கண்டியம்மன் கோயில் வடக்கயிற்றை தலித் வாலிபர் ஒருவர் எடுத்துச் சென்று அருகிலுள்ள ஒரவந்தவாடி அம்மன் கோயிலில் பூசை செய்து, மீண்டும் ஆதக் கண்டியம்மன் கோயிலில் வைத்து பூசை செய்ய வேண்டும். அதன் பின்னரே, ஊர் திருவிழா தொடங்கும் என்பது மரபு என கூறப்படுகிறது.

விளையாட்டுப் போட்டியில் இளைஞர் களுக்குள் ஏற்பட்ட சண்டையைத் தொடர்ந்து, தலித் மக்கள் கோயிலுக்கு வருவதற்கும், மாட்டுப் பொங்கல் அன்று, மாடுகளை கோயிலுக்கு அழைத்து வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், கோயில் விழாவில் மேளம் அடிப் பதற்கும், வடக்கயிறு பூசை செய் வதற்கும் தலித் மக்களுக்கு சாதி இந் துக்கள் தடைவிதித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து காணும் பொங்கலன்று, ஜன. 16 மாலை தலித் மக்கள் தங்கள் தெருவில் பொங்கல் விளையாட்டு விழா நடத்தியுள்ளனர். அப்போது, அந்தப் பகுதி பிரதான சாலையில் ஊர்வல மாக வந்தபோது, சரவெடிகளை வெடித் துள்ளனர். அப்போது, 50 க்கும் மேற்பட்டோர் காலனிக்குள் புகுந்து தலித் மக்களையும், இளைஞர்களையும் ஆவேசத்துடன் தாக்கி யுள்ளனர். இதில் பலர் படுகாயமடைந்தனர். மேலும் வீடுகள், இருசக்கர வாகனங்கள், பாத்தி ரங்களையும் அவர்கள் அடித்து நொறுக்கி யுள்ளனர்.

படுகாயமடைந்த ஆறுமுகம் மகன் பிரபு, ராஜேந்திரன் மகள் சீதா, கோபால் மகன் ஆறுமுகம் ஆகியோர் திருவண் ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இந்த கடுமையான தாக்குதல்







சம்பவங்கள் நடைபெற்ற மறுநாள், (வியாழன்), தலித் மக்கள் பால் கொள்முதல் நிலையங்களுக்கு செல்லும்போது, பால் வாங்காமல் திருப்பி அனுப்புவது, குடி நீர் வழங்காமல் துண்டிப்பது போன்ற கொடுமைகளுக்கு ஆளாகினர்.

ஆலத்தூர் கிராமத்தில் தலித் மக்கள் மீது நடத்தப்பட்ட சாதிவெறி தாக்குதலை அறிந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எம். சிவக்குமார், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டச் செயலாளர் பி.செல்வன், சிறுபான்மை மக்கள் நலக்குழு நிர்வாகி கே. அப்துல் மஜித், சி.ஐ.டி.யு மாவட்டச் செயலாளர் இரா. பாரி, நிர்வாகி ஆர். ரவி, சிபிஎம் நிர்வாகிகள் ஏ. லட்சுமணன், ஏ.நடராசன் உள்ளிட்ட பலர் வியாழனன்று (ஜன.18) கிராமத்திற்கு சென்று இதுபற்றி விசாரணை நடத்தினர்.

இந்த சம்பவம் குறித்து, கட்சியின் மாவட்டச் செயலாளர் எம்.சிவக்குமார் விடுத்துள்ள அறிக்கையில் ஆலத்தூர் கிராமத்தில் நடைபெற்ற வன்முறை சம் பவத்தில் தலித் மக்கள் மீது போடப் பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்ய வேண்டும்.

தலித் காலனியில் புகுந்து தாக்குதல் நடத்திய குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும், தலித் மக்களிடம் பால் கொள்முதல் செய்ய மறுப்பது, குடிநீர் வழங்க மறுப்பது உள்ளிட்ட சமூகப் புறக்கணிப்பு செய்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், பாதிக்கப்பட்ட தலித் மக்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

# சீக்கியர்களுக்கு விரைவில் தனித் திருமண சட்டம்

சீக்கியர்கள் திருமணம் செய்து கொள்ளும் போது அவர்களின் திருமணம் இந்து திருமண சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

டில்லியில் சீக்கியர்கள் திருமணம் செய்து கொள்ளும் போது, அத்திருமணப் பதிவுக்காக தனியே ஒரு திருமண சட்டமாக ‘ஆனந்த் திருமண சட்டம்’ எனும் பெயரில் புதிய சட்டத்தைக் கொண்டு வர டில்லி மாநில அரசு திட்டமிட்டுள்ளதாக டில்லி யூனியன் பிரதேச வருவாய்த்துறை அமைச்சர் கைலாஷ் கேக்லாட் கூறியுள்ளார்.

டில்லி சட்டமன்றத்தில் விவாதத்தின்போது, பாஜக சட்ட மன்ற உறுப்பினர் மஞ்சிந்தர்சிங் சிர்சா பேசுகையில்,

“சீக்கியர்களின் திருமணம் இன்னமும் இந்து திருமண சட்டத்தின்கீழ்தான் பதிவு செய்யப்படுகிறது. டில்லி சட்டமன்றத்தில் சீக்கியர்களை சிறுபான்மையினர் என்று ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கென தனியே திருமண சட்டம் கொண்டுவருவதற்கு அரசமைப்புச் சட்டத்தில் சிறுதிருத்தம் செய்ய வேண்டும். உறுப்பினர்கள் அதற்குரிய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தர வேண்டும்.

பவுத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள் அனைவரும் தனியான மதத்தவர்கள் ஆவர். இந்து மதத்தினர் நடத்தப்படும் விதத்திலேயே சம அளவில் மத சிறுபான் மையரும் நடத்தப்பட வேண்டும்.

அரசமைப்பின் 25ஆம் பிரிவு மத நம்பிக்கையின்படி, அவரவர் நம்பிக்கைக்கேற்ப செயல்பட உரிமை அளிப்பதுதான் உண்மையான ஜனநாயகமாக இருக்க முடியும். சிறுபான்மையர் உரிமை என்பது இந்நாட்டின் அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள உரிமையாகும்.

தீர்மானத்தை நிறைவேற்றித் தருவதன்மூலம், பவுத்தர்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் பாகுபாடு களை நீக்கிட முன்வர வேண்டும். நாடாளுமன்றத்தில் அரசமைப்புச் சட்டத்தின் 25ஆம் பிரிவு திருத்தப்பட வேண்டும். அனைத்து சட்டங்களும் மக்கள் நலனுக் காகவே செயல்படுத்தப்பட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. தீர்மானத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றிக் கொடுக்க, அவைத் தலைவர் தீர்மானத்தை அனுமதித்து அறிவிப்பு வெளியிட வேண்டும்'' என்றார்.

**டில்லி அரசு அறிவிக்கை**

ஆனந்த் திருமண சட்டத்துக் கான விதிமுறைகள்குறித்து ஒரு மாதத்தில் டில்லி அரசு வெளியிட உள்ளதாக அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**- நன்றி விடுதலை**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் - செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை - டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00
02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00
03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00
04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00
05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00
06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00
07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00
08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00
09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00
10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.